Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 13/50

දිනමුරසු වාරමලර්


ஆக.05-11, 2001

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 419

## விமானப் படைக்களத் தாக்குதல்

## நான்காவது ஈழப்போரின் ஆரம்பமா?




## காணாமல்போன ஓவியம் கண்டுபிடிப்பு

## பெயரை மாற்றும் நடிகரும் நடிகையும்

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

## கற்றது கைமண் அளவு

"எல்லா வேதங்களையும் படிக்க வேண்டும் என்றும் தனக்கு நூறு வயது வேண்டும்" என்று பரத்வாஜர் கடவுளிடம் கேட்டார். நூறு வயது ஆனதும், கடவுள் அவரிடம் வந்து "எல்லாவற்றையும் படித்தாகிவிட்டதா?" என்று கேட்டார். "இன்னும் நூறு வருடம்," 'இன்னும் நூறு வருடம்" என்று படிப்பதற்காகக் கேட்டுக் கொண்டே வந்தாராம் பரத்வாஜர். கடவுளும் அவர் கோரியபடி வரம்கொடுத்தார்.

ஒருநாள், கடவுள் பரத்வாஜரிடம் வந்து "நீ இன்னும் கற்றுக் கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறதே; கண்களைத் திறந்து பார்!" என்றாராம். அவர் கண்களைத் திறந்து பார்த்தபோது, படிக்க வேண்டியவை ஒரு மகா சமுத்திரத்தில் அலை அலையாகக் கரை மோதிக் கொண்டு வந்தனவாம்.

எனவே, எல்லாவற்றையும் மனிதன் தன் வாழ்நாளில் கற்றுமுடிக்க முடியாது என்பது அவருக்குத் தெரிந்தது. இதைத்தான் ஔவையார் 'கற்றது கை மண் அளவு! கல்லாதது உலகளவு' என்றார்.

ரீ.குணவர்த்தன, களுவாஞ்சிக்குடி.

# ஆன்மீகம்



## பித்அத் (நூதனம்)

இஸ்லாம் மார்க்கத்தின் மிகச் சரியான போதனைகளான அல்-குர்ஆன்; ஹதீஸ் இற்கு மாறாக 'அமல்'கள் என்ற பெயரில் புதிதாய் தோற்றுவிக்கப்படும் செயல்கள் தான் பித் அத் (நூதனம்) என்பதாகும்.

அதாவது, அல்குர் ஆனில் கூறப்படாத, முகம்மத் (ஸல்) அவர்கள் காட்டித்தராத இந்த 'பித்அத்'கள் பல வடிவங்களில் இஸ்லாத்திற்குள் புகுந்து மக்களை வழிகேட்டில் இட்டுச் செல்கின்றன.

"..... இன்றைய தினம் உங்கள் மார்க்கத்தை உங்களுக்காக நான் நிறைவாக்கி விட்டேன். எனது அருட்கொடைகளை உங்களுக்கு முழுமையாக்கி விட்டேன். இஸ்லாத்தை உங்களுக்குரிய வாழ்க்கை நெறியாக நான் அங்கீகரித்து விட்டேன்." (அல்குர் ஆன்-5:3)

"மிகக் கெட்ட விவகாரம் மார்க்கத்தில் புதுமையாகும். புதுமைகள் அனைத்தும் 'பித்அத்' (நூதனம்)களாகும். அனைத்து 'பித் அத்'களும் வழிகேடாகும். அனைத்து வழிகேடுகளும் நரகத்துக்கு இட்டுச் செல்லும்."(அல்ஹதீஸ்-முஸ்லிம்)

"நமது உத்தரவின்றி யாரேனும் ஒரு அமலைச் செய்தால் அது நிராகரிக்கப்படும்." (அல்ஹதீஸ்-முஸ்லிம்)

இந்த அல்குர்ஆன்; ஹதீஸ் போதனைகள் மூலம் இஸ்லாம் மார்க்கம் பூரணப்படுத்தப்பட்டு விட்டது என்பது தெளிவாகி விடுகின்றது.

எனவே, அல்குர்ஆன்; ஹதீஸ் வழிமுறைகளை மாத்திரம் பின் பற்றி நடந்து நரக வேதனையிலிருந்தும் நம்மைப் பாதுகாத்துக் கொள்வோமாக.

தொகுப்பு: அபூ அய்யாஷ் கான்-மக்கொனை.

## கிறிஸ்துவே மனுக்குலத்தின் மீட்பர்

கிறிஸ்துவின் தெய்வீகத்தில் விசுவாசம் கொள்வது எமது மீட்புக்கு இன்றியமையாதது. கிறிஸ்து ஒருவர்தான் எமது பாவங்களுக்கு தகுந்த பரிகாரம் செய்து, எம்மை மீட்டு இறைவனோடு ஒப்புரவாக்கக் கூடியவர். பாவங்கள் அளவில்லாத இறைவனிற்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றமாக இருப்பதால், அளவில்லாத கனம் உடையது. அளவற்ற கனமுடைய பாவத்திற்கு அளவில்லா பரிகாரம் வேண்டும். எனவே அது அளவில்லாத கிறிஸ்துவால்தான் முடியும்.

மனுக்குலத்தின் பெயரால் அவர் பரிகாரம் செய்ய மனிதனாக இவ்வுலகில் பிறந்தார். இவர் இரு சுபாவங்களை ஒத்தவராகவும் இருந்தார். மெய்யான கடவுள். மெய்யான மனிதன் அவையாகும். அவர் அளவில்லா பெறுமதியுடைய பாடுகளால் மரணத்தால் பரிகாரம் செய்து இறைவனுக்குத் நாம் செலுத்த வேண்டிய கடனைத் தீர்த்து, எம்மை இறைவனோடு மீண்டும் ஒப்புரவாக்கினார்.

அவர் தம் பரிகாரத்தால் மனுக்குலத்தை மீட்டாலும் அம்மீட்பில் நாம் பங்கு பெற பயனடைய நாம் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து அவரோடு ஒன்றிக்க வேண்டும். கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளாதவன் அவர் செய்த பரிகாரத்தை தனதாக்கிக் கொள்ள முடியாது. அதனால் பயன் பெற முடியாது. மீட்பும் அடைய முடியாது.

லீ. வசந்தராஜா,கல்பிட்டி.

## கவிதைப் போட்டி இல.419



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 11.08.2001

கவிதைப் போட்டி இல.419
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.416

### பரிசுக்குரிய கவிதை

### ஏமாற்றம்

கடல் ஓர சுற்றுப் பயணம்
முடிவில்லாதமைபோல்
சமாதான(மும்)...
நன்றியிலா அரசியல் மனிதனை
நம்பி நம்பி
என்றும் ஏமாறும்
நன்றியுள்ள நாய் நாம்!

எஸ்.வினோதன்–மட்/கொக்குவில்.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### நன்றியின் சின்னம்

அரசியல் வாதியாயின்
எதிர்க்கட்சியிலாவது அமர்ந்திருப்பேன்;
ஆட்டக்காரனாயின் எதிரணியிலாவது
அங்கம் வகித்திருப்பேன்...!
அநாதையானதால்-(நா)தான்
ஆயுளையே வெறுத்துவிட்டேன்!
இருப்பினும்...! நன்றியுடன்
ஒரு ஜீவன்...
இன்னும் என் பின்னே...!

செல்வி மும்தாஜ், ஏ.முத்தலிப்(.:.), அநுராதபுரம்.

### புரியாத பாஷை!?

அவன் உறவுகள் அங்கே!
அவன் மட்டும் தனியாக இங்கே!
தனிமையின் கொடுமையதை
தாங்கிக் கொள்ளவே-நாளும்
அந்திப் பொழுதிலே...
நாயோடும் அலையோடும்
ஏதோ பேசிக் கொள்கிறான்...!

புங்கையூர் நதி-கொழும்பு-12.

### துரோகிகள்

நீ விடியலைக் காணப்போகின்றாயோ
விளிம்பை நோக்கி நடக்கின்றாயோ!
நம்பிக்கைத் துரோகிகள் உன்னை
நடுவழியில் தவிக்க விட்டாலும்,
நன்றியின் பிம்பமான நான்-உன்
துணையாய் பின் தொடர்வேன்.

திருமதி தேவாமாதவன்-பண்டாரவளை.

### புகட்டுவார் யாரோ..?

மக்களைக் காப்பது பாராளுமன்றா
பாராளுமன்றைக் காப்பது மக்களா?
யாமறியோம் பராபரமே!
உன்னைக் காப்பது தொடரும் நாயா
இல்லை
நாயைக் காப்பது நீயா ந(டை)ட ராசா
விடை தெரிந்தும் தெரியாதோர் பலர்

சத்தி பிரபாகரன்-ஈவினை.

### விரைவாய் மறைந்திடு..

காற்றாட வந்தாயா..
கடற்கரை ஓரத்தில்..?
அனைவரும் கைது,
உனைத் தேடி-அவர்
கரம் திரும்ப முன்
விரைவாய் மறைந்திடு!

திக்கம் சிறிதர், (மதியழகன்) அல்வாய்.

### உப்பிட்ட உன்னை

உறவுகள்
உதறித் தள்ளினாலும்
நன்றியுடன்
நான் இருப்பேன்
ஏக்கம் ஏன்?
எஜமானே!

செல்வி ப.கலாமினி-கல்லடி.

### வழித்துணை

நாதொங்க நாயாக
காவலரே காமுகராய்
அலையும் நம் தேசத்தில்
வழித்துணைக்கு நாயை இவள்
நம்பியதில் வியப்பலை

எம்.எச்.யுனைதீன்-ஏறாவூர்.06

### துணை

வறுமை வாட்டினும்
வாழவேண்டும் என்ற
நம்பிக்கையோடு தனிவழியே
நடந்து செல்லும் என்னையே
நம்பி தொடர்ந்து வரும் இந்த
நாயின் நட்புக்கு விலையேது?

செல்வி தி.ஜெகப்பிரியா-புசல்லாவ.

### யார் துணை?

மாலையானதோ
உன் வாழ்வு
சோகமானதோ
வேளை வந்ததோ
நீ வழிபோக-நன்றியுள்ள
ஜீவன் துணையானதோ....

ஏ.ராசேந்திரன்-கீளியன் குடியிருப்பு.

### செய்தி...

முடிவிலி பயணத்தின்
முகவரியில்லாத...
வாசஸ்தலம்-தான்
பேச்சுவார்த்தை!

எஸ்.பி.பாலமுருகன்-பதுளை.

### கவிதை

அம்மணியின்
வியூகத்தை
உடைப்பதெப்படி எனும்
சிந்தனையில்
உலவுமிவர்
எதிர்க்கட்சித் தலைவரோ?

சு.புருஷோத்மன்-அக்கரைப்பற்று.

# உங்கள் பக்கம்

## அழவும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த தமிழ் வானொலி அரங்கம்

இலங்கை வானொலி தமிழ்ச் சேவை வழங்கிய இருநாள் 'வானொலி அரங்கம்' உண்மையில் தெவிட்டாத தேன்விருந்தாக அமைந்திருந்தது என்றால் அது மிகைப்படக் கூறப்பட்டதாகாது. இரு நாட்களும் நிகழ்ச்சிகளைப் பார்க்கத் திரண்ட இரசிகப் பெருமக்கள் மகிழ்ச்சிக் கடலாடினார்கள். இதற்காக முதற்கண் தமிழ் சேவைப்பணிப்பாளர் கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவர்களையும் அவருடன் இணைந்து செயலாற்றிய தமிழ் சேவை ஊழியர்களையும் இரசிகர்களின் சார்பில் பாராட்டுகிறோம்.

ஏற்கனவே தங்கள் குரல்வளம்மூலம் அறிமுகமான பாடகர்களை மேடையில் பார்த்து எல்லாரும் பூரித்துப் போனார்கள். புதிய பாடகர்கள் போட்டிக்காகப் பாடிய முறையும் தெரிவும் நன்று. இருப்பினும் பின்னணி இசை மிகவும் பலத்த சத்தத்துடன் இருந்தமையினால் எவருடைய பாடலிலும் எந்த வார்த்தையும் எவருக்கும் விளங்காமல் போய்விட்டது. இதை தொழில் நுட்பவியலாளர்களைக் கொண்டு சீர்படுத்தியிருந்தால் நலமாக இருந்திருக்கும்.

இரண்டாவது நாளன்று மேடையேற்றப்பட்ட இருநாடகங்களும் மிக மிகச் சிறப்பாக அமைந்தன. பங்குபற்றிய கலைஞர்கள் தங்கள் தங்கள் பாகங்களை உணர்ந்து நடித்தார்கள். முதல் நாடகத்தில் நொண்டிக் கிழவராகத் தோன்றி நடித்த 'சோக்கல்லோ' சண்முகம் சபையோர் அனைவரையும் கண்ணீரைச் சிந்த வைத்துவிட்டார். வேடப் பொருத்தமும் சிறப்பாக இருந்தது. அடுத்து இடம்பெற்ற சக்கடத்தார் நாடகத்தில் நடித்த ஜெயகிருஷ்ணா, ஏற்கனவே கண்ணீர் சிந்திய அனைவரையும் வயிறு குலுங்கச் சிரிக்கவைத்தார்.

போட்டியில் பங்கு பற்றிய வளரும் கலைஞர்களும் திறமைகளை வெளிப்படுத்தத் தவறவில்லை. பாராட்டுக்கள்.

இரு நாடகங்களிலும் போட்டியாளர்கள் தேர்ந்தெடுத்த பாகங்களிலும் இந்தநாட்டில் தமிழ் மக்கள் படும் துன்பங்களை யதார்த்த பூர்வமாகக் கையாண்ட முறையை அவதானிக்க முடிந்தது. இலங்கை வானொலி தமிழ்ச் சேவை இத்தனை துணிவாக இத்தகைய கருத்துக்களை மேடையில் வழங்கியதை பாராட்டாமலிருக்க முடியாது.

மொத்தத்தில் இரண்டாம் நாளன்று அனைவரையும் முதலில் அழவைத்துவிட்டு பின்னர் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வயிறு குலுங்கச் சிரிக்க வைத்து விட்டார்கள்-சிந்திக்கவும் விட்டுவிட்டார்கள்.

இரண்டாம்நாள் நிகழ்ச்சியன்று இடம் பெற்ற நாடகப்போட்டியில் பங்குபற்றிய ஐவரும் சிறப்பாகவே தங்கள் பாகங்களை மேடையில் வெளிப்படுத்தி திரண்டிருந்த மக்களின் பாராட்டுக்களைப் பெற்றனர். இருப்பினும் அந்த நடிகர்களின் நடிப்பை எடைபோட்டு தீர்ப்புக் கூறியவர்களின் அளவுகோல் சற்றுக் கோணிவிட்டது என்று சற்று வருத்தத்துடன் கூற விரும்புகிறேன்.

இது நான்மட்டும் கூறும் கருத்தல்ல. பெரும் பாலான இரசிகப்பெருமக்கள் இந்தத் தீர்ப்பினை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை.

பெரும்பாலான இரசிகர்களின் கருத்துப்படி தனியொரு நபராகத் தோன்றி தனது சகோதரனை பொலிஸார் பிடித்துப் போவதையும் தனது சகோதரியை சிலர் பாலியல் வல்லுறவுக்கு இழுத்துச் செல்வதையும், அதனால் தனக்கு ஏற்பட்ட உணர்வுகளை மிகத் திறமையாக வெளிப்படுத்திய யுவதி பார்வையாளர்கள் எல்லோருடைய கண்களையும் குளமாக்கிவிட்டார்.

கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் அடியும் உதையும் வாங்கி தனது உடல் அங்கங்கள் முழுவதையுமே நடிக்க வைத்த அந்த இளைஞனும் பார்வையாளர்களை திணறடித்து விட்டார். மண்டபம் நிறைந்திருந்த இரசிகப் பெருமக்கள் இவர்கள் இருவரையுமே முதன்மை நிலைக்குத் தெரிவு செய்துவிட்டிருந்தனர்.

தனது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி விட்டு அவர்களுடைய பிள்ளைகள் அவரை "வயோதிபர் இல்லத்துக்குச் செல்லுங்கள்!" என்று எழுதிய அறிவுரையை அறிந்து அவர் பட்டபாடு நிச்சயமாகப் பாராட்டப்பட வேண்டியதே.

தெரிவாளர்களின் தீர்ப்புக்கு பெரும்பாலான இரசிகர்களின் தீர்ப்பு முரண்பட்டிருந்ததை இத்தால் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*அமிர்தன்*,கொழும்பு-04.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: 074–514282
தொலை நகல்(Fax):– 074-513266

## தொன்று தொட்டு வரும் பேரினவாதம்

கொழும்பிலுள்ள பழைய பாராளுமன்றத்தின் முன்றிலில் சிங்களத் தலைவர்களின் சிலைகளைப் பிற்காலத்தில் வைக்கவேண்டும்; எனவே, சேர்.பொன் இராமநாதன் மற்றும் அவர் சகோதரர் சேர் பொன்.அருணாசலம் ஆகிய இருவருக்கும் கட்டடத்தின் இடப்புறமும் வலப்புறமும் எத்தனையோ வருடங்களுக்கு முன்னரே வைக்க அன்றைய சிங்களத் தலைவர்கள் ஆங்கிலேய ஆட்சியாளர்களைக் கைக்குள் போட்டு தீர்மானித்தனர் என்ற உண்மையை வெளிப்படுத்திய எஸ்.டி.எஸ். கட்டுரைத் தொடர் எழுதும் திரு.பத்மநாதன் பாராட்டுக்குரியவர். கொழும்பில் திறைசேரியில் பல வருடங்கள் பணியாற்றிய எனக்கே இந்த உண்மைப் புலப்படவில்லை.

பேரினவாதிகள் இங்கு இன்று நேற்று உருவானவர்களல்ல; வரலாற்றை உற்று நோக்கினால் உண்மை புலப்படும்.

துட்டகைமுனுவின் கதையை நாமெல்லோரும் நன்கு அறிவோம். படுக்கையில் சிறுவன் கமுனு கூனிக்குறுகிப் படுத்திருந்தானாம் ஒரு நாள். தாய் விகாரமாதேவி "ஏன் மகனே நேராகப் படுக்காமல் இப்படிக் கூனிக்குறுகிப் போய் படுத்திருக்கிறாயே...?" என்று கேட்க, "ஒரு புறம் கடலும் மறுபுறம் தமிழரும் எமது நாட்டை இறுக்கும் போது, நான் எப்படி அம்மா நீட்டி நிமிர்ந்து படுக்க முடியும்?" என்று தாயாரிடம் சொன்னதாக நான் சிறு வயதில் படித்த வரலாற்றுப் புத்தகத்தில் ஒரு பாடத்தில் காணப்பட்டது.

துட்டகைமுனு தமிழர் என்று கூறியது அனுராதபுரத்தை அரசாண்ட தமிழ் மன்னன் எல்லாளனை இந்த வஞ்சகத்தோடு வளர்ந்தவன். படையெடுத்த எல்லாள மன்னனைக் கொன்று, அநுராதபுரத்தைக் கைப்பற்றி ஆட்சி புரிந்ததாக அக்கதை கூறுகிறது.

இவ்வாறு எத்தனையோ சம்பவங்கள் இந்நாட்டின் பெரும்பான்மை சமூகத்தாரிடையே உள்ள பேரினவாதத்தைப் பறைசாற்றுகின்றனவே!

எனவே இத்தகையோரின் போக்கில் சிறுபான்மையினருக்கும் உரிமை வழங்க வேண்டும் என்ற எண்ணம் எவ்வாறு தோன்றப்போகிறது?

கோ.செல்வராசா, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

அன்பின் முரசே,

'உங்கள் வழி தனி வழிதான்' வாரந்தோறும் சுமந்து வரும் ஒவ்வொரு அம்சங்களும் சூடு, சுவை, சுவாரசியமாக உள்ளது. அதிலும் கடந்த 15ம் திகதிக்கு பிறகு ஆரம்பமான, 'உங்கள் பக்கம்' சகலருக்கும் பயனுடையதாக உள்ளது. முரசே சற்று தென் மாகாணத்தின் தெனியாய பகுதிக்கும் பார்வையைத் திசை திருப்புவாயா?

ஆர்.அஜித்குமார்,தெனியாய.

## அனைத்தும் சுவை

என் இனிய முத்தான முரசே!

வாரம் ஒரு முறை நீ மலராகப் பூத்திருக்கின்றாய். நீ பூத்திட்ட பக்கங்கள் அனைத்தும் சுவையே! அதிலும் கவிதைப் போட்டி, ஸ்போர்ட்ஸ், வாசகர் சாலை, சிறுகதை, தேன் கிண்ணம் இவை அத்தனையுமே பல உள்ளங்களை கொள்ளைக் கொண்டுள்ளன. உனது பணி மேலும் மேலும் தொடர எனது பலகோடி வாழ்த்துக்கள்.

அ.முபாறக், ஏறாவூர்-03.

தேனிலும் இனிய முரசே!

வாரத்தில் ஒரு முறை வந்து வாசகர் மத்தியில் இடம் பிடித்த இனிய முரசே, உனது இனிய சேவையை என் போன்ற வாசகர்கள் பாராட்டாமல் எப்படி இருக்க முடியும்? நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். நாட்டு நிலைமைகளையும், பரபரப்பு செய்திகளையும் தெட்டத் தெளிவாக வெளிக் காட்டி வருகின்றாய். உனது இனிய பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

எம்.ஏ.அன்வர், காங்கேயனோடை-13.

## வாசக[ர்] சாலை



என் இனிய முரசே!

நாவிற்கு சுவையான பல அம்சங்களை சுமந்து வாரத்தில் ஒரு நாள் இடம்பிடித்து, அந்த நாளை தமக்காக வசப்படுத்தி அழகுற பெயர் சூட்டி, உலகின் நாலா திசையிலும் முடுக்குகளிலும் வியாழனன்று உலாவி அதில் பொதிந்துள்ள அத்தனை சீர் சிறப்புக்களையும் உள்ளடக்கி சிறுவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை வியாழனன்று அனைவர் மனதையும் இன்ப சுகங்களை ஆக்கி, குதூகலிக்க வைக்கும் என் இனிய நண்பனே.

எத்தனை பல பத்திரிகைகள் கிழமைதோறும் வந்தாலும் உன் சேவையை போன்று வேறு எந்தப் பத்திரிகையும் உன்னைப்போல் சுமந்து வெளிச்சம் போட்டு வீறு நடை போட முடியாது. இதற்கெல்லாம் நிகர் நீயே!

உன்னை வாசிக்கும் நண்பன்.

எம்.பி.எம்.யூனுஸ், காத்தான்குடி-01.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# சமாதான முயற்சியிலிருந்து எரிக்சொல்ஹெய்ம் ஓரங்கட்டப்படமாட்டார்!

## இந்தப் பணிக்கு அவரே மிகப்பொருத்தமானவர் என நோர்வே அறிவிப்பு

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் பணியிலிருந்து எரிக் சொல்ஹெய்ம் ஓரங்கட்டப்படவில்லை என்றும் பொருத்தமான நேரத்தில் நோர்வே அதன் பணியை மீண்டும் வேகமாக முன்னெடுக்கும் என்றும் நோர்வேயின் உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் எரிக்சொல்ஹெய்மே தொடர்ந்தும் முக்கியமான பங்கை ஆற்றுவார் அவர் தொடர்பில் நோர்வே அரசாங்கம் முழு அளவிலான நம்பிக்கையை வைத்திருக்கிறது. அவரது பணியில் தமக்கு எந்தவித அதிருப்தியும் கிடையாது. அவரே இதற்கு மிகவும் பொருத்தமானவர் என அந்த நாட்டின் சிரேஷ்ட இராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியை முன்னெடுக்க நோர்வே வெளிவிவகார அமைச்சின் உயர்மட்ட குழு நியமிக்கப்பட்டிருப்பதன் நோக்கம் பிரச்சினையுடன் சம்மந்தப்பட்ட இரு தரப்பினருடனும் தொடர்புகளை வலுப்படுத்துவதற்கும் துரிதப்படுத்துவதற்குமே அன்றி அதன் மூலம் எரிக்சொல்ஹெய்ம் இந்தப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டதாக அர்த்தம் கொள்ள முடியாது எனவும் அந்த இராஜதந்திரி தெரிவித்தார்.

இது தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் தமது நாடு அறிவித்திருப்பதாக தெரிவித்த அவர் இவ்விருதரப்பிலிருந்தும் எவ்வித ஆட்சேபனையும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை என்றும் கூறினார்.

நோர்வேயின் முயற்சி எந்த வகையிலும் முடிக்கு வந்துவிடவில்லை. பொருத்தமான சந்தர்ப்பத்தில் நாம் மீண்டும் வேகமாக செயற்படுவோம் தற்போதைய அரசியல் நிலவரங்களை உன்னிப்பாக அவதானித்து வருகிறோம் எனவும் அவர் கூறினார்.

கடந்த வாரம் கட்டுநாயக்கா விமான படைத்தளம் மற்றும் விமான நிலையம் மீது புலிகள் நடத்திய தாக்குதல் குறித்து கேட்டபோது, தாக்குதல் சிவில் விமான நிலையம் வரை விஸ்தரிக்கப்பட்டது குறித்து சர்வதேச சமூகம் கவலை கொண்டிருப்பதாக தெரிவித்தார்.

இதற்கிடையில் இத்தகைய தாக்குதல்கள் இடம்பெற்றாலும் சமாதான முயற்சிகளிலிருந்து இலங்கை அரசாங்கம் பின்வாங்கப்போவதில்லை என வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

புலிகள் மிகப்பெரிய அளவில் இந்தத் தாக்குதலை நடத்தி இருந்தபோதிலும் நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்காக அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியை அரசாங்கம் கைவிடாதென கதிர்காமர் தொலைக்காட்சி பேட்டியொன்றில் தெரிவித்தார்.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் உள்ள அனைத்து பிரச்சினைகளையும் சமாதான பேச்சுவார்த்தைகள் மூலம் மட்டுமே தீர்க்க முடியும். இந்தப் பேச்சுவார்த்தைக்கான முயற்சியில் நோர்வே ஈடுபட்டுள்ளது. அந்தநாடு தொடர்ந்தும் இப்பணியை மேற்கொள்ளும். அமைதிப் பேச்சுக்களை மிகச் சுலபத்தில் கைவிட்டு விட முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

## சர்வஜன வாக்கெடுப்புக்கு ஆதரவாகவும் எதிராகவும் பிரசாரங்கள் ஆரம்பம்

இம்மாதம் 21ம் திகதி நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கும் சர்வஜன வாக்கெடுப்புக்கு ஆதரவாகவும் எதிராகவும் நாடளாவிய ரீதியில் பிரசார நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

சர்வஜன வாக்கெடுப்பை ஆதரித்து நடத்தப்படும் கூட்டங்களில் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் அமைச்சர்களும் அரசாங்கத்தை ஆதரிக்கும் கட்சி உறுப்பினர்களும் பங்கேற்று வருகின்றனர்.

அதனை எதிர்த்து நடத்தப்படும் பிரசாரங்களில் ஜே.வி.பி.யே முன்னிலையில் நிற்கின்றது. அது நாடு பூராவும் பொதுக் கூட்டங்களையும் கலந்துரையாடல்களையும் ஒழுங்கு செய்து சர்வஜன வாக்கெடுப்பில் புதிய அரசியல் யாப்பு தேவையில்லை என வாக்களிக்குமாறு மக்களை கோரிவருகிறது. தனது கருத்துக்காதரவாக தலைநகரிலும் நாட்டின ஏனைய பகுதிகளிலும் பல்லாயிரக்கணக்கான சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது.

ஐ.தே.க. சர்வஜன வாக்கெடுப்பை எதிர்ப்பதாக தெரிவித்துள்ளபோதிலும் அதற்கென பிரசாரக் கூட்டங்கள் எதனையும் இதுவரை நடத்தவில்லை. ஜனநாயகத்தை பாதுகாக்கும் அமைப்பு என்ற பெயரில் கூட்டு எதிர்க்கட்சிகளுடன் இணைந்து பாராளுமன்றத்தை திறக்குமாறு கோரிக்கை விடுப்பதிலும் ஆர்ப்பாட்டம் நடத்துவதிலுமே ஐ.தே.க. தீவிர ஆர்வம் காட்டி வருகின்றது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பான பணிகள் நடைபெற்று வருகின்றன. யாழ். மாவட்டத்தில் 462 வாக்களிப்பு நிலையங்களில் 6 இலட்சத்து 33 ஆயிரத்து 457 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வஜன வாக்கெடுப்பில் பணியாற்ற குடாநாட்டிலுள்ள அரசாங்க ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

## சுற்றுலாப் பயணிகளின் வருகை

### 60 சதவீதத்தினால் வீழ்ச்சியடையுமென அச்சம்

கட்டுநாயக்கா விமானபடைத் தளம் மீதும், விமான நிலையம்மீதும் கடந்த வாரம் புலிகள் நடத்திய தாக்குதலினால் அடுத்த 6 மாதக் காலத்திற்குள் இலங்கைக்கு வரும் உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை 50 முதல் 60 சதவீதத்தினால் குறையும் வாய்ப்பு இருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின்போது உல்லாசப் பயணிகள் எவரும் கொல்லப்படவோ, காயமடையவோ இல்லை. அனாலும் பல உல்லாசப் பயண நிறுவனங்கள் இந்தத் தாக்குதல் சம்பவம் கேள்விப்பட்டதும் இலங்கைக்கான தமது பயணத்தை ரத்துச் செய்துள்ளன.

கண்டி தலதாமாளிகையின் வருடாந்த எஸல பெரஹரா நடைபெறும் இந்தக் காலப்பகுதியில் இலங்கைக்கு அதிகூடிய லான உல்லாசப் பயணிகள் வரும் காலமாகும். இம்முறையும் நட்சத்திரக் ஹோட்டல்கள் பல ஏற்கனவே உல்லாசப் பயணிகளினால் பதிவு செய்யப்பட்டிருந்தன. ஆனால் கட்டுநாயக்கா தாக்குதலின் பின்னர் இவ்வாறான பல பதிவுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் இந்தத் தாக்குதலினால் ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் பல விமானங்களும் சேதமடைந்ததால் அந்த நிறுவனத்தின் விமானப்பயண கால அட்டவணையில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளதோடு பல சேவைகளுக்காக வெளிநாட்டு விமான சேவை நிறுவனங்களின் உதவியும் நாடப்பட்டுள்ளது.

## இரண்டு புலிகள் பலி

மன்னாரில் புலிகள் இயக்க தற்கொலையாளிகள் இருவர் வைத்திருந்த குண்டுகள் தவறுதலாக வெடித்ததில் அவர்கள் இருவரும் கொல்லப்பட்டதோடு மேலும் ஒருவர் காயமடைந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவர்களின் உடலில் கட்டி வைத்திருந்த குண்டுகள் எதிர்பாராத விதமாக வெடித்துள்ளன. உயிரிழந்தவர்களில் ஒருவர் குலேந்திரகுமார் என அடையாளங் காணப்பட்டிருக்கிறார். கமிலஷ் என்ற ஒருவர் காயமடைந்துள்ளார். உயிரிழந்த மற்றையவர் அடையாளம் காணப்படவில்லை. இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

## குடாநாட்டில் புலிகளின் தாக்குதலை எதிர்பார்த்து தமது நிலைகளைப் பலப்படுத்தும் இராணுவத்தினர்

கடந்த வாரம் கட்டுநாயக்கா விமானப்படைத் தளம்மீது புலிகள் நடத்திய தாக்குதலில் இலங்கை விமானப்படை விமானங்கள் பல அழிந்தும் சேதமாகியுமுள்ள நிலையில் எந்த நேரத்திலும் யாழ். குடாநாட்டின்மீது புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சுறுத்தலில் குடாநாட்டின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

புலிகள் ஊடுருவித் தாக்கலாம் என எதிர்பார்த்து பல இடங்களில் புதிய சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. திடீர் சோதனைகள் இடம் பெறுகின்றன. குறிப்பாக யாழ். பல்கலைக்கழக வளாகத்தை அண்மித்த பகுதிகளில் தீவிர சோதனை நடவடிக்கைகள் கடந்த நாட்களில் இடம்பெற்றன.

பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டு சிறிய பற்றைக் காடுகள் அழிக்கப்பட்டு தங்கள் நிலைகளில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

புலிகள் உடனடியாக யாழ்ப்பாணத்தை தாக்குவார்களா என்பது தொடர்பில் யாழ். மக்கள் மத்தியில் பல் வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. எவ்வாறெனினும் விமான நிலையம் தாக்கப்பட்ட ஓரிரு நாட்களாக நிலவிய பதற்றம் படையினர் மத்தியில் தற்போது ஓரளவு நீங்கியுள்ளது.

## விமானப் படைத்தளத்திற்கு பாண் விநியோகம் செய்து தமிழ் வர்த்தகர் உட்பட மூவர் சி.ஐ.டி.யினரால் கைது

கடந்த 24ம் திகதி கட்டுநாயக்கா விமானப்படைத் தளம்மீதும், விமான நிலையம்மீதும் புலிகள் நடத்திய தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்திவரும் சி.ஐ.டி.யினர் இந்தத் தாக்குதலை திட்டமிட்டதாகக் கூறப்படும் புலி உறுப்பினர்களுக்கு விமான படைத்தளம் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொடுத்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூன்று தமிழர்களை கைதுசெய்துள்ளனர்.

இவர்களில் ஒருவர் விமான நிலையத்திற்கு பாண் விநியோகிக்கும் வியாபாரி. ஏனைய இருவரும் இவருக்கு நெருக்கமாக இருந்த இளைஞர்கள்.

விமானப் படைத் தளத்திற்கு பாண் விநியோகிக்கும் நபர் அந்த படைத்தளத்திற்குள் பிரவேசிக்கக்கூடிய மார்க்கங்கள், விமானங்கள் நிறுத்தி வைக்கப்படும் இடங்கள் உள்ளிட்ட முக்கியத் தகவல்களை புலிகளுக்கு வழங்கியிருப்பதாக ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளன.

இரகசியப் பொலிஸாரினால் பாண் வியாபாரி முதலில் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் விசாரணை செய்தபோது அவர் வழங்கிய தகவல்களை வைத்து ஏனைய இருவரும் திங்கட்கிழமை இரவு கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையில் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் சி.ஐ.டி.யினர், 200 இற்கும் மேற்பட்ட விமானப்படையினரை விசாரணைக்குட்படுத்தியதுடன், அன்றைய தினம் கடமைகளிலிருந்த அனைத்து படையினரையும் விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளனர்.

இந்த விசாரணைகளின் போது கைது செய்யப்பட்ட 19 படையினரில் மூவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு எதிர் வரும் வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதில் இருவர், புலிகள் ஊடுருவியதாகக் கூறப்படும் குரான விளையாட்டு மைதானப் பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பு வேலிகளைக் கண்காணிக்க நியமிக்கப்பட்ட படையினர், மூன்றாமவர், சம்பவம் நடைபெற்றபோது பிரதான கோபுரத்திற்குப் பொறுப்பாக விருந்தனர்.

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மற்றும் விமான நிலையங்கள் மீதான புலிகளின் தாக்குதல் தொடர்பாக இதுவரை 200 இற்கும் மேற்பட்ட விமானப் படையினர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் (சி.ஐ.டி.) விசாரணைக்குட்படுத்தப்பட்ட அதேநேரம், இதுவரை 19 விமானப் படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பஸ் இருந்தும் பயணமில்லை

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் நயினாதீவுக்கு வட பிராந்திய போக்குவரத்துச் சபையினால் வழங்கப்பட்ட பஸ்ஸை சேவையிலீடுபடுத்த கடற்படையினர் இதுவரை அனுமதி வழங்க மறுத்து வருகின்றனர்.

போக்குவரத்துக்கு பெரும் சிரமம் நிலவும் இந்தத் தீவுப்பகுதிக்கு ஈ.பி.டி.பி. தீவகப் பகுதி அரசியல் பொறுப்பாளர் நடராசா மதனராசாவின் வேண்டுகோளுக்கிணங்க பஸ் ஒன்று வழங்கப்பட்டது.

சேவையில் ஈடுபட்டால் இந்த பஸ் தமது முகாம் வழியாக செல்ல வேண்டியிருப்பதால் அதன் மூலம் தமக்கு ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக கடற்படையினர் போக்குவரத்து அனுமதியை தொடர்ந்து மறுத்து வருகின்றனர்.

## ஷெல் வீச்சில் மூவர் பலி

மட்டக்களப்பு-வாழைச்சேனை கிண்ணையடி வாவியோரம் ஷெல்கள் வீசப்பட்டதில் பொது மக்கள் மூவர் பலியானதுடன் மேலும் 10 பேர் காயமடைந்தனர்.

கடந்த 28ம் திகதி காலையில் பொது மக்களின் குடியிருப்புப் பக்கம் ஷெல்கள் வந்து வீழ்ந்து வெடித்துள்ளன.

ஆறுவயதுடைய எ.கௌரி காந்த், 60 வயதுடைய கே. விஸ்வலிங்கம், 10 வயதுடைய எம்.தினேஸ் ஆகியோரே ஷெல் வீச்சுக்குப் பலியானவர்கள்.

இதேவேளை இச்சம்பவத்திற்கு முதல் நாள் வாழைச்சேனையில் இடம்பெற்ற பிஸ்டல் குழுத்தாக்குதலில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கொல்லப்பட்டார்.

## முஸ்லிம் மீடியா போரம் கண்டனம்

31 வருடங்களுக்குப் பின்னர் இஸ்ரவேலுக்கு இந்த மண்ணில் தூதரகம் ஒன்றைத் திறக்க இலங்கை அரசு இடமளித்திருப்பதைக் கண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் கவலை கொண்டுள்ளதோடு, அச்செயலை வன்மையாகக் கண்டித்துள்ளது.

முஸ்லிம் மீடியா போரத்தின் 6 ஆவது வருடாந்த மாநாட்டில் இது தொடர்பான பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

ஒவ்வொரு வருடமும் பல்லாயிரக் கணக்கான பாலஸ்தீன மக்களைக் கொன்று குவித்தும், அவர்களது வீடுவாசல்களைத் தரைமட்டமாக்கியும், பாலஸ்தீன இனத்தைப் பூண்டோடு அழிக்க இஸ்ரவேலர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

ஸியோனிசவாதத்தை மத்திய கிழக்கின் மீதான சித்தாந்தமாக்கி, அதன் மூலம் இஸ்லாத்தையும், இஸ்லாமிய கலாசாரத்தையும் அழிக்கும் நோக்குடன் ஸியோனிசவாதிகள், பைத்துல் முகத்ஸையும் (அல்-அக்ஸா) முஸ்லிம்களின் ஏனைய மதச் சின்னங்களையும் சேதப்படுத்தியும், அழித்தும் வருகின்றனர்.

இந்த நிலையில் இலங்கை மண்ணில் இஸ்ரேல் தூதரகம் அமைப்பது கண்டிக்கத் தக்கதாகுமென முஸ்லிம் மீடியா போரம் அதன் பிரேரணையில் தெரிவித்துள்ளது.

## பொது மக்கள் கடத்தப்படுவதை கண்டிக்கிறார் மட்டு. ஆயர்

மட்டக்களப்பு-கிரான் குளத்திலும், களுவாஞ்சிக்குடியிலும், அம்பாறையைச் சேர்ந்த சிங்களப் பொது மக்கள் கடத்தப்பட்டு வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து மட்டக்களப்பு-திருமலை மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தொடரும் யுத்தத்தினால் வடக்கு கிழக்கு மக்கள் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருவதோடு ஏராளமானோர் உயிரிழந்துமுள்ளனர்.

விடுதலைப் போராட்டமாயினும் அல்லது அதனை அடக்குவதற்குரிய நடவடிக்கையாயினும் யுத்தத்தோடு சம்பந்தப்படாத அப்பாவிப் பொது மக்கள் எவரும் பாதிக்கப்படக்கூடாது என்பதே சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்ட கோட்பாடாகும். யுத்தத்தில் ஈடுபடும் தரப்பார் அப்பாவிப் பொதுமக்களைக் கடத்துவதையும், கொலை செய்வதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும். கடத்தி வைத்திருப்பவர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும்.

யுத்தத்துடனும், நாளாந்த வாழ்க்கையுடனும் போராடிக் கொண்டிருக்கும் அப்பாவிப் பொதுமக்களுக்கு இன்று தேவை ஆட்கடத்தலும் அழிவுகளுமல்ல, அமைதியும் சமாதானமுமே.

மூவின மக்களும் கலந்து வாழும் கிழக்குமாகாணத்தில் இனவாதத்தைத் தூண்டும் வகையில் அன்றாடம் தொழில் செய்து பிழைப்பு நடத்தும் அப்பாவிகளைக் கடத்துவதும், கொல்வதும் சமாதானத்திற்குச் சாவுமணி அடிக்கும் செயல்களாகும்.

## தலவாக்கலை ஆசிரியர்கள்மீது நடவடிக்கை எடுப்பதில் குறுக்கீடுகள்

மலையகத்தையே உலுக்கிய தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத் தின் சம்பவத்தையடுத்து இப்பாடசாலையின் ஆசிரியர் மாணவர்களிடையிலான விரிசல்கள் மேலும் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. "நடைபெற்ற சம்பவம் கறைபடிந்த விரும்பத்தகாத சம்பவம் தான் இது குறித்து உடனடியாக தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதே வேளை மாணவர்களின் நலன்கருதி வழமையான கல்வி நடவடிக்கைகள் இடம் பெற சம்பந்தப்பட்டவர்கள் வழிவகுக்க வேண்டும்" என பெற்றோர்களும் நலன் விரும்பிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த பாடசாலையில் கற்பிக்கும் இரண்டு ஆசிரியர்கள் மாணவிகளுடன் தவறான முறையில் நடந்து கொள்ள முயற்சித்ததை பகிரங்கப்படுத்திய இரண்டு மாணவர்களுக்கு எதிராக தமது செல்வாக்கைப் பயன்படுத்தி பொலிஸாரைக் கொண்டு எச்சரிக்கை விடுத்ததோடு அந்த மாணவர்கள் இருவரையும் பாடசாலையை விட்டு நீக்கும்படியும் செய்தனர்.

இதனால் மனமுடைந்து போன மாணவர்கள் ரயில் முன்னால் குதித்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டனர். இதில் ஒரு மாணவன் உயிரிழந்ததோடு மற்றையவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

இச்சம்பவத்தையடுத்து மாணவர்கள் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகள், வகுப்பு பகிஷ்கரிப்புகள், ஆர்ப்பாட்டங்கள், காரணமாக இப்பாடசாலை மூடப்பட்டு மத்திய மாகாண கல்வி அமைச்சினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஆசிரியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதில் செல்வாக்கு மிக்க சிலரின் குறுக்கீடு காணப்படுவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## மோட்டார் சைக்கிள்கள் புலிகளால் அபகரிப்பு

சமீப சில நாட்களாக கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் பெருந்தொகையான மோட்டார் சைக்கிள்களைப் புலிகள் அபகரித்து சென்றுள்ளனர்.

கிழக்கில் தாக்குதல் ஒன்றுக்கான ஆயத்தமாக மோட்டார் சைக்கிள் சேர்க்கும் பணியில் புலிகள் ஈடுபட்டுள்ளனரோ என்று பொது மக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு, ஏறாவூர், முஸ்லிம்களுடைய ஏழு மோட்டார் சைக்கிள்களும், கல்முனை-மருதமுனை முஸ்லிம்களுக்குச் சொந்தமான ஆறு மோட்டார் சைக்கிள்களும் கடந்த ஒரு வாரகாலத்தில் புலிகளால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன. இந்தக் காலப் பகுதியில் தன்னாமுனையைச் சேர்ந்த ஒரு தமிழ் ஆசிரியரின் மோட்டார் சைக்கிளும் புலிகளால் பறித்துச் செல்லப்பட்டுள்ளது.

## அச்சுறுத்தல்

பாணந்துறை, ஹொறணை, களுபாகே பகுதியில் உள்ள தோட்ட மக்களுக்கு இரவில் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுதந் தரித்த இனந் தெரியாத கும்பலொன்றே இத்தகைய சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

விஷமிகளின் இத்தகைய நடவடிக்கைகளினால் அப்பகுதித் தமிழ்த் தோட்டக் குடியிருப்பாளர்கள் மத்தியில் அச்சமும் பீதியும் ஏற்பட்டுள்ளது.

# முரசம்

## முதலில் செய்ய வேண்டியது....

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

விடுதலைப்புலிகள்
பாரிய அளவிலான தாக்குதல்களை
மேற்கொண்டபோதும் சமாதான
முயற்சிகள் கைவிடப்படமாட்டாதென
வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன்
கதிர்காமர் கூறியிருக்கிறார்.

சமாதானத்தின் மீது தங்களுக்கு
விருப்பமில்லையென எந்தத் தரப்பும்
எப்பொழுதுமே கூறியதில்லை.
யுத்தத்தில் ஈடுபடும் இருசாராரும்
தாங்கள் அமைதியையே விரும்புவதாக
அடிக்கடி கூறுகின்றனர்.
ஆனால் யதார்த்தம் நேரெதிராக
இருக்கிறது.

தென்னிலங்கையின் அரசியல்
நெருக்குவாரங்களுக்குள்
சிக்குண்டு ஊசலாடிக்கொண்டிருந்த
சமாதான முயற்சி
கட்டுநாயக்கா விமானப்படைத்தளம்
மீதான புலிகளின் தாக்குதலுக்குப்
பின்னர் மீண்டும் அரசியல் அரங்கில்
பேசப்படும் விடயமாக
உயிர்பெற்றிருக்கிறது.

தமது பிரயத்தனத்தை கைவிடப்
போவதில்லை என்று நோர்வே
அரசும் கூறியிருக்கிறது.

கடந்த காலங்களில் நோர்வேயின்
சமாதானப் பணி சந்தித்த
நெருக்கடிகளையும் பின்னடைவுகளையும்
உலகம் அறியும்.
அதற்குக் காரணமானவர்கள்
யார் என்பதையும் யாவரும்
அறிவர்.

மீண்டுமொரு முறை நோர்வே
தனது பணியை வேகப்படுத்தினாலும்
கூட முன்னைய காலங்களில் அதை
யார் எதிர்த்தார்களோ அவர்களின்
எதிர்ப்புக்குரல் இந்தத் தடவையும்
ஒலிக்காது என்று கூறுவதற்கில்லை.

ஆதலால் சமாதானத்தின்
எதிரிகள் முதலில்
தெளிவாக அடையாளம்
காணப்பட வேண்டும்.
அவர்களது எதிர்ப்புக்கு ஈடு
கொடுக்க தம்மை தயார்படுத்திக்
கொள்ளாத வரையில் இந்த
முயற்சியில் வெற்றிகொள்ள முடியாது.

வெறுமனே ஆர்வங்களால் மட்டும்
சமாதானத்தை கொண்டு வந்து
விட முடியாது.

இன உணர்வை வெறியாக
மக்கள் மத்தியில் விதைத்துவிட்டு
அந்த மக்களிடம் விட்டுக்
கொடுப்புக்கும், தியாகத்துக்கும்
தயாராகுமாறு வேண்டுகோள்
விடுப்பது நேர்மையான செயலல்ல.

அத்தகைய மனநிலைக்கு முதலில்
அவர்களை தயார்படுத்த
வேண்டும்.

நோர்வே என்ற சொல்லைக்
கேட்டாலே ஜீரணிக்க
முடியாத பேரினவாதிகள்
இம்முறையும் அப்பாவி
மக்கள் மத்தியில்
தமது இனவாத விஷத்தைக்கக்கி
சமாதான முயற்சிக்கு சாவு மணியடிக்க
முயற்சிப்பார்கள்.

இத்தகைய ஒரு சிலரின்
வாயை அடக்காமல்
எத்தனை நோர்வேக்கள்
வந்தாலும், எத்தனை
சொல்ஹெய்ம்கள் வந்தாலும்
சமாதானம் மட்டும் வரவே வராது!

■ ■

*மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை*

*என்றென்றும்
அன்புடன்,*

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# விமானப் படைக்களத் தாக்குதல் நான்காவது ஈழப்போரின் ஆரம்பமா?

**எம்.பி.எம். பர்ஸான்**

தமிழீழ விடுதலைப் புலிகளின் பாரியளவிலான தாக்குதல் ஒன்று நடந்து முடிந்ததும் அது தொடர்பான பரபரப்பு நீங்குமுன்னர் 'இனப்பிரச்சனைக்கு சமாதானத்தீர்வு' 'சமாதான பேச்சு வார்த்தை' என்ற வார்த்தைப் பிரயோகங்களை சில நாட்களுக்கு கேட்கக் கூடியதாக இருக்கும். அதன்பிறகு மறக்கப்பட்டு கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி இடையில் இனவாத முழங்கங்கள் தலையெடுத்து இறுதியில் மீண்டுமொரு பாரிய அழிவின் பின்னர் சமாதான முயற்சி என்ற பதம் களத்தில் குதிக்கும்.

கடந்த இரு தசாப்த கால யுத்தத்தில் இந்த நிலமைகள் ஒன்றை மாற்றி ஒன்று வந்து கொண்டிருப்பதை தெளிவாக அவதானிக்க முடியும்.

எமது நாட்டு சமூக அமைப்பில் இதுவொரு பொதுவான அம்சம். ஏதேனும் ஒரு பிரச்சனை அல்லது அழிவு ஏற்பட்டால் அது நிகழ்ந்து ஓரிரு நாட்களில் மாத்திரம் அப்படியானதொரு பிரச்சனை இனிமேல் ஏற்படாமல் தடுப்பது எவ்வாறு என்ற ஆழமான ஆராய்ச்சிகள் நடக்கும். எந்த விதத்திலும் செயல் வடிவம் கொடுக்கப்படாமலே அந்த எண்ணம் கலைந்து போகும்.

கட்டுநாயக்காவில் புலிகள் நடத்திய தாக்குதல் அவர்களது முதலாவது தாக்குதலோ இறுதியானதோ அல்ல. ஆனால் இவ்வாறானதொரு பாரிய அழிவின் பிறகு இலங்கை அரசியல் அரங்கில் நடைபெறும் மற்றுமொரு முக்கிய நிகழ்வு புலிகள் தொடர்பில் வெவ்வேறு விதமான கருத்துக்களை கொண்டிருக்கும் சகல தரப்பினருமே தமது கருத்தை நியாயப்படுத்த இத்தகைய தாக்குதல் சம்பவங்களை மேற்கோள் காட்டுவார்கள்.

புலிகளை பயங்கரவாதிகள் என்றும் பயங்கரவாதத்துக்கு ஆயுதப் பிரயோகத்தைத் தவிர வேறு மாற்று வழி கிடையாது என்றும் கூறுபவர்கள் புலிகளின் பயங்கரவாதம் இந்த சம்பவத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் அதனால் போரை தொடர்ந்து நடத்தி அவர்களை தோற்கடிப்பதல்லாமல் இதற்கு தீர்வு கிடையாதென கூறுவார்கள்.

அதேநேரம் இந்த நாட்டில் இனப்பிரச்சனை என்று ஒன்று இருக்கிறது. அதனை பேச்சுவார்த்தை மூலம்தான் தீர்க்க முடியும். ஆதலால் புலிகளுடன் பேச வேண்டும் என வாதிடுபவர்களும் தமது தர்க்கம் இந்த தாக்குதல் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக கூறுவார்கள். புலிகளை யுத்தத்தில் வெற்றிகொள்ள முடியாததால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணப்பட வேண்டும் என்பதையே இந்தத் தாக்குதலும் உணர்த்துவதாகச் சொல்வார்கள்.

வரலாற்று நிகழ்வுகளில் இருந்து பாடம் படிக்க வேண்டியது தாமல்ல, மறுதரப்பினர்தான் என்று இத்தகைய இரண்டு சாராரும் நினைக்கின்றனர். அதனால் இனப்பிரச்சனை குறித்து தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளத் தேவையில்லை என்றும், மறுதரப்பே அதை செய்ய வேண்டும் என இரண்டு பிரிவினரும் கருதுகின்றனர்.

கட்டுநாயக்கா தாக்குதல் போன்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் பின்னரும் தத்தமது கருத்துக்களை வலியுறுத்த இந்த இரண்டு பிரிவினரும் வாதிடுவதை பார்க்கிறோம்.

யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தரப்பினர்கூட இதே மாதிரியான சிந்தனையைத் தான் கொண்டிருக்கிறார்கள். படைத் தரப்புக்கு மோசமான சேதத்தை ஏற்படுத்திய சந்தர்ப்பங்களில் இப்போது சமாதானத்துக்கு என்ன அவசரம் என்ற தொனியில்தான் புலிகளின் சிந்தனைப் போக்கு அமையும். சில நூறு புலிகளை கொன்று விட்டால் படைத் தரப்பின் மனோபாவமும் அப்படித்தான் இருக்கும்.

தோல்வி நிலையில் இருப்பவர்கள் தமது 'இமேஜை' உயர்த்த எதிர்காலத்தில் வெற்றிகரமான தாக்குதல் ஒன்றை தொடுக்க வேண்டும் என சிந்திக்கிறார்கள். இது விடயத்தில் வெற்றி தோல்வி எப்படிப் போனாலும் இறுதி விளைவு போர் நீடித்துக் கொண்டு செல்வது தான்.

விடுதலைப் புலிகளின் ஈழப்போராட்ட வரலாற்றில் ஒவ்வொரு கட்டத்தின் முடிவிலும் சமாதானத்துக்கான முயற்சி ஏதேனும் ஒரு வழியில் குழம்பி போர் ஆரம்பமாகி வெற்றி தோல்விகளுடன் அது தொடர்வதை அவதானிக்க முடியும்.

ஈழப்போராட்டம் ஆரம்பமானதன் பின்னர் அதன் முதலாவது கட்டம் திம்புப் பேச்சுவார்த்தையுடன் முடிவுற்றது எனக்கூறலாம். திம்புவில் சகல இயக்கங்களும் ஒன்றாகச் சேர்ந்து இலங்கை அரசாங்கத்துடன் பேசினர். இனப்பிரச்சனைக்கான சமாதான முயற்சியில் திம்பு பேச்சுவார்த்தை ஒரு முக்கிய மைல் கல்லாக அப்போது கருதப்பட்டது. சுயநிர்ணய உரிமை, தமிழ் தேசிய இனத்துக்கான அங்கீகாரம், வடக்கு கிழக்கிற்கான தமிழர் தாயக உரிமை மற்றும் மலையக மக்களின் வாக்குரிமை அடங்களான 4 முக்கிய கோட்பாடுகள் தமிழ் இயக்கங்கள் சார்பாக திம்புவில் முன்வைக்கப்பட்டது. ஆனால் ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு வகையான காரணங்களைக் கூறி இலங்கை அரசாங்கம் அவற்றை நிராகரிக்கவே மீண்டும் பழையபடி யுத்தம் ஆரம்பமானது. அதன் பின்னர் வந்த காலப்பகுதியில் ஏனைய இயக்கங்கள் புலிகளால் தடை செய்யப்பட்டு, தமிழீழ விடுதலைப் புலிகள் தனிப்பெரும் ஆயுதக் குழுவாக வளர்ச்சியடைந்தனர்.

அடுத்து இந்தியாவின் நேரடித் தலையீட்டின் விளைவாக இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதன் பின்னரான போர் பெரும்பாலும் இந்தியாவுக்கும் புலிகளுக்கும் இடையிலான போர் போலவே நடைபெற்றது.

பிரேமதாசாவை பயன்படுத்தி இந்திய அமைதிகாக்கும் படையை இலங்கையிலிருந்து அனுப்பிய புலிகள் பிரேமதாசாவையும் கொன்றனர். அதனையடுத்து சந்திரிக்கா அரசாங்கத்துடனும் சிறிதுகாலம் சமாதானம் பேசிய விடுதலைப் புலிகள் பூநகரி இராணுவ முகாமை அகற்றுதல் வடபகுதிக்கான பொருட் தடையை நீக்குதல் உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து அவை நிறைவேறாத பட்சத்தில் திருகோணமலை துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கடற்படை கப்பலைத் தாக்கி மூன்றாம் கட்ட ஈழப்போரை தொடங்கினர். இதுவே இலங்கை வரலாற்றில் மிகமோசமான அழிவுகளை சந்தித்த யுத்தமாகவும் அமைந்தது. இலங்கை அரசாங்கம் வடபகுதியில் அதன் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த படைத்தளங்கள் பலவற்றை புலிகளிடம் இழந்திருந்தது. பத்தாயிரத்திற்கும் அதிகமான படையினரை பலிகொடுத்திருந்தது. புலிகளும் முன்னைய காலங்களைவிடவும் கூடுதலான இழப்புக்களை மூன்றாவது கட்ட போரிலேயே சந்தித்தார்கள். தமது முழுமையான ஆளுகையின் கீழிருந்த யாழ்ப்பாண நகரத்தை இலங்கை அரசாங்கப்படைகளிடம் இழந்ததுடன் இவ்வாறான பல தற்காலிக பின்னடைவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

இத்தகையதொரு பின்னணியில்தான் முன்னெப்போதும் இல்லாத அளவு சர்வதேச கவனம் இலங்கை மீது திரும்பியது. இதன் விளைவாகவே நோர்வேயின் சமாதான முயற்சி ஆரம்பிக்கப்பட்டதும் அரசாங்கத்துக்குள் இருக்கும் பேரினவாத சக்திகளின் கடும் அழுத்தத்துக்கு மத்தியில் எரிக் சொல்ஹெய்ம் ஓரங்கட்டப்பட்டதும் குறுகிய காலத்துக்குள்ளேயே நடந்து முடிந்தது.

தமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் புலிகளில் சமாதான சமிக்ஞையை வெளியிட்ட முன்னைய எல்லா சந்தர்ப்பங்களை விடவும் இம்முறை நோர்வே மத்தியஸ்துடனான முயற்சிக்கு அவர்கள் காட்டிய ஆர்வம் கவனத்தில் கொள்ளத்தக்கது. தொடர்ச்சியாக 4 மாதங்கள் ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். கடந்த ஆண்டு அமைச்சர் சீ.வி.குணத்தின மீதான தற்கொலைத் தாக்குதலின் பின்னர் தலைநகரில் பாரிய தாக்குதல்கள் எதனையும் நடத்தாமல் ஒரு வருடத்துக்கும் அதிகமான காலம் அமைதி காத்து வந்தார்கள். ஆனால் எந்த வித முன்னேற்றமுமின்றி சமாதானம் அதன் ஆரம்ப நிலைக்கே வந்து சேர்ந்துள்ளது.

நோர்வேயின் சமாதான முயற்சி நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் தென்னிலங்கையின் சில அரசியல் தலைவர்கள் நடந்து கொண்டவிதம் இந்த நாட்டுக்கு சமாதானம் வெகு தூரத்திலேயே இருக்கிறது என்பதை தெளிவாக உணரப் போதுமானதாக இருந்தது. சொல்ஹெய்மை வெளியேற்றிய அரசாங்கம் அத்தோடு நின்றுவிடாமல் சமாதானப் பிரயத்தனம் செத்துப்போகும் வரை மௌனம் சாதித்தது.

சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் இருக்கும் தேசியவாத உணர்வை பேரினவாதமாக முற்றவைத்து அம்மக்களை ஒரு வகை போதைக்குள் தள்ளி நோர்வேகாரர்களை எதிரிகளாக நோக்கும் மனப்பான்மைக்கு சிங்கள சமூகத்தை இட்டுச்செல்லும் வரை சிலரது வாய்களுக்கு ஓய்வே இருக்கவில்லை.

ஆனால் அதன் மூலமாக ஏற்படப்போகும் ஆபத்தான எதிர்விளைவு குறித்து இனவாதம் பேசிய எவரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை. தமது நிலைப்பாட்டின் முடிவு அபாயகரமானதென அவர்கள் புரிந்து வைத்திருந்தாலும் கூட அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள இனவாதத்தை விதைப்பதில் இருக்கும் சாதகத் தன்மையை இவர்கள் பெரிதாகக் கருதினார்கள்.

இத்தகையதொரு நிலமை குறித்து புலிகள் பலவாறு சுட்டிக்காட்டிய போதும் அதை கடைசி வரையில் சம்பந்தப்பட்டவர்கள் உணரவில்லை.

புலிகள் எத்தனை வகையான பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தாலும்கூட இந்த யுத்தத்தின் பிரதான பங்குதாரர் என்ற அடிப்படையில் யுத்தம் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களின் போது புலிகளின் கருத்துக்களை பரிசீலிப்பதை அரசாங்கத்தினால் தவிர்க்க முடியாது.

கட்டுநாயக்கா விமானப்படைத்தளத் தாக்குதலோடு மீண்டும் ஒரு பாரிய நஷ்டத்தை அரசாங்கம் சந்தித்திருக்கிறது. இது அரசதரப்பு சமாதானத்தின் மீது காட்டிய பாரா முகத்துக்கான எச்சரிக்கை வேட்டாக இருந்தால் இன்னுமொரு சந்தர்ப்பம் கிடைக்கும். ஆனால் 4வது ஈழப்போரின் ஆரம்பத் தாக்குதலாக இருக்குமென்றால் எதிர்காலம் மிக மிக பயங்கரமானது.

கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தின் மீதான தாக்குதலுக்கு புலிகள் பயன்படுத்திய அதி நவீன ஆயுதங்கள் குறித்து பாதுகாப்பு உயரதிகாரிகள் அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர். "சத்தம் எழுப்பாது, ஆனால் தாக்குதலுக்கு உள்ளாகும் எந்தவொரு பொருளையும் விரைவில் தீப்பிடித்து எரியச் செய்யும் இத்தகைய ஆயுதங்களை தான் கண்டதில்லை" என்று கட்டுநாயக்கா சம்பவத்தை நேரில் கண்ட விமான நிலைய அதிகாரி ஒருவர் பத்திரிகைகளுக்கு தெரிவித்திருந்தார்.

கடந்த காலத்தில் தாம் கடைபிடித்த போர் நிறுத்தத்தின் போது புலிகள் நவீன ரக ஆயுதங்கள் பலவற்றை கப்பல் மூலம் கொண்டு வந்து சேர்த்திருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. சமாதான முயற்சிகள் குழம்பும் பட்சத்தில் பாரிய அழிவை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் என்று சகல தரப்புக்களுமே கட்டியம் கூறின. அது நிகழ ஆரம்பித்துள்ளது. இந்தத் தாக்குதலை புலிகள் இத்தோடு நிறுத்திக்கொள்வார்களா அல்லது யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் முயற்சியில் இறங்குவார்களா என்ற கேள்வி இன்று பரவலாக எழுப்பப்படுகின்றது. ஆனால் குறிப்பிட்ட ஓர் இலக்கு தாக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு குவிந்திருக்கும் சமயம் அதை தாக்க முயல்வது புலிகளின் வழமையான பாணியல்ல. ஒருவேளை அவர்கள் அதற்கென பிறிதொரு திட்டத்தை வைத்திருக்கலாம். மற்றொரு சந்தர்ப்பத்துக்காக காத்திருக்கலாம்.

இனிமேலாவது போரை முடிவுக்குக் கொண்டு வர யதார்த்தமான செயற்பாடுகளில் இறங்க அரச தரப்பு தவறினால் நிலைமை அவர்களின் கைமீறிப் போவதை தடுக்க முடியாமல் போகும். தென்னிலங்கையில் பாரதூரமான அரசியல் நெருக்கடி நிலவுகிறது. பாராளுமன்றம் முடப்பட்டுள்ளது. சர்வஜன வாக்கெடுப்புக்கான நாள் அறிவிக்கப்பட்டிருக்கிறது. எதில் ஆரம்பித்து எதில்போய் முடிப்பது என்ற தெளிவின்றி இரண்டு பிரதான அரசியல் சக்திகளும் அதிகாரத்தை நோக்கி காய் நகர்த்துகின்றன. இந்நிலையில் தம்மைச் சுற்றி நடக்கும் எந்த நிகழ்வையும் ஆட்சியை நோக்கிய பயணத்துக்கு எப்படி பயன்படுத்தலாம் என்பதை மட்டுமே ஐ.தே.க. சிந்திக்கிறது. இத்தகைய சந்தர்ப்பங்களை பயன்படுத்தி தமது அரசியல் எதிராளியை எப்படி வீழ்த்தலாம் என்றே அரச தரப்பு சிந்திக்கிறது.

கட்டுநாயக்காவுக்கு புலிகள் வந்தது ஐ.தே.க.வின் ஊர்வலத்தின் ஊடாகத்தான் என்று கதை சொன்னார்கள் அரசாங்க அமைச்சர்கள் பலர். அரசாங்கம் விமான நிலையத்தை பாதுகாக்கத் தவறிவிட்டது என ஐ.தே.க தலைவர்கள் கூறினர். ஆனால் இந்த இரண்டு தரப்பில் இருந்தும் இத்தகைய தாக்குதல்கள் ஏன் நடக்கின்றன என்ற கேள்வி எழுந்ததாகத் தெரியவில்லை.

இப்போது புலிகள் பலமான நிலையில் இருக்கிறார்கள். அதனால் இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்து புலிகளுக்கு பெருஞ்சேதத்தை ஏற்படுத்திய பின்னர் சமாதானம் குறித்து சிந்திக்கலாம் என்ற வழமையான எண்ணக்கரு இம்முறையும் அரச தரப்பில் ஏற்படுமென்றால் ஆரம்பமாகப்போகும் நான்காவது கட்ட ஈழப்போருக்கு வடக்கு-கிழக்கு மட்டுமல்ல தலை நகரும் தன்னை தயார்படுத்திக்கொள்ள வேண்டி ஏற்படும். ஏனெனில் அண்மைய சம்பவங்களைப் பார்க்கும் போது கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் புலிகளின் வலையமைப்பு எத்தனை பலம் வாய்ந்ததாக இருக்கின்றது என்பதை உணர முடியும். அதனால் வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளோடு மட்டும் போரை மட்டுப்படுத்தி தென்பகுதியை சொர்க்க புரியாக வைத்திருக்கும் கனவு இனிமேல் பலிக்காது.

கொழும்பில் அரசாங்கத் தலைவர்களின் பாதுகாப்பு பெரும் கேள்விக்குறியாகியுள்ளது. கடந்த ஒரு சில வாரங்களாக அமைச்சரவைக்கூட்டம் வெவ்வேறு இடங்களில் நடத்தப்படவேண்டிய அளவுக்கு எந்தவொரு இடமும் உத்தரவாதமற்ற தன்மையை கொண்டிருக்கிறது.

படைத்தரப்பின் உளவியல் பலம் மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. விமானப்படையினரின் தாக்குதல் பலம் கணிசமாக குறைந்திருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக தொடர்ந்தும் போரை முன்னெடுத்துச் செல்லும் அளவு பொருளாதார வசதி இல்லை. கட்டுநாயக்காவில் ஏற்பட்ட நஷ்டத்தின் பாதிப்பு இன்னும் ஓரிரு நாட்களில் பொது மக்களுக்கு உணர்த்தப்படும். இந்நிலையில் புலிகள் மற்றுமொரு யுத்த கட்டத்துக்குள் பிரவேசிப்பதை தவிர்க்க உடனடியாக சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதைத் தவிர வேறு வழி கிடையாது.

தாம் பலமான நிலையில் இருந்தபோதும் அரசாங்கம் சில விட்டுக் கொடுப்புக்களுடன் சமாதான முயற்சியில் நாட்டம் கொள்ளுமாயின் அதற்கு ஏதுவான சமிக்ஞையை புலிகள் வெளியிடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியும். ஏனெனில் முன்னைய காலங்களில் புலிகள் யுத்த நிறுத்தம் மேற்கொண்ட போதெல்லாம் அரச தரப்பு சொன்ன காரணம் தங்களை பலப்படுத்தவே புலிகள் அவ்வாறு செய்கிறார்கள் என்பதுதான். அது உண்மையாகக் கூட இருக்கலாம். ஆனால் யுத்தம் தொடர்ந்து நடைபெறும் போதும் புலிகள் பலமான இராணுவ அமைப்பாகவேதான் இருந்து வருகிறார்கள். ஆதலால் போர் நிறுத்தத்தின் மூலம்தான் தமது பலத்தை பெருக்க வேண்டும் என்ற கட்டாயத் தேவை புலிகளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. எப்படியிருந்தாலும் புலிகளின் கடந்த போர் நிறுத்தத்தின்போது பரஸ்பர நம்பிக்கையீனம் சந்தேகமும் இரு தரப்பிடமுமே தாராளமாகக் கணப்பட்டது. புலிகள் இரகசியமாக ஆயுதம் கொண்டு வந்தார்கள். அரசாங்கம் பகிரங்கமாகவே கொண்டு வந்து இறக்கியது.

பரஸ்பரம் குற்றஞ்சாட்டிக்கொண்டார்கள். இரண்டு சாராரும் எதிர்பார்த்தது போன்றே மீண்டும் தாக்குதல்கள் ஆரம்பமாகின. இதனை நான்காவது கட்ட ஈழப்போராக தொடரச் செய்வதா அல்லது கட்டுநாயக்காவோடு நிறுத்தி சமாதானத்தின் திசையில் காலடி எடுத்து வைப்பதா என்ற தெரிவு அரசாங்கத்தின் முன்னிலையில் இருக்கிறது. எதை தேர்ந்தெடுக்கப் போகிறார்கள் என்று கூறுவதற்கில்லை.

தெரிவு யுத்தமாக இருக்குமானால் முடிவு வரலாறு காணாத அழிவாக இருக்கும் என்பதை மட்டும் கூறமுடியும்.

பயங்கரவாதத்தை பயங்கரவாதத்தால் அழிக்க வேண்டும் என்ற கோட்பாடு இனப்பிரச்சனையோடு பிண்ணிப் பிணைந்த, ஆட்சியாளர்களின் வரலாற்றுத் தவறுகளால் உருவான ஒரு போராட்டத்தில் செல்லுபடியாகுமா என்ற கேள்வி சிந்திக்கப்படவேண்டியது. அதனால் தொடர்ந்தும் புலிகள் அப்படிச்செய்தார்கள், இப்படிச் செய்தார்கள் என்று கூறிக்கொண்டிருப்பார்களானால் எல்லோரும் தேவையெனக் கூறும் சமாதானம் என்றைக்குமே கிடைக்காமல் போகுமோ என்ற அச்சம் நிலவுகிறது.

அமைதியையும் சமாதானத்தையும் அவமானமான ஒன்றாகக் கருதும் நிலை மாறும் வரை இந்தப் பிரச்சனைக்கான தீர்வு கிட்டாது.

தத்தமது ஆயுத பலம் மீதான நம்பிக்கை நாட்டை சுடுகாடாக மாற்றுவதைத் தவிர வேறெதனையும் மீதப்படுத்தாது என்பதை யார் சிந்திக்கிறார்கள்?

கடந்த மாதம் பூநகரியில் உள்ள புலிகளின் இலக்குகள் மீது இலங்கை விமானப்படையின் விமானங்கள் தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதல்கள் குறித்து அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகள் அதிருப்தி தெரிவித்தன. இதனால் இந்நாடுகளின் தூதுவர்களை அழைத்து விளக்கம் சொல்ல வேண்டிய நிலைக்கு இலங்கை அரசாங்கம் தள்ளப்பட்டது.

கொழும்பில் உள்ள வெளிநாடுகளின் தூதுவர்களை வரவழைத்து பூநகரியில் நடத்திய தாக்குதல் தொடர்பாக விளக்கியபோது அதில் கலந்துகொண்ட அமெரிக்க தூதுவர் இப்படி கூறினார்.

"ஒரு நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகள் எவ்வாறு அமையவேண்டும் என ஆலோசனை கூறும் உரிமை எமக்கு இல்லாவிட்டாலும் வன்முறையின் ஊடாக வன்முறை வளரும் என்பதை மாத்திரம் உறுதியாகச் சொல்லலாம்." ■

# அண்டை மண்டலத்தில்....


கானகன்

## சிவாஜி-ஒரு சகாப்தம்

தமிழ் திரைப்பட உலகில் யாரும் எண்ணிப் பார்க்க முடியாத சிகரங்களைத் தொட்ட நடிகர் திலகம் சிவாஜி கணேசன் காலமாகி விட்டார். அவருடைய மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பு என்பது உண்மைதான். ஆனால் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகவே திரைப்படத்துறையில் இருந்து அவருடைய ஆதிக்கம் குறைந்து விட்டது என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும். இயக்குநர் பாரதிராஜா உருவாக்கிய 'முதல் மரியாதை' படத்துக்குப் பிறகு சிவாஜி என்ற மிகப்பெரிய நடிகனை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்பது யாருக்கும் தெரியாமல் போய் விட்டது என்பதுதான் உண்மை. காதலை மட்டுமே அதுவும் நிஜ வாழ்க்கைக்கு எந்த வகையிலும் சம்பந்தம் இல்லாத காதலை மட்டுமே, படமாக்கிக் கொண்டிருக்கும் தமிழக இயக்குநர்களுக்கும் படத்தயாரிப்பாளர்களுக்கும் அவர் பயன்படாமல் போய்விட்டார். ஆனால் இன்னும் எத்தனையோ காலத்துக்கு அவருடைய நடிப்புக் குறித்தும், அது மற்றவர்கள் மீது ஏற்படுத்திய தாக்கம் குறித்தும் திரைப்படத் துறையினரும் ரசிகர்களும் சிலாகித்துப் பேசிக் கொண்டுதான் இருப்பார்கள்.

விழும்புரம் சின்னசாமி பிள்ளை கணேசன், அவர் காலத்தில் திரைப்படத்துக்கு வந்த எல்லோரையும் போல நாடகத்துறையில் இருந்து வந்தவர். சிறுவனாக இருந்த காலத்திலேயே நாடகக் கம்பெனியில் சேர்ந்து அவர் நடிப்பின் சகல அம்சங்களிலும் நல்ல பயிற்சி பெற்றிருந்தார். வி.சி.கணேசன் என்பது அவருடைய இயற்பெயர். அறிஞர் அண்ணா எழுதிய 'சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்' நாடகத்தில் சிவாஜி வேடம் ஏற்று கணேசன் நடித்ததை வியந்து போன தந்தைப் பெரியார் சிவாஜி கணேசன் என்று பட்டம் சூட்டினார். அதுவே நிலைத்துப் போனது.

சிவாஜி கணேசனின் திரைப்பட அறிமுகம் 1952-ல் 'பராசக்தி' திரைப்படத்தில் ஏற்பட்டது. அழுகி முடைநாற்றம் எடுக்கும் போலித்தனமான, தமிழனுக்கே அன்னியமான, தமிழ்ச் சமூகத்தின் மீது கோபக் கனலை வீசும் குணசேகரன் என்ற இளைஞனாக அவர் தோன்றினார். தமிழகத்தின் முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி எழுதிய கனல் தெறிக்கும் வசனங்களை அவர் வெள்ளித் திரையில் பேசி நடித்தபோது, தமிழ்த் திரையுலகில் ஒரு புதுயுகம் பிறந்தது. அதற்கு முன்பு வரை அடிக்கு ஒரு பாடல் என்ற முறையில் ஓர் உயிரோட்டம் இல்லாத வசனங்களைக் கொண்ட படங்கள்தான் வெளியாகி வந்தன. எம்.கே.தியாகராஜ பாகவதர், பி.யு சின்னப்பா என அந்த படங்களில் நடந்த கதாநாயகர்கள் எல்லோரும் பாடத் தெரிந்தவர்கள். பராசக்தியில் பேசும் போது முகத்தில் பாவனைகளை வெளிப்படுத்திய சிவாஜியின் நடிப்பை சிக்கெனப் பற்றிக் கொண்டனர் தமிழக மக்கள். 'ஆரியக்கூத்தாடினாலும் தாண்டவக்கோனே பணம் காரியத்தில் கண் வையடா தாண்டவக்கோனே' என்று சிதம்பரம் ஜெயராமன் (கருணாநிதியின் மைத்துனர்) பின்னணி பாடிய போது தமிழ்த் திரையுலகின் பொற்காலம் ஆரம்பமானது. பராசக்தி குறித்து ஒரு சுவையான அம்சத்தைச் சொல்லியாக வேண்டும். படத்தயாரிப்பாளருக்கு சிவாஜியைப் பிடிக்கவில்லை. அவர் மிகவும் ஒல்லியாக இருக்கிறார் என்று கூறினார். ஆகவே அவருக்கு ஆறு மாதங்கள் சிறப்பான வகையில் சாப்பாடு வழங்கப்பட்டது, உடல் சற்று குண்டானதும் நடிக்க வைத்தனர். சுத்தமான தமிழ் உச்சரிப்பு, எத்தனை பக்கமாக இருந்தாலும் வசனங்களை நினைவில் வைத்துக் கொண்டு நடிப்பது ஆகியவை சிவாஜியின் சிறப்பு அம்சங்கள். பாடல் காட்சிகளில் பின்னணிப் பாடலை வேறு ஒருவர் பாடுகிறார் என்ற நினைப்பே ஏற்படாத அளவுக்கு அவருடைய வாயசைப்பு இருக்கும். அவருக்கு ஏற்றாற்போல் டி.எம். சௌந்தர்ராஜன் என்ற மகத்தான பாடகன் அவருக்கு வாய்ந்தார்.



தொடர்ச்சியாக பல படங்கள் வெளியாகின. ஆனால் திரைப்படத்துறையில் எம்.ஜி.ஆர். என்ற இன்னொரு மக்கள் செல்வாக்கு மிக்க நடிகருடன் அவர் போட்டி போட வேண்டியிருந்தது. எம்.ஜி.ஆரைப் பொறுத்தவரை எதிர்மறையான கதாபாத்திரங்கள் எதையும் அவர் ஏற்று நடித்ததில்லை. ஒரு குடிகாரனாகவோ, ஏன் சிகரெட் பிடிப்பவராகக்கூட அவருடைய வேடங்கள் அமைந்திருக்காது. மக்கள் மீது திரைப் படங்கள் ஏற்படுத்தும் தாக்கத்தை நன்கு உணர்ந்து கொண்ட அவர், எதிர்கால அரசியலுக்கு திட்டமிட்டே தன்னுடைய கதாபாத்திரங்களை அமைத்துக் கொண்டார். மொத்தத்தில் குறைபாடுகள் இல்லாத அப்பழுக்கற்ற மனிதனாகத்தான் எம்.ஜி.ஆரின் வேடங்கள் அமைந்திருந்தன. ஆனால் சிவாஜியின் பாணி வேறு. குடிகார காதலன், கோபக்கார நாகசுர வித்வான், கௌரவம் நிறைந்த வழக்கறிஞர், பிச்சைக்காரன் என பல தரப்பட்ட வேடங்களை அவர் புனைந்திருக்கிறார். அதனால்தான் எம்.ஜி.ஆரால் அரசியலில் சாகசம் புரிய முடிந்த போது சிவாஜி தோற்றுப் போனார். செக்கிழுத்தச் செம்மல் வ.உ.சிதம்பரனாராக சிவாஜி நடித்த போது கண்ணீர் விட்டு கதறிய அவருடைய ரசிகர்கள் பலர், அவர் காங்கிரசில் இருந்தபோதும், தனிக்கட்சி ஆரம்பித்தபோதும், வி.பி.சிங்குடன் ஜனதா தளத்தில் சேர்ந்த போதும் அவர் பக்கம் நிற்காமல் போய் விட்டார்கள். பெரும்பாலான அவருடைய ரசிகர்களுக்கு அவர் ஒரு மகத்தான கலைஞனாகத்தான் தென்பட்டார். ஆகவேதான், தமிழகத்தில் ஓர் அரசியல்வாதி இறந்து போனால் வந்து சேரும் கூட்டத்துக்கு நிகரான கூட்டம் சிவாஜி இறந்த போதும் கூடியது.

கலைத்துறை என்ற முறையில் சிவாஜி கணேசன்மீதும் விமர்சனங்கள் வைக்கப்பட்டன. குறிப்பாக, ஒரு விமர்சனம் என்னவென்றால், அவர் மிகைப்பட்டவகையில் (ஓவர் ஆக்டிங்) நடிக்கிறார் என்பதுதான் அது. இதில் உண்மையில்லாமல் இல்லை. ஆனால் நாம் ஒரு கருத்தை எப்போதும் மறந்து விடலாகாது. வீரபாண்டியக் கட்டப் பொம்மனும், ராஜராஜ சோழனும் கர்ஜிக்கும் குரலில் பேசாமல், குற்றவாளிக் கூண்டில் நிற்பவன் போல் மன்னிப்புக் கேட்கும் தொனியில் பேசினால் எந்த ரசிகன் ஏற்றுக் கொள்வான்? தமிழர்களைப் பொறுத்தவரை பழம் பெருமைகளை பேசித்தீர்ப்பதில் வல்லவர்கள். தங்களை ஆண்ட மன்னர்களுக்கெல்லாம் கல்யாண குணங்களைக் கொடுத்து, அவர்கள் ஆண்ட காலத்தை பொற்காலமாகப் பேசிக் கொள்வதில் அவர்களுக்கு நிகர் அவர்கள்தான். தமிழனின் உள்ளக்கிடக்கைக்கு ஒரு வடிவம் கொடுத்தவர் சிவாஜி கணேசன்.

வரலாற்று பாத்திரங்களை விட்டு விடுங்கள். சாதாரண மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் படங்களில் கூட ஓவர் ஆக்டிங் செய்தார் என்பது விமர்சகர்கள் முன்வைக்கும் வாதம். அழும் காட்சிகளிலும் அண்ணன தங்கை அண்ணன் தம்பி பாசத்தை வெளிப்படுத்தும் வேடங்களிலும் அவர் தேவைக்கு அதிகமாக நடித்துள்ளார் என்பது குற்றச்சாட்டு. ஆனால் சிவாஜி பாணி என்ற ஒன்று உருவாகி விட்ட பின்னர், அதை விட்டு விட்டு வேறுபாணியில் அவர் நடித்திருந்தால் ரசிகன் ஏற்காமல் போய் இருப்பான். இன்னொரு அம்சம் என்னவெனில், முதல் மரியாதை போல, விருப்பமில்லாத மனைவியுடன், மனவலியுடன், அதே நேரத்தில் வலியை வெளிக்காட்டிக் கொள்ளாமல், குடும்பம் நடத்தும் கணவனாக அவரால் அனாயசமாக நடிக்க முடியும். ஹாலிவூட்டில் விருதுகளை வாங்கிக் குவித்த ஜாம்பவான்களுக்கு எந்த வகையிலும் அவர் குறைந்தவரில்லை. அவர் சர்வதேச விருதுக்கு தகுதி பெற்றவர். ஆனால் விருதை வாங்கித் தரும் கதையம்சம் கொண்ட படங்களை அவரை வைத்து தயாரிக்காமல் போய் விட்டார்களா என்ற சந்தேகம் எழுகிறது. ஒருவேளை மேற்கத்திய நாடுகள் ஆதிக்கம் செலுத்தும் ஹாலிவூட், ஆஸ்கர் சமாசாரங்களில் அவருக்கு இடம் இல்லாமல் போய் விட்டது என்று ஆறுதல் சொல்லிக் கொள்ளலாம்.

மெத்தட் ஆக்டிங் என்று கூறப்படும் ஒரு முறையை சிவாஜி பின்பற்றினார் என்று கூறுவார்கள். சிவாஜியை வைத்து ஏராளமான படங்களை உருவாக்கிய முக்தா சீனிவாசன் ஒரு கருத்தைத் தெரிவித்தார். பிராமணனாக நடிக்கிறார் என்றால், அதற்கு முன்பாகவே பூணூலை அவர் தனது உடம்பில் அணிந்து கொண்டிருப்பாராம். ஏனென்றால் ஒரு கட்டத்தில் தன்னை முழுக்க முழுக்க பிராமணனாகவே அவர் உணர்ந்து கொண்டு நடிப்பார். சிவாஜி பூணூல் அணிந்து கொண்டிருப்பதைக் கண்ட காஞ்சி சங்கராச்சாரியார், அவர் ஒரு பிராமணனா என்று கேட்டாராம். அதுபோலத்தான்? டாக்டராக நடிப்பதற்கு முன்பாக ஒரு மருத்துவமனையில் சென்று டாக்டர்களின் செய்கைகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பாராம். 'தில்லானா மோகனாம்பாள்' படத்தில் நாதரசு வித்வானாக அவர் நடித்ததைப் பார்த்த மக்கள், எல்லா நாதசுர வித்வானுமே அவர் போல் இருக்க வேண்டும் என்று எண்ணும் அளவுக்கு அவருடைய நடிப்பு இருந்தது என்றால் நடிப்புக்கு வேறு என்ன இலக்கணம் வேண்டும்? தில்லானா மோகனாம்பாள் என்பது மறைந்த எழுத்தாளர் கொத்த மங்கலம் சுப்பு எழுதிய நாவலாகும். நாவல் திரைப்படமாக மாற்றப்பட்டு வெற்றி பெற்ற ஒரே படம் தில்லானா மோகனாம்பாள்தான் என்றால் அது மிகையில்லை.

வரலாற்று கதாபாத்திரங்களை வெளிப்படுத்தும் வேடத்தில் நடிப்பதில் சிவாஜிக்கு நிகர் சிவாஜிதான். வீரபாண்டிய கட்டப்பொம்மனையும், ராஜராஜ சோழனையும், திருநாவுக்கரசரையும், வ.உ. சிதம்பரம் பிள்ளையும் எப்படி இருந்திருப்பார்கள் என்பது யாருக்கும் தெரியாது. சிவாஜி நடித்த பிறகு இப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்று எல்லோரும் முடிவுக்கு வந்து விட்டனர். கடவுளை யாரும் கண்டதில்லை. ஆனால் சிற்பமாகச் செதுக்கும் போதும், ஓவியமாக வரையும் போதும் அதுதான் உண்மை உருவம் என்று ஏற்பதில்லையா? அது சிவாஜி என்ற மகா கலைஞனின் நடிப்புக்கும் பொருந்தும்.

தொழிலில் அவருக்கு இருந்த அக்கறை அவருடன் பணியாற்றியவர்கள் நாளெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஒரு படத்தில் நடித்த உடனேயே, கால்சீட் கொடுக்காமல் இழுத்தடிப்பதும், தாமதமாக பட பிடிப்புக்கு வருவதுமே வழக்கமாகக் கொண்டிருக்கும் பலர் மத்தியில் சிவாஜி ஒரு நாணயம் மிக்க மனிதனாக நடந்து கொண்டார். ஒரு தடவை கூட அவர் படப்பிடிப்புக்குத் தாமதமாக சென்றதில்லை. உடன் நடிப்பவர்களை உற்சாகப்படுத்துவார். இப்படி நடிக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுப்பார் என்று அவருடன் பணியாற்றியவர்கள் அனைவரும் நினைவு கூர்கிறார்கள்.

விருது, அங்கீகாரம் என்று எடுத்துக் கொண்டால், இந்தியாவிலேயே அவருக்கு அங்கீகாரம் என்பது வெகுதாமதமாகத்தான் வந்தது. பிரஞ்ச் அரசாங்கம் அவருக்கு செவாலியே விருது கொடுத்த பின்னர்தான் இந்திய அரசு அவருக்கு 'தாதா சாஹேப் பால்கே' விருது கொடுத்தார்கள். நடிப்பில் சிவாஜிக்கு எந்த விதத்திலும் இணையாக முடியாத எம்.ஜி. ஆருக்கு தேசிய விருது கிடைத்தது. ஆனால் சிவாஜிக்குக் கொடுக்கவில்லை.

இறுதியாக விஷயத்தைச் சொல்லியாக வேண்டும். இறக்கும் வேளையில் மிகுந்த மனவேதனையுடன்தான் சிவாஜி கணேசன் இறந்து போனார். சிவாஜியின் குடும்பம் ஒரு கூட்டுக் குடும்பம் என்பது பலரும் அறியாத ஒன்று. அவருடைய மகள் வயிற்றுப் பேத்தி சத்தியலட்சுமியை, தமிழக முதல்வரின் முன்னாள் வளர்ப்பு மகன் வி.என்.சுதாகரனுக்கு (ஜெயலலிதாவின் தோழி சசிகலாவின் அக்காள் மகன்) மணம் முடித்தார்கள். இந்தியா முழுவதும் பரபரப்பாகப் பேசப்பட்ட அளவுக்கு டாம்பீகத்துடன் நடத்தப்பட்ட இந்த திருமணம் ஜெயலலிதாவின் வீழ்ச்சிக்கான காரணங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது. ஒரு கட்டத்தில் சுதாகரனை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டார் ஜெயலலிதா. மறுபடியும் ஆட்சிக்கு வந்ததும் சுதாகரன்மீது போதைப் பொருள் வைத்திருப்பதாக வழக்குப் பதிவு செய்து சிறைக்கு அனுப்பினார் ஜெயலலிதா. சுமார் 100 கோடிக்கு மேல் பணத்தை சுதாகரன் எடுத்துச் சென்று விட்டதாகவும் அதைத் திரும்பத்தராததால் அவர் மீது வழக்குப் போட்டதாகவும் செய்திகள் உலா வருகின்றன. இந்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப் பட்டால் சுதாகரன் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டிவரும்.

தன்னுடைய பேத்தியின் வாழ்வு இப்படி ஆகிவிட்டதே என்று சிவாஜி மனம் புழுங்கினார். சுதாகரனை எப்படியாவது வெளியே கொண்டு வந்து விடுவேன் என்று பேத்திக்கு ஆறுதல் கூறினார். ஆனால் அது நிறைவேறவில்லை. உண்மையிலேயே சிவாஜிக்கு இந்த திருமணத்தில் விருப்பம் இருந்ததில்லை. ஆனால் எந்தச் சூழலில் ஒப்புக் கொண்டார் என்பது புதிராகவே உள்ளது. இத்திருமணத்தின் காரணமாக, அரசியலுக்கு அப்பாற்பட்டு அவர் நட்புப் பாராட்டிய கருணாநிதியுடன்கூட சரியான உறவை அவரால் தொடர முடியவில்லை.

கருணா நிதிக்கு திரைப்படத்துறையினர் பாராட்டு விழா நடத்தியபோது சிவாஜியும் கருணா நிதியும் கட்டிப்பிடித்து கதறிய போது எல் லோரின் கண்களும் குளமாயின.

சிவாஜிக்கு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும். அதற்காக நிலம் ஒதுக்க வேண்டும் என்று தமிழக அரசிடம் திரைப்பட நடிகர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஆனால் பொது இடங்களில் நினைவுச் சின்னம் கட்டுவது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளைச் சுட்டிக் காட்டி, எந்த தெளிவான பதிலையும் ஜெயலலிதா தெரிவிக்கவில்லை.

இதுவே தி.மு.க அரசாக இருந்திருந்தால் எல்லா அரச மரியாதையும் அளிக்கப்பட்டிருக்கும் என்று சிவாஜி மனைவியிடம் கருணாநிதி தெரிவித்து அழுததாகச் செய்திகள் வெளியாகின. விருதுகள் அவருக்குத் தாமதமாகத் தான் வந்து சேர்ந்தன. நினைவுச் சின்ன மாவது விரைவில் வருமா என்பது தான் இப் போதையக் கேள்வி. ◘

---

## தூக்கத்திலிருந்த விமானப்படையினரின் கழுத்தை வெட்டிய புலிகள்

கட்டுநாயக்கா விமான நிலையம் மீதும் விமானப்படைத்தளம் மீதும் புலிகள் கடந்தவாரம் நடத்திய அதிரடித்தாக்குதலின் மர்ம முடிச்சுக்கள் முழுவதுமாக அவிழ்க்கப்பட்டு விட்டன என்று இன்னமும் கூறுவதற்கில்லை.

புலிகள் எவ்வாறு விமான நிலையத்துக்குள் புகுந்தார்கள் என்ற கேள்விக்கான விடையை பாதுகாப்பு தரப்பு ஓரளவு சரியாக திரட்டியிருந்தாலும், தாக்குதல் நடத்தப்பட்ட விதமும் தாக்குதலில் ஈடுபட்ட சிலர் தப்பிச் சென்றதாக கூறப்படும் தகவல்களும் இன்றுவரை புரியாமலே இருப்பதாக விசாரணையாளர்கள் கூறுகின்றனர்.

எவ்வாறெனினும் ரோஸா ஜேர்னி ரக பஸ் ஒன்றில் கட்டுநாயக்காவுக்கு வந்து விமான நிலையத்தின் பின்புறமாக உள்ள தென்னந்தோப்பு வழியாகவே புலிகள் விமானப்படைத் தளத்துக்குள் பிரவேசித்திருப்பதை பல்வேறு ஆதாரங்களை முன்வைத்து படைத்தரப்பு உறுதி செய்கிறது. ஆனால் மிகப் பெரும் ஏற்பாடுகளுடன் இருக்கும் இந்த விமானப் படைத் தளத்திற்குள் புகுந்து இத்தனை கச்சிதமாக தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றிருக்கிறார்கள் என்றால் அதற்கு உள்ளே இருந்தவர்களின் உதவி கிடைத்திருக்க வேண்டும் என்பது படையினரின் உறுதியான அபிப்பிராயம்.

இந்நிலையில் அன்றைய தினம் விமான நிலைய பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பலர் கைது செய்யப் பட்டுள்ளனர். குரண என்ற இடத்தில் இருக்கும் மேஜர் ராஜ் பெர்னாண்டோ மைதானத்தில் 23ம் திகதி இரவு சந்தேகத்துக்கு இடமானவர்களின் நடமாட்டம் குறித்து பிரதேசவாசிகள் விமானப்படையினருக்கு தகவல் தெரிவித்திருந்தனர். பின்னர் அந்த இடத்துக்கு வந்து பார்த்த இரண்டு விமானப்படை வீரர்கள் புலிகள் கைவிட்டுச் சென்ற உணவு வகைகள் சிலதையும் வேறு சில பொருட்களையும் கண்டெடுத்தனர். ஆனால் இவைகளை வைத்து உருப்படியான சந்தேகம் எதுவும் அந்த விமானப்படை சிப்பாய்களுக்கு ஏற்படவில்லை. இவ்வாறு கவனயீனமாக நடந்து கொண்டதற்காக இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால் மற்றுமொரு விமானப்படை வீரர் கைதானார். அவர் மீதான குற்றச்சாட்டு சற்று குழப்பமானது. இவர் இதற்கு முன்னர் வவுனியாவில் பணியாற்றியவர். அங்கேயே திருமணம் செய்து கொண்டு கட்டுநாயக்காவுக்கு மாற்றம் பெற்று வந்து விமானப்படைத்தள வீட்டுத் தொடரில்தான் தங்கியிருக்கிறார். சம்பவ தினத்துக்கு முந்திய இரவு இந்த வீரர் கடமை முடிந்து வீடுசெல்லும்போது, அவரது வீட்டுக்குள் இருந்து இரண்டு பேர் வெளியே ஓடியுள்ளனர். இலங்கை மின்சார சபையின் மின்வெட்டு அமுலில் இருந்த நேரமாதலால் பிரதேசம் முழுவதும் இருட்டாகவே காணப்பட்டது. வீட்டில் இருந்து வெளியில் ஓடியவர்கள் குறித்து இவர் பொருட்படுத்தவில்லை. இதை அவதானித்த மற்றொரு விமானப் படை வீரர் சொல்லியும் கூட அந்த வீரர் இதனை தனது மேலதிகாரிக்கேனும் தெரியப்படுத்தவில்லை.

மறு நாள் இது தொடர்பாக செய்யப் பட்ட புகாரை அடுத்து இந்த வீரரும் கைதானார்.

எவ்வாறெனினும் விமானப்படைத் தளத்துக்குள் இருந்து வழிகாட்டல் கிடைக்காமல் இப்படியொரு காரியத்தை இத்தனை கச்சிதமாக முடிப்பது சாத்திய மில்லை என்று படைத்தரப்பில் அபிப்பிராயம் நிலவுகிறது.

இதற்கிடையில் இந்தத் தாக்குதலுக்கு புலிகள் அதிநவீன ஆயுதங்கள் பலவற்றை பயன்படுத்தியிருப்பது தெரியவந்துள்ளது. நவீன ரக ஆயுதங்களில் பாவிக்கும் வெடிமருந்துகள் தோட்டாக்கள் என்பன விமான நிலையவளவில் இருந்து மீட்கப் பட்டபோதும், அவற்றை உபயோகித்த ஆயுதங்கள் மீட்கப்படவில்லை. அதனால் தப்பிச் சென்ற புலிகள் தாம் கொண்டு வந்த ஆயுதங்கள் பலவற்றையும் திரும்பி கொண்டு சென்றிருக்கலாம் என படையினர் நம்புகின்றனர்.

எப்படியிருந்தாலும் இலங்கை விமானப்படை இந்த சம்பவத்தின் மூலம் பெரும் இழப்பை மாத்திரமன்றி, அவமானத்தையும் சந்தித்துள்ளது. நூற்றுக் கணக்கான ஆயுதபாணிகள் காவல் நிற்கும் ஓரிடத்தை பிரதேச பரீட்சயம் இல்லாத 20 பேரினால் உள்ளே புகுந்து அழிக்க முடியுமென்றால் இந்த விமானப் படையை நம்பி என்ன பிரயோசனம் என்று தென்னிலங்கை ஊடகங்கள் கேள்வி எழுப்பியுள்ளன. அன்றைய தினம் விமானப்படைத் தளத்தின் நிலவரம் பல வழிகளிலும் புலிகளுக்கு சாதகமாக இருந்தது தெரிய வந்துள்ளது. அந்த இரவில் முகாமில் கேளிக்கை களியாட்ட நிகழ்ச்சி ஒன்று நடை பெற்றிருக்கிறது. தாராளமாக மதுபானம் பரிமாறப் பட்டுள்ளது. கொழும்பில் இருந்து வரவழைக்கப்பட்ட மாடல் அழகி ஒருவரின் காபரே டான்சும் இடம் பெற்றிருக்கிறது. நள்ளிரவு வரையில் நடந்த இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பலர் மூக்கு முட்ட குடித்து விட்டு தூங்கியிருக்கிறார்கள். கட்டுநாயக்காவுக்கு அருகில் உள்ள ஓர் இடத்தில் அன்றைய தினமே இசை நிகழ்ச்சி ஒன்றும் நடைபெற்றிருக்கிறது.

அதை பார்ப்பதற்கும் முகாமில் கடமையாற்றும் பலர் சென்று விட்டனர். பிந்திய இரவில் திரும்பி வந்த இவர்களும் களைப்பு நீங்க தூங்கியிருக்கிறார்கள். அதனால் இரவு கடமை மாற்றம் இடம் பெறாமல் ஒரே பிரிவினர் தொடர்ந்து பலமணி நேரம் காவலில் ஈடுபட்டுள்ளமையும் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. நிலைமை எந்தளவு மோசமாக இருந்ததெனில், காவலரண் ஒன்றில் இருந்த இரண்டு விமானப்படை வீரர்களை புலிகள் கழுத்தை வெட்டியே கொன்றிருக்கிறார்கள். கழுத்து போகும் வரை காவலர்கள் தூங்கியிருக்கிறார்கள்.

இப்போது வெளியாகும் தகவல்கள் விமானப்படையினரை மட்டுமன்றி இலங்கையின் ஒட்டுமொத்தமான பாதுகாப்பு தரப்பையே அவமானத்துக்குள்ளாக்கும் வகையில் அமைந்துள்ளன.

அத்தனை பலவீனங்களையும் மிகச் சரியாக கணக்கிட்ட புலிகள் தமக்கு தேவையான விதத்தில் போதிய அவகாசம் பெற்று விமானங்களை தாக்கி அழித்து விட்டுச் சென்றுள்ளனர். இந்தத் தாக்குதலில் பொதுமக்களுக்கு உயிர்ச் சேதம் ஏற்படக்கூடாது என்பதில் புலிகள் மிகக் கவனமாக செயற்பட்டதை அவதானிக்க முடிகிறது. ஜகார்த்தாவில் இருந்து மாலைதீவு வழியாக கட்டுநாயக்கா வந்த ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் விமானத்தின் கடைசிப் பயணியும் இறங்கிச் சென்ற பின்னரே தாக்குதல் ஆரம்பமாகியிருக்கிறது. இதற்கு ஒரு சில நிமிடங்களுக்கு முன்னர் அந்த விமானத்தின் மீது ரொகட் ஏவப்பட்டிருந்தால் கூட பாரிய உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கும்.

சம்பவத்தில் கொல்லப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர்களுள் ஒருவர் மாத்திரமே கமாண்டோ படையினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்திருக்கிறார். ஏனையவர்கள் விமான நிலையத்தின் வெவ்வேறு பகுதிகளில் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

கட்டுநாயக்காவில் என்ன நடந்தது என்பதை அறிய நூற்றுக்கணக்கான சி.ஐ.டி.யினர் விசாரணை நடத்துகின்றனர். ◘



# கார் டிக்கியில் குழந்தைகளின் சடலங்கள்
# அரைமயக்கத்தில் தாய் மீட்பு
## இலங்கை தமிழ்பெண் கனடாவில் தற்கொலை முயற்சி

கார் டிக்கிக்குள் புகுந்து அதன் கதவை மூடிக் கொள்வதன் மூலம் தனது குழந்தைகள் இருவர் சகிதம் தற்கொலை செய்ய முயற்சித்த இலங்கை தமிழ் பெண் ஒருவரை கனேடிய பொலிஸார் உயிருடன் மீட்ட போதும் குழந்தைகள் இரண்டும் உயிரிழந்துவிட்டன.

கனடாவின் பிரேம்லே வீதியில் வசிக்கும் இலங்கையில் இருந்து சென்ற 30 வயது தமிழ் பெண்ணான யசோதா தியாகராஜன் தனது 3 வயது குழந்தையான சகி, 5வயதுடைய ஷியாமி ஆகியோருடன் வீட்டின் பின்புறமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹொண்டா ரக காரின் டிக்கிக்குள் புகுந்து அதன் கதவை மூடியுள்ளார். உறவினர்கள் தேடிப்பார்த்து விட்டு பொலிஸுக்கு அறிவித்த பின்னர், சோதனை நடத்திய பொலிஸார் மூச்சுத்திணறலால் உயிரிழந்த நிலையில் குழந்தைகளின் சடலத்தையும் பாதி மயங்கிய நிலையில் தாயையும் மீட்டனர். கடிதம் ஒன்றும் கண்டு பிடிக்கப்பட்டது.

இந்தப் பெண்ணின் கணவரான மஹேந்திரன் தியாகராஜன் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் அவரது வேலைத்தளத்தில் நடந்த விபத்தொன்றில் உயிரிழந்தார். அதன் பிறகு தாய், சகோதரர், இரண்டு பிள்ளைகளுடன் வசித்து வந்த யசோதா ஏன் திடீரென்று இவ்வாறானதொரு முடிவுக்கு வந்தார் என்று புரியாமல் இருப்பதாக உறவினர்கள் கூறுகின்றனர்.

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று பொலிஸார் வரவழைக்கப்படு முன்னர் வீட்டுக்குள் நுழைந்தபோது, தற்கொலை செய்யப்போவதாக எழுதப்பட்ட கடிதம் ஒன்று இருந்ததைக் கண்டு அதிர்ச்சியுற்றதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

"யசோதா பார்ப்பதற்கு பிரச்சனைகள் எதுவுமற்றவர் போன்று சாதாரணமாகவே காணப்பட்டார். நிலமை இத்தனை மோசமாக இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை" என்கிறார் யசோதாவின் கணவரது சகோதரனான யோகேஸ்வரன்.


சம்பவம் நடைபெறுவதற்கு முந்திய தினம் இரவு யசோதா தன்னுடன் வசிக்கும் அவரது சகோதரனைத் தாக்கி காயப்படுத்தியிருக்கிறார். அன்றைய இரவில் தாய் யசோதா கடுமையான ஆத்திரத்தில் காணப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர் அதிகமாக தூக்க மாத்திரைகளை பாவிக்கப் பழக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை தமது தந்தை இறந்துவிட்ட செய்தி குழந்தைகளுக்கு கடைசி வரை தெரிவிக்கப்படவில்லை. தந்தை காயமடைந்திருப்பதாகவும் அவர் மீண்டும் வருவார் என்றே குழந்தைகள் நம்பிக்கொண்டிருந்ததாகவும் சாட்சியங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் யசோதா பொலிஸாரின் பாதுகாப்பில் காணப்படுகின்றார். "அவர் அரை மயக்கத்தில் இருக்கிறார். இவரே இந்த சம்பவத்தின் பிரதான சந்தேகநபர்" என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் மத்தியில் தற்கொலைகள் பரவலாக அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வப் புதல்வன் கரிஷன் 31.07.2001

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த ந.மதனரூபன்-பாலானந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கரிஷன் தனது முதலாவது பிறந்த தினத்தை 31.07.2001 அன்று இலண்டனிலுள்ள தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடினார். அவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமிமார், மாமாமார், அண்ணாமார், மச்சான்மார், மச்சாள்மார் ஆகியோர் லண்டனிலிருந்தும், வவுனியாவிலிருந்து அம்மப்பா, அம்மம்மா, காய்ச்சித்தாவும் கனடாவிலிருந்து மாமாவும், ஜேர்மனியிலிருந்து பூட்டியும் டென்மார்க்கிலிருந்து பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமாரும் அஷ்டலட்சுமியின் அருள் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

தகவல்: அம்மம்மா, வவுனியா.

## 5வது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி டில்றுக்சி
### 05.08.2001

தளுப்பத்தை நீர்கொழும்பை சேர்ந்த சதீஸ்-ஜெயந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வி டில்றுக்சி தனது 5வது பிறந்த நாளை 05.08.01 நீர்கொழும்பில் தனது இல்லத்தில் விமர்சையாகக் கொண்டாடுகின்றார்.

டில்றுக்சியை இலண்டனில் வசிக்கும் அன்பு அப்பா, பெரியப்பா, சித்தப்பா, மாமா ஜெர்மனியில் வசிக்கும் தாத்தா, அம்மம்மா, மாமா, அத்தை, சித்தப்பாமார்கள், அக்கா, இந்தியாவில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, அக்காமார்கள், மற்றும் கொழும்பில் வசிக்கும் ஜெனி அன்ரா, இப்றாகிம் அங்கிள், யஸ்மின் அன்ரி, பபி, சிப்லி, நீர்கொழும்பில் வசிக்கும் அப்பம்மா, பெரியம்மா, அக்காமார்கள், தம்பி றுக்சன், சித்தப்பா, சித்தி, தங்கச்சி சில்பா, சீலன் சித்தப்பா, மஞ்சுளா சித்தி, தம்பி ஜெயறுசன், செல்லா சித்தி, பூட்டியம்மா மாமா குடும்பம், பாபு மாமா அனைவரும் கர்த்தரின் கிருபையால் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்: ஆ.ஜெனி.


## மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக்காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெறவேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெறவேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**

T.P: 00941 342463 , 00941 470615, **தேவைகளுக்கு:-**

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

**கொழும்பில்**
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,470615- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.



## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஆகஸ்ட் 20 முதல் 26 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் ஆகஸ்ட் 28 - 30 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டிT.P.074-474156

**கல்முனையில் ஆகஸ்ட் 04, 05 திகதிகள்**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் ஆகஸட் 11, 12 திகதிகள்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.



## தெய்வீக மருத்துவம்

1960 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மட்டக்களப்பு மலையாள மாந்திரீக வசிய சர்வதேச சமூக தெய்வீக சேவை. (Govt. Approved) கிரகதோஷம், காதல், (ஆண்-பெண்) பிரச்சனை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம், கல்வி தொழில் விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, கணவன்-மனைவி குடும்ப வாழ்க்கையில் சந்தோசமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சனை, தீய பழககம், மனிதத்தீமை மருந்தீடு போன்ற தீமைகள் ஏற்படுகின்றது இது போன்ற எவ்வித பிரச்சனைகளானாலும் "காண்டம்" இறைசக்தியால் பிரச்சனைக்குரிய காரணத்தை கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளிக்கப்படுகின்றது. நேரில் வர முடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் அல்லது ஃபக்ஸ் பண்ணிவிட்டு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்கின்றார்கள். பூசை, தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

**டாக்டர். பாலுசோதிடர்** S.(A).M.P J.P (S.L)

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்
SILPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE

THEIVEEGAM-NTSF-BATTICALOA.
SRI LANKA
TEL/FAX: 065-24825
வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு
TEL/FAX: 0099465-24825.



## சேவை

தனியார் முதியோர் பராமரிப்பு இல்லம்: வயோதிப ஆண் பெண் இருபாலாருக்கும் ஏற்ற அமைதியான சூழலில் நல்ல விசாலமான இடத்தில் உணவு, தங்குமிடம், மருத்துவம் மற்றும் எல்லா விதமான இதர வசதிகளுடன் கொழும்பிற்கு அண்மையில் வத்தளையில் அமைந்துளளது. நிரந்தரமாக தங்குபவர்களுக்கும் தற்காலிகமாகத் தங்குபவர்களுக்கும் கட்டணம் மற்றும் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**Sri Sai Elders Home, 299, Hendala Road, Wattala.**
**Tel: 932294, 943693 Fax: 94-1-441682**



## உங்கள் பலன் எப்படி?

### ஏ.சுலேமான் - A. Suleman

உங்கள் சொந்தப் பலன் எப்படி? கைரேகை, நட்சத்திரம், பிறந்த நேரக் குறிப்பு பார்த்து, பலன்கள் சொல்வோம். காதல் கைகூட வைப்பது, வெளிநாட்டுப் பயணத்தடையை நீக்குவது, விரும்பியவரை மணமுடித்து வைப்பது, கணவன்-மனைவி பிரச்சனைகளைத் தீர்ப்பது.

- நீண்ட காலமாக நீங்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள்
- பரீட்சை பற்றிய பதட்டமா?
- பிசாசு, சூனியம், சாபக்கேடு துர் அதிஷ்டங்களால் இடர்பட்டு அழுந்துகிறவர்களுக்கு ஒரே பார்வையில் ஆறுதல் கிடைக்கும்.

பிறந்த திகதி, பெயர்-மொழி-தமிழர்-சிங்களவர் எவராயினும் எல்லோர் பிரச்சனையையும் தீர்த்து வைப்பார். முன்னதாக (காலை 10.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை) நேரம் நிர்ணயிக்க வேண்டும். அல்லது எழுதலாம்.

**Mrs.Madiha, 78 Plashet Grove,**
**London. E 6 1AB.**
**T.P. 02085860922**


## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 22 06 1924



ஆண்டவன் அடியில் 04 07 2001

### அமரர் திரு. வைரமுத்து சின்னராசா

**சிவபுரி திருக்கோணமலை**

எங்கள் குடும்பத்தின் இதயக்கமலமே எங்கள் அன்புத் தெய்வமே 31 நாட்களான போதிலும் உங்கள் வதனம் எங்கள் கண்முன் நிதமும் நிற்கிறதே. எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு நீங்கள் மீளாத் துயில் கொண்டு இறைவனடி சேர்ந்து விட்டீர்கள். இயற்கை பிரித்தபோதும் என்றும் எங்கள் நெஞ்சில் நீங்கள் வாழ்கிறீர்கள். எங்கள் வாழ்வு இனி உங்கள் நினைவோடுதான். உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு ஆறுதல் கூறியோருக்கும் அவரது ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் பல வழிகளில் ஒத்தாசை புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**பிரிவால் துயருறும் அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்**

தகவல்: திருமதி. ஆர். தவமலர்-368, பாரதிபுரம், திருக்கோணமலை.


## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**

142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக
Tel: 074-519754



## சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் வந்து திருமணப்பதிவு செய்து, திருமணம் செய்ய வருபவர்களுக்கு சகல வசதியுடன் தங்குமிடவசதியும், திருமணம் இலங்கை முறைப்படியோ அல்லது வீடியோ போட்டோவைப் பார்த்து வசதிக்கேற்பவோ தீர்மானிக்கலாம்.

விபரத்திற்கு:- அப்புலிங்கம்: சிங்கப்பூர் கைதொலை பேசி எண்:-
Tel:- 00 65 9 7514941. Tel. Fax:- 0065 2857494.

**LINGAM WEDDING SERVICE**
BLK 219 SERANGOON AVE 4
# 10-208 SINGAPORE-550219
TELE: (65) 4533308



## தியான யோகசக்தி! வசிய வைத்தியம்

1945ம் ஆண்டு ஆரம்பித்த புனித சேவை, சமய கலாசார அமைச்சின் பதிவு இல-HA14/ BT/ 176

சுகாதார அமைச்சினால் பதிவுசெய்யப்பட்ட பதிவு இல:061 ஹோமியோபதி,அக்குப்பங்சர்,சித்த ஆயுர்வேத, மாந்திரீக, மனோவசிய, யோகசிகிச்சையாளர்

**டாக்டர்-"மந்திரயோகி"**
R.P.H.M-D.Ac-(இலங்கை) P.I.S.M, (இந்தியா)



(YOGA) MY GURU

காதல் பிரச்சனைகளைத் தீர்த்து விரும்பியவர்களை சம்பந்தப்பட்டவர்களின் சம்மதத்துடன் திருமணம் செய்ய, கணவன்-மனைவி கருத்துவேறுபாடுகள் சந்தேகங்களை தீர்த்து பிரியாமலிருக்க, பிரிந்தவர்கள் வெறுப்ப வர்கள், வேண்டியவர்கள் வந்து உறவாக, தகாத ஆண்-பெண் உறவைபோதை வஸ்தை மறப்பிக்க, தீயசக்திகளினால் ஏற்பட்ட தீராதநோய், எதிரி தொல்லைகளிலிருந்து விடுபட-கண்ணூறு நாவூறு, சர்வதோஷ நிவர்த்தி சாந்தி பரிகாரங்கள் செய்ய, எத்துன்பங்களும் அணுகாமல் உடல் வீடு வளவு வியாபார இடங்களைக் காவல்செய்ய, திருமணம், கல்வி, தொழில், வியாபாரம், பொருளாதாரம், வெளிநாட்டுப்பிரயாணம் வேறுகாரிய வெற்றிக்கு "சகலகாரிய சித்தி இராயவசியங்கள்" செய்துகொள்ள தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகள், மனநோய், மருந்தீடு, பயம், பலவீனம், தாழ்வு மனப்பான்மை, கவலை, ரென்ஷன், இவைகளுக்கு சிறப்புச் சிகிச்சைபெற மட்டக்களப்பு கல்லடி குருசக்தி நிலையத்துக்கு (இந்தியன் வைத்தியசாலை) வரமுடியாதவர்கள் வெளிநாட்டவர்கள் தபால் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விஷேட தபாலில் எல்லா மதத்தினர்களுக்குமேற்ற தீங்கற்ற தெய்வீக புனித பரிகாரப்பொருட்களைப் பெற்று நியாயமான கோரிக்கைகளை உடன்நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC) KALLADY-BATTICALOA (P.O.) (SRILANKA)

உள்நாட்டு தொ.பே: 065-24872
வெளிநாட்டு தொ.பே: 0094 65 24872

(சர்வதேச) கடல்கடந்து செல்லும் அற்புத ஆன்மீக ஆகர்ஷண வசிய, தியான யோகசக்தி வெளிநாட்டவர்களுக்கு விஷேட செயல்முறைகள் மூன்றுநாட்களுக்குள் கையில் கிடைக்கக்கூடிய துரித சேவை.

### அலசுவது - இராஜதந்திரி

# வேகமாகவும் விவேகமாகவும்

## ஆரம்பமாக வேண்டிய சமரசப் பேச்சுக்கள்!

இலங்கை விமானப்படையின் தலைமைத் தளமாக விளங்கும் கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் கடந்த வாரம் பலத்த தாக்குதலுக்குள்ளாகியிருந்தது.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டதே கட்டுநாயக்கா விமானப்படைத்தளமாகும். சுமார் 42 வருடங்களுக்கு முன்னரே இலங்கையிடம் பிரிட்டிஷார் இந்த விமான நிலையத்தைக் கையளித்தனர்.

மறைந்த பிரதமரும், ஜனாதிபதி சந்திரிக்காவின் தந்தையாருமான எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் ஆட்சியின் போதே கட்டுநாயக்கா விமானத்தளம் பிரிட்டிஷ் விமானப்படையிடமிருந்து இலங்கைக்குக் கைமாறியிருந்தது. இதன் காரணமாகவே கட்டுநாயக்கா விமானத்தளம், பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் என்று தற்போது அழைக்கப்படுகிறது.

சிறிதும், பெரிதுமாக இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் விமானத்தளங்கள் இருந்து வருகின்றன.

கட்டுநாயக்காவுக்கு அடுத்தபடியாக கொழும்பில் இரத்மலான விமான நிலையம் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் பலாலி விமானத்தளம், மற்றும் வவுனியா, அநுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு அம்பாறை, வீரவில, கட்டுக்குருந்த, புத்தளம் ஆகிய இடங்களிலும் விமானத்தளங்கள் இருக்கின்றன.

இவ்விமான நிலையங்களில் கட்டுநாயக்கா மட்டுமே சர்வதேச விமான நிலையமாக இயங்கி வருகின்றது. ஏனைய விமான நிலையங்களில் உள்ளூர் விமானச் சேவை இடம்பெறுகின்றதாயினும், விமானப்படையினரது தேவைக்காகவே அவை பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

கட்டுநாயக்கா விமான நிலையம் மீது எப்போதுமே அச்சுறுத்தல் இருந்துவந்துள்ளது. 1970ம் ஆண்டில் இலங்கையில் ஜே.வி.பி கிளர்ச்சி வெடித்திருந்தது. அச்சமயம் இந்தியப் பிரதமராக இருந்த இந்திராகாந்தி கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குப் பாதுகாப்பளிக்கும் விதத்தில் இந்திய இராணுவத்தினரை அனுப்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் பன்னிரெண்டு வருடங்களுக்கு முன்னர் கூட கட்டுநாயக்காவில் பயணிகள் விமானமொன்று குண்டுத்தாக்குதலுக்குள்ளாகித் தகர்ந்து போயிருந்தது.

மாலைதீவுக்குச் செல்வதற்குத் தயாராக ஓடுபாதையில் நின்ற சமயமே ஏயர்லங்கா விமானச்சேவையின் போயிங் விமானமொன்று திடீரென வெடித்துத் தீப்பிழம்பாகியிருந்தது. அப்போது அவ்விமானத்தினுள்ளிருந்த பயணிகள் சிலரும் கொல்லப்பட்டனர்.

விமானத்தில் ஏற்றப்பட்ட பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டொன்றினாலேயே அச்சேதம் ஏற்பட்டதெனப் பின்னர் நடத்தப்பட்ட புலன் விசாரணைகளில் தெரியவந்திருந்தது.

இது தவிர சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர்கூட கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் வாகனத்தரிப்பிடப் பகுதியிலிருந்து தாக்குதலொன்று நடத்தப்பட்டிருந்தது. அதில் பாரியளவு சேதம் ஏற்படவில்லை. இருப்பினும் விமான நிலையத்தின் சில பகுதிகள் சிறு சேதங்களுக்குள்ளாகியிருந்தன.

கட்டுநாயக்காவில் பண்டாரநாயக்கா சர்வதேச விமான. நிலையத்தின் பாதுகாப்பு, விமானப்படையினரது பொறுப்பிலேயே இருந்து வந்தது.

சர்வதேச விமான நிலையத்தை அண்டியதாகவே விமானப்படையின் தலைமைத் தளமும் இருந்து வருவதால் பாதுகாப்பு நடவடிக்கைகள் இரட்டிப்பாகவே இருந்து வந்தன.

இருப்பினும் கடந்தவாரம் புலிகளின் தாக்குதல் விமானப்படையினரது பாதுகாப்பு வேலிகள், காவலரண்கள் என்பவற்றை ஊடறுத்த நிலையில் கனகச்சிதமான முறையில் இடம் பெற்றிருந்ததையே அவதானிக்க முடிந்தது.

தலைநகர் கொழும்பில் புலிகள் கேந்திர முக்கியத்துவம் மிக்க மையங்களை இலக்கு வைப்பது இது முதல் தடவையல்ல.

ஏற்கனவே மத்தியவங்கிக் கட்டடம், ஜனாதிபதி செயலகமருகே அமைந்துள்ள உலக வர்த்தக நிறுவனக் கட்டடம், கொலன்னாவ எண்ணெய்க் குதங்கள் போன்றவை புலிகளது கடுந் தாக்குதல்களுக்குள்ளாகியிருந்தன.

கொழும்புத் துறைமுகத்தினுள் கூட சில வருடங்களுக்கு முன்னர் தாக்குதலொன்றை நடத்தப் புலிகள் எத்தனித்தனர். ஆனால் பாதுகாப்புப்படையினர் விழிப்புடனிருந்ததால் அத்தாக்குதல் முறியடிக்கப்பட்டிருந்தது.

இது தவிர கண்டி மாநகரில் இலங்கையின் சுதந்திர பொன்விழாக் கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த சமயம் 1998ம் ஆண்டில் ஸ்ரீ தலதாமாளிகை புலிகளின் குண்டுத்தாக்குதலுக்குள்ளாயிருந்தது.

இருபத்திநான்கு மணிநேரமும் சோதனைச் சாவடிகள், காவலரண்கள் என்பவை நாடு பூராவும் விழிப்புடனிருக்கும் தருணத்திலேயே புலிகளும் சாதுரியமாகத் தமது கைவரிசையைக் காண்பித்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

கட்டுநாயக்காவில் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்குச் செல்லும்போது பாதுகாப்பு நடவடிக்கைகள் எத்தகையதென்பதை நன்கறிய முடியும். கட்டுநாயக்கா-நீர்கொழும்பு வீதிச் சந்தியிலிருந்து விமான நிலையம் செல்லும் பாதை நெடுகிலும் பத்துக்குமதிகமான வீதியோரச் சோதனை மையங்கள் இருக்கின்றன.

ஒவ்வொரு வாகனங்களும் சோதனையிடப்படுவதுடன், வாகனங்களிலிருப்போரும் தீவிரமாகவே கண்காணிக்கப்படுகின்றனர்.

எனவே சாதாரண மக்களின் நடமாட்டம் அதிகமாக இருக்கும் சர்வதேச விமானச் சுற்றாடல் பிரதேசம் தீவிர பாதுகாப்புக்குட்பட்டிருந்த போதிலும், அதி தீவிர பாதுகாப்பு வலயம் என்றிருந்த கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தினுள் புலிகளது அதிரடிப்படை மிக இலகுவாகப் புகுந்து கொண்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் எல்.ரி.ரி.ஈ போராளிகள் ஏற்கனவே பல்வேறு இராணுவ முகாம்கள், தளங்கள் என்பவற்றைக் கடந்த காலங்களில் தாக்கியழித்திருந்தனர்.

அவற்றில் பூநகரி, முல்லைத்தீவு, கிளிநொச்சி, ஆனையிறவு ஆகிய இராணுவ மையங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

இராணுவ முகாம்கள், தளங்கள் என்பவை மட்டுமல்ல. கடற்படையினரது கப்பல்கள் பலவும் கடற்புலிகளால் தாக்கியழிக்கப்பட்டவையாக இருக்கின்றன.

விமானப்படையினரது பல்வேறு ரகத்திலுமான விமானங்கள், ஹெலிகாப்டர்கள் என்பவை கூட தரையிலிருந்தும், கடலிலிருந்தும் புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன.

ஆனால் கட்டுநாயக்காவில் நிகழ்த்தப்பட்டுள்ள தாக்குதல், இலங்கை விமானப்படையினது சிரசின்மீது வீழ்ந்த பலமான அடியாக இருப்பதையே காணமுடிகின்றது.

தாக்குதல்களில் அதிரடித் தாக்குதலே வேகம் நிறைந்ததாகும். சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் இஸ்ரேலியக் கமாண்டோக்கள் இடி அமீனின் ஆட்சி நிலவிய உகண்டாவின் என்ரபே விமான நிலையத்தில் நடத்திய தாக்குதல் பற்றி இன்னுங்கூடப் பேசப்படுவதுண்டு.

விமானப் பணய நாடகமொன்றை முறியடிப்பதற்காக பலநூற்றுக்கணக்கான மைல்கள் கடந்து வந்து உகண்டாவில் ஒரு குறிப்பிட்ட சில நேரத்தில் இஸ்ரேலிய கமாண்டோக்கள் தமது அதிரடித் தாக்குதலை நடத்தியிருந்தனர்.

இதன்பின்னர் என்ரபே விமான நிலையத்தில் பணயம் வைக்கப்பட்டிருந்த பயணிகளையும் வெற்றிகரமாகக் காப்பாற்றிச் சென்றிருந்தனர்.

எனவே ஒரு குறிப்பிட்ட நேரத்தில், குறித்த இலக்கை வேகமாகவும், விவேகமாகவும் தாக்குவதையே அதிரடித்தாக்குதல் என வரையறை செய்ய முடிகின்றது.

கட்டுநாயக்கா விமானத்தளத்தினுள் சம்பவ தினம் ஜூலை 24ந் திகதி அதிகாலை 3.55 மணியளவில் உட்புகுந்த புலிகளது இருபத்தியொரு பேரடங்கிய தாக்குதல் அணி, சூரிய வெளிச்சம் நிலத்தில் படருமுன்னரே பாரியளவு சேதங்களை கட்டுநாயக்கா விமானத்தளத்தில் ஏற்படுத்திவிட்டிருந்தது.

விமானப்படைத்தளத்தில் தரித்து நின்ற சுப்பர் சோனிக் விமானங்கள், கனரக ஹெலிகப்டர்கள், மற்றும் சிறியரக சண்டை விமானங்கள் என எட்டு விமானப்படை வானூர்திகள் தாக்கியழிக்கப்பட்டிருந்தன.

விமானப்படைத்தளத்தில் இருந்து முன்னேறிய புலிகளது தாக்குதல் அணி பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் தரித்து நின்ற ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமானச் சேவைக்குச் சொந்தமான மூன்று எயார் பஸ் விமானங்களைத் தாக்கியழித்துள்ளது.

இந்த மூன்று எயார் பஸ் விமானங்களும் அண்மைக் காலத்தில் புதிதாக பிரான்ஸிடமிருந்து வாங்கப்பட்டவையாகும்.

பிரான்ஸின் தென்பகுதியிலுள்ள துலூஸ் பிரதேசத்திலேயே எயார் பஸ் விமானங்கள் தயாராகின்றன.

இன்று சர்வதேச பயணிகள் விமானச் சேவைகளைப் பொறுத்தவரை பிரெஞ்சுத் தயாரிப்பான எயார் பஸ் விமானங்கள் மிகவும் தரம் வாய்ந்தவையாகக் கணிக்கப்பட்டு வருகின்றன.

பயணிகள் விமானங்களைப் பொறுத்தவரை சிறப்பிடம் பெற்றவையாக இருந்து வந்த அமெரிக்காவின் போயிங் ரக விமானங்களை விட, தொழில் நுட்பம், வடிவமைப்பு, பயணிகளுக்குரிய வசதிகள் என்பவை விடயத்தில் எயார் பஸ் விமானங்கள் தரம்மிக்கவையாகவே இருந்து வருகின்றன.

உலகில் இன்று பல்வேறு முன்னணி விமானச் சேவை நிறுவனங்களும் பிரான்ஸின் எயார் பஸ் விமானங்களையே பாவிக்கத் தொடங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே கடந்த வார கட்டுநாயக்கா தாக்குதலில் ஸ்ரீ லங்கன் விமானச் சேவையின் பாவிப்பில் இருந்த மூன்று நவீன ஏயார் பஸ் பயணிகள் விமானங்களும் முற்றிலுமாகத் தாக்கியழிக்கப்பட்டிருந்தன.

கட்டுநாயக்காவில் புலிகளின் தாக்குதலுக்குள்ளான விமானங்களின் மொத்த எண்ணிக்கை பதின்மூன்றாகும். இவை அனைத்தினதும் பெறுமதி 500 மில்லியன் அமெரிக்க டாலர்களையும் தாண்டியதாக இருக்கின்றதென மதிப்பிடப்பட்டுள்ளது.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத் தாக்குதல் சர்வதேச சமூகம் அனைத்தினதும் கவனத்தை இலங்கையின் பக்கம் திருப்பி விட்டிருந்தது.

இத்தாக்குதலையடுத்து இலங்கை அரசின் நிலைப்பாடு எத்தகையதாக இருக்கும் என்ற கேள்வி எழும்பியிருந்த தருணத்திலேயே வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், சமாதானப் பேச்சுக்கள் கைவிடப்படமாட்டாதெனத் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு அரசியல் நெருக்கடிகள், மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து எழுந்துள்ள இராணுவ ரீதியான அச்சுறுத்தல்கள் என்பவற்றுக்கு மத்தியில் சமாதான அணுகுமுறைகளில் நம்பிக்கைத் தளராத விதத்தில் திரு.லக்ஷ்மன் கதிர்காமர் கருத்து வெளியிட்டிருப்பது வரவேற்புக்குரியதாகவே இருக்கின்றது.

தொலைக்காட்சிப் பேட்டியொன்றின் போதே திரு. லக்ஷ்மன் கதிர்காமர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், அரசுக்குமிடையிலான பிணக்குகளை சமரசப்பேச்சுக்களை நடத்துவதன் மூலம் தீர்த்துக் கொள்ள முடியுமென்று குறிப்பிட்டுள்ளார்.

தமது அரசியல் ரீதியான நிலைப்பாடுகளுக்கு இராணுவரீதியான அழுத்தங்களைக் கொடுத்து வருகின்ற தமிழீழ விடுதலைப் புலிகளோடு பேச்சுக்களை நடத்த வேண்டியதன் அவசியம், கட்டுநாயக்கா தாக்குதல் மூலம் இடித்துரைக்கப்பட்டுள்ளது.

இதனை திரு.லக்ஷ்மன் கதிர்காமரும் மிகுந்த நிதானத்துடன் உணர்ந்து கொண்டுள்ளதையே சமரசப் பேச்சுக்கள் குறித்து அவர் தற்சமயம் வெளியிட்டுள்ள கருத்துக்கள் எடுத்தியம்புகின்றன.

இராணுவ ரீதியான அணுகுமுறைகளைக் கையாண்டு வருகின்ற தமிழீழ விடுதலைப் புலிகள், மரபு வழிப் போர்முறை, கெரில்லாப் போர்முறை, அதிரடித் தாக்குதல் முறை என மூன்று வகைளில் தமது தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தாக்குதல் குறித்துக் கருத்துக் கண்ணோட்டங்களை வெளியிட்டுள்ள இலங்கையின் இராணுவ ஆய்வாளர்கள், எல்.ரி.ரி.ஈ. அமைப்புடனான மோதல்கள் பாரிய அழிவுகளுக்கே தொடர்ந்தும் வழியமைப்பதாக இருக்குமென்றே தெரிவித்துள்ளனர்.

நேரடியாகவே கட்டுநாயக்கா தாக்குதலை அவதானித்த விமானப்படையின் சிரேஷ்ட அதிகாரிகள் சிலர், தாம் இதுவரை கண்டிராத நவீன ஆயுதங்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்தியிருந்தனர் எனத் தெரிவித்திருந்தனர்.


எது எப்படியிருப்பினும் கட்டுநாயக்காவில் இடம்பெற்றது போன்ற தாக்குதல்கள், மற்றும் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் நீடித்துச் செல்லும் யுத்தம் என்பவை அழிவுகள், அவலங்களையே ஒரு தொடர்கதையாக்கி விட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சமாதானப்பேச்சுக்கள் கைவிடப்படமாட்டாதெனத் தெரிவித்துள்ள தருணத்திலேயே இலங்கையிலுள்ள நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட் பேர்க் அவர்களும் இலங்கைப் பிரச்சனை தொடர்பான சமரச முயற்சிகளிலிருந்து நோர்வே பின்வாங்கவில்லை எனக்குறிப்பிட்டுள்ளார்.

திரு.கதிர்காமரது சமாதானப்பேச்சுப் பற்றிய தற்போதைய கருத்துக்கண்ணோட்டம், அதற்கு அனுசரணையாக நோர்வே தூதுவர் வெஸ்ட்பேர்க் கூறியிருப்பவை, மீளவும் சமரச முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை கோடிட்டுக் காட்டுபவையாகவே இருக்கின்றன.

புலிகளுக்கும், அரசுக்குமிடையிலான பிணைக்குகளை சமரசப் பேச்சுக்கள் மூலமாகத் தீர்த்துக் கொள்ளலாம் என்று திரு.கதிர்காமர் கூறியுள்ளார்.

எனவே அச்சமரசப் பேச்சுக்களை வேகமாகவும், அதேசமயம் விவேகமாகவும் ஆரம்பிக்கவேண்டியதே காலத்தின் தேவையாகிறது.



**அரசுக்கும், புலிகளுக்குமிடையிலான பிணக்குகளை பேசித் தீர்க்க முடியும்!**
**-கதிர்காமர்-**

---

## அதிரடி அய்யாத்துரை



**கட்டுநாயக்காவை அடிச்சு** நொருக்கினதும் எங்கட அரசியல்வாதிகள் எத்தன ஜோக் விட்டினமெண்டு கேட்டியளே.. யு.என்.பியின்ர ஆர்ப்பாட்டத்தில தான் புலி வந்ததெண்டு உடன டியாகவே சொல்லிட்டினம். உதுல பாருங்கோ இந்தப் பெரிய தாக்கு தலுக்கு அரசாங்கமோ, அவையின்ட பாதுகாப்பு தரப்போ... ஏன்.. புலிகளோகூட காரணமில்ல, இதெல்லாம் நடந்தது ரணில் செய்த காரியத்தாலதான். உத விடுங்கோ "தாக்குதல வெற்றிகரமா முறியடிச்சிட்டோம்" எண்டு ஒரு பெரிய ஜோக் விட்டவை. அழுவதா சிரிப்பதா எண்டே புரியாமக் கிடக்கு.. எல்லாவற்றையும் அழிச்சு தீ வைச்சிட்டு... வீடியோவில படமும் எடுத்துட்டு போக வேண்டிய இடத்துக்கு அவை போய்ச் சேர்ந்திட்டினம். ஆறுதலாகப் போய் வானத்தில 'டும் டும்' விட்டு வழியனுப்பிப்போட்டு வந்து வெற்றிகரமா முறியடிச்சிட்டினமாம்.

**தன்ர பாதுகாப்புக்கு** நிறையப்பேர இழுத்துக் கொண்டு யாழ்ப்பாணம் போக விடுறாங்களில்லை எண்டு நம்மட பிஸ்னஸ்கார எம்.பி.யார் அழுது தொலைச்சிட்டார். உதுல பாருங்கோ ஏற்கனவே உவர் பாதுகாப்புக்கு என்று சொல்லி வச்சிருந்த பொலிஸ்காரரின்ர கையில நிறைய மணிக்கூடு கொடுத்து கடத்த முயன்று பிடிபட்டவர். உதால உந்த பொலிஸ்காரருக்கும் பிரச்சனையாப்போன கதை மறக்குறதுக்குள்ளயே திரும்பவும் நிறைய பாதுகாப்பு அதிகாரிகள் கேட்டிருக்கார். இன்னும் நிரம்பப் பேரைவிட்டு மணிக்கூடும் சட்ரலைட் அன்டனாவும் கடத்தலாமல்லே.. மகேஸ்வரா..

**எரிஞ்சுபோன விமானங்களுக்கு** பதிலா உடனே புது விமான மெண்டு செய்தி கேட்டனான். குண்டு போடுற வான்பறவை வாங்க மட்டும் நாலாயிரம் கோடி வேணுமெண்டு சொல்லியிருக்கினம். இத்தனை கோடிகளுக்கும் நூற்றுக்கு பத்து வீதம் எவ்வளவு வருதெண்டு கணக்குப் பார்த்தன் ம்... பூர்வஜென்மத்தில செய்த புண்ணியமப்பா...!

**நடிகர் திலகத்தின்ர** சாவை வைச்சுக் கொண்டு தங்கட பெயரை விளம்பரப்படுத்துறதுக்கு நம் நாட்டு 'கலைஞர்கள்' சிலர் பட்டபாட்டை நினைக்கக்க உடம்பெல்லாம் புல்லரிக்குது. உவையெல்லாம் இப்ப கண்ணீர் விடுகினமல்லே... 'பைலட் பிரேம் நாத்' படத்தில நடிக்க சிவாஜி இங்கு வந்தப்போ 'நாமெல்லாம் இங்கிருக்க தமிழகத்துல இருந்து நடிகர் எதற்கென்று' சிவாஜிக்கு எதிரா ஆர்ப்பாட்டம் செய்து திட்டித்தீர்த்தவை. இப்ப உந்தாள் செத்துப் போனதும் பாசம் பொத்துக்கொண்டு வந்து 'ஒன்றாக இருந்தோமடா விட்டுப்பிரிந்தாயடா' எண்டு புலம்பி அழுது விழுகினம்.

**இனிமேல்** நியுசிலாந்துக்காரருக்கு இலங்கையில கிரிக்கெட் எண்டால் வயித்தில புளி கரையும். உந்தாக்கள் வந்தால் ஏதாவது 'அதிஷ்டம்தான்' பாருங்கோ... 87ல வந்தப்போ குண்டு வெடிப்பு. 92ல வந்தப்போ கடற்படை தளபதியின்ர கார் வெடிச்சத கண்முன்னாலேயே பார்த்தினம்.. இம்முறை கட்டுநாயக்காவில... எங்கட சனத்த பரிதாபமா பார்க்கினம்! ஆனால் பாருங்கோ சனத்துக்கு இப்போ இதெல்லாம் ஒரு கிரிக்கெட் மெட்சல இலங்கையணி தோற்கிற அளவுகூட பெரிய சமாச்சாரமில்ல.

**இந்தவாரம்** ஒரு ஜெர்மன் பழமொழி:


**நீ பலமுள்ளவனாக இருக்க விரும்பினால்;**
**உன்னுடைய பலவீனங்களை தெரிந்துகொள்!**

# உண்மைத் தொடர் 18

# உலகை உலக்கிய சர்வாதிகாரி அடோல்ஃப் ஹிட்லர்

**ஜிலி** ரூபலின் அணைப்பு கதகதப்பாக இருந்தது ஹிட்லருக்கு. அவள் அவனது கண்களையே உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தாள். அவளது துடித்துக் கொண்டிருந்த உதடுகளில் அழுத்தமாக முத்தமிட்ட அவன் இன்னும் இறுக்கமாக அணைத்துக் கொண்டான்.

அன்றைய தினசரி பத்திரிகைகள் மேசையின் மேல் இருந்தன. அவை ஒவ்வொன்றும் ஜெர்மனியின் அரசியல் நிலபரத்தை விளக்கியிருந்தன. நாஸிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் செய்தித்தாள்கள் நாட்டின் பஞ்சத்தையும் அரசாங்கத்தின் செயலாக்கமின்மையையும் விமர்சித்திருந்தன.



தான் நாட்டின் தலைவராக வரப்போகும் நாளில் அந்த பத்திரிகைகளின் தலைப்புச் செய்தி எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பார்த்து உள்ளுக்குள் மகிழ்ந்து கொண்டான். அந்த நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதும் அவனுக்கு ஓரளவு தெரிந்திருந்தது.

பத்திரிகைகளை தூக்கி ஓர் ஓரமாக வீசினாள் ஜிலி. அவளுக்கு கோபமாக இருந்தது. தனது மடியில் தலை சாய்த்துப் படுத்திருக்கும் போது அவன் தன்னைத்தவிர வேறு எதைப்பற்றியும் சிந்திக்கக் கூடாது என்று பெண்களுக்கு இருக்கும் இயல்பான சிந்தனை அவளுக்குள் சற்று அதிகமாகவே காணப்பட்டது.

மடியில் இருந்து அவனை விலக்கிக் கொண்டு எழுந்தாள். ஹிட்லருக்கு சிரிப்பாக இருந்தது. அவளை மீண்டும் அருகில் அமர்த்தினான். அவள் விருப்பமில்லாதவள் போல விருப்பத்துடன் அமர்ந்து கொண்டாள்.

இப்பொழுது ஹிட்லர் சுற்றி வளைக்காமல் நேரடியாகவே ஆரம்பித்தான். அவனது கை சென்ற இடம்... ஜிலியின் கன்னங்கள் சிவந்திருந்தன. அவள் மெதுவாக முணு முணுத்தாள். உதடுகள் கழுத்து-அதற்கு கீழே... என்று ஹிட்லர் முன்னேறிக் கொண்டிருந்தான். அத்தனைக்கும் சர்வ வசதியாக ஆடைகளுக்கு விடை கொடுத்து தன்னை தயார்படுத்திக் கொண்டாள் ஜிலி.

ஜிலியுடனான யுத்தம் ஆரம்பமானது. அறை முழுவதும் வித்தியாசமான சத்தங்கள்...

✪☆✪

**எ**ந்தவொரு கட்சியினாலும் உறுதியான அரசாங்கத்தை அமைக்க முடியாதபடி 1930ம் ஆண்டு தேர்தல் பெறுபேறுகள் அமைந்துவிட்டதால் அதிபர் புரூனிங்கின் அரசு எப்போது வேண்டுமானாலும் விழலாம் என்ற நிலையில் தள்ளாடிக் கொண்டிருந்தது.

ஹிட்லர் பெருமளவிலான மக்கள் ஆதரவுடன் எதிரணியில் இருந்தான். அவனது ஒவ்வொரு காய் நகர்த்தலும் புரூனிங்கின் அரசாங்கத்தை சங்கடத்துக்கு உள்ளாக்கும் வகையிலேயே அமைந்திருந்தது. இதனால் ஆத்திரமுற்ற அரச நிருவாகம் நாஸிகளுக்கு சார்பான எஸ்.ஏ.படைப்பிரிவுக்கு தடை விதித்தது.

இந்த அமைப்பு பல வீதிப்போராட்டங்களை நடாத்தியிருந்தது. அதனை காரணம் காட்டி பாதுகாப்பு அமைச்சராக இருந்த குரோனர் என்பவரின் உத்தரவின் பேரில் எஸ்.ஏ.அமைப்பு தடை செய்யப்பட்டது. ஆனால் இந்த தடை தொடர்பாக பலத்த கண்டனங்கள் எழுந்தன. மாக்ஸிச வாதிகளின் சதிப்புரட்சிகளின்போது இந்த அமைப்பை பயன்படுத்தலாம் என்பதால் அதனை தடை செய்தது தவறென்று சுட்டிக் காட்டி ஜெர்மனியின் முன்னாள் மன்னர் அரசாங்கத்தலைவர்களுக்கு கடிதம் எழுதினார். பின்னர் இந்த பாதுகாப்பு அமைச்சர் தனது பதவியை இராஜிநாமா செய்ய வேண்டி ஏற்பட்டது. இதனையடுத்து அரசாங்கத்துக்குள் ஏற்பட்ட பிரச்சனைகளால் புரூனிங் பதவி விலகினார். ஆளும் கட்சிக்குள் நடத்தப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பொன்றின் மூலம் ஒரு பணக்கார மனைவியின் பணக்காரக் கணவனான பிரான்ஸ் வான் பாபென் (Franz von papen) என்பவர் அதிகார பீடத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இவர் மிகவும் மென்மையான போக்குடையவர். பாரியளவிலான கைத்தொழிலாளர்களுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தவர். சிறந்த இராஜதந்திரி என சகலராலும் மதிக்கப்பட்டவர்.

இவர் அதிகாரத்துக்கு வந்ததும் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் சுமுகமான போக்கை கடைபிடிக்க ஆரம்பித்தார். அதன்படி எஸ்.ஏ. அமைப்பு மீதான தடையை நீக்கிய தோடு நாட்டில் ஸ்திரத்தன்மையை தோற்றுவிக்க உடனடியாக தேர்தல் ஒன்றை நடத்தவும் சம்மதித்தார்.

இதனடிப்படையில் 1932ம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற தேர்தலில் ஹிட்லரின் நாஸி கட்சி நாட்டின் மொத்த வாக்குப் பதிவில் 37.6 சதவீதத்தைப்பெற்று 230 ஆசனங்களைக் கைப்பற்றியது. ஏனைய ஆசனங்கள் பல்வேறு கட்சிகள் மத்தியில் பிரிந்து சென்றன. அமையப் போகும் அரசாங்கத்துக்கு யார் தலைமை வகிப்பது என்பது தொடர்பான பேச்சு வார்த்தை ஆரம்பமானது.

கூட்டரசாங்கமொன்றை அமைத்து ஹிட்லரை உப அதிபராக நியமிக்க பாபென் ஒப்புக் கொண்டார். ஆனால் அதை மறுத்துவிட்ட ஹிட்லர் முழு அளவிலான அதிகாரங்களுடன் ஜெர்மன் அதிபராக தானே நியமிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்த ஆரம்பித்ததனால் பேச்சு வார்த்தை முறிவடைந்தது.

ஜெர்மன் அரசியலமைப்பின் படி நாட்டின் தலைவர் Chancellor என்றே அழைக்கப்படுவதால் அது 'அதிபர்' என தமிழில் வழங்கப்படுகின்றது.

ஹிட்லர் நேரடியாகவே பாபெனின் அரசாங்கத்தை எதிர்க்கத்தொடங்கினான். அத்துடன் சிறிய அளவிலான சோசலிச கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் கைகோர்த்து செயற்பட்டதோடு, சபாநாயகரின் ஆதரவையும் தன்பக்கம் ஈர்த்துக் கொண்டான்.

அந்த ஆண்டு செப்டம்பர் மாதம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றின் மூலம் 42க்கு 512 என்ற வாக்கு வித்தியாசத்தில் அரசாங்கத்தை தோற்கடித்தான். ஜெர்மன் வரலாற்றில் இத்தனை அதிகப்படியான வாக்குகளில் நம்பிக்கையில்லா தீர்மானம் ஒன்று வெற்றிபெற்றது இது மாத்திரம் தான்.

அரசாங்கம் கவிழ்க்கப்பட்டதும் மீண்டும் ஒருமுறை நவம்பர் மாதம் 6ம் திகதி தேர்தல் அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்த தடவை ஹிட்லருக்கு எதிர்பாராத அடி விழுந்தது. ஏற்கனவே வெற்றிபெற்றிருந்த பல தொகுதிகளை அவனது கட்சி இழந்தது.

196 ஆசனங்களை மாத்திரமே நாஸிகள் வென்றனர். சிறிய பல கட்சிகளின் ஆதரவுடன் பாபெனின் அரசாங்கமே திரும்பவும் பதவிக்கு வந்தது. ஆனால் அந்த அரசாங்கத்தினால் உறுதியான ஆட்சியை வழங்க முடியாமல் இருந்தது. பங்காளிக் கட்சிகள் கொள்கை ரீதியில் பல கோரிக்கைகளை முன்வைக்க ஆரம்பித்தன. எல்லாவற்றையும் சமாளிக்க பாபெனினால் முடியவில்லை.

இந்நிலையில் ஹிட்லரை நாட்டின் தலைவராக்குமாறு கோரிக்கைகள் வலுப்பெற ஆரம்பித்தன. குறிப்பாக வர்த்தக சமூகத்தவரும் ஜெர்மன் இராணுவமும் ஹிட்லர் தலைவராக வருவதில் உள்ள இலாபங்களை எடுத்துக் கூறி கூட்டரசாங்கம் ஒன்றுக்கு உடன் படுமாறு கடும் அழுத்தங்களை பிரயோகித்தன.

ஹிட்லருக்கும் பாபெனுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையின் முடிவில் தலைமைப்பதவியை ஹிட்லருக்கு விட்டுக் கொடுக்க அவர் சம்மதித்தார். பாபெனுக்கு உப அதிபர் பதவியை வழங்க ஹிட்லர் உடன்பட்டான். அதன்படி 1933ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் திகதி அடோல்ஃப் ஹிட்லர் ஜெர்மன் சான்ஸலராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டான்.

11 பேர் கொண்ட அமைச்சரவை ஒன்றும் நியமிக்கப்பட்டது. அதில் 3 பேர் மாத்திரமே நாஸிகள். மற்றையவர்கள் பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள்.

ஹிட்லர் பதவிக்கு வந்ததும் நாட்டு மக்கள் மத்தியில் பெருமளவிலான எதிர்பார்ப்பு காணப்பட்டது. உண்மையில் கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாக ஜெர்மனியில் ஒழுங்கானதொரு அரசு அமையவில்லை. அதனால் நாட்டின் அபிவிருத்தி மோசமாக பாதிக்கப்பட்டிருந்தது.

ஹிட்லர் தலைமை பொறுப்பை ஏற்ற சந்தர்ப்பம் நாட்டின் மிகவும் இக்கட்டான நிலை என்று சொல்லக்கூடியதான

**ஷொனு**

நிகழ்வுகள் நடந்த காலமாகும். அதனால் அவனுக்கு புதிய ஜெர்மனியை உருவாக்க வேண்டிய கடப்பாடு மிக அதிகமாகவே இருந்தது. அதனை ஹிட்லர் நிறைவேற்றினான் எனக்கூறமுடியும். ஏனெனில் அவனது நிருவாகத்தில் அந்த நாடு வரலாறு காணாத வளர்ச்சியைக் கண்டது.

பிற்காலத்தில் பாஸிஸ வெறியில் கோடிக்கணக்கான மக்களின் சாவுக்கு காரணமாக இல்லாமல் ஒரு தலைவராக மட்டும் இருந்திருப்பானேயானால் புதிய ஜெர்மனியின் ஈடிணையற்ற தலைவராக ஹிட்லர் மதிக்கப்படுவான் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

ஹிட்லர் ஒரு தலைவராக தனது பணியை ஆரம்பித்தான்.

**வருவான்...**

## காணாமல் போன ஓவியம் கண்டுபிடிப்பு



**இ**ரண்டாம் உலகப் போரின்போது, ஜெர்மனியில் உள்ள அருங்காட்சியகத்தில் இருந்து திடீரென்று காணாமல் போன ஓவியம் அமெரிக்காவுக்குக் கடத்தப் பட்டது.

சமீபத்தில் அமெரிக்க சுங்கத்துறையினர் இந்த ஓவியத்தைக் கைப்பற்றி நியூயோர்க்கில் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் ஜெர்மனிய அதிகாரிகளிடம் அதை ஒப்படைத்தனர்.

'பெண்களின் குளியலறை' என்ற தலைப்பில் அமைந்த இந்தப் பாரம்பரிய ஓவியத்தின் பெறுமதி சுமார் 100 கோடி ரூபாய் ஆகும். ■

## பொலிஸை திகைக்க வைக்கும் வழக்கு

**அ**மெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் உள்ள இரவு நேரக் கேளிக்கை விடுதியில் காபரே நடனமாடும் அழகி அவள். அவளது வேலை, அரைகுறை ஆடையுடன் நடனமாடுவது மற்றும் விடுதிக்கு வரும் ஆண்களுடன் சேர்ந்து குடித்து, அந்த விடுதிக்கு வருமானத்தை ஏற்படுத்திக் கொடுப்பது.

ஒருநாள் அப்படிக் குடித்து விட்டு அந்த அழகி காரோட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தி விட்டாள். குடித்து விட்டுக் காரோட்டியதற்காக பொலிசார் அவள் மீது வழக்குத் தொடர்ந்தார்கள்.

"என்னைக் குடிக்க வைத்தது எனது முதலாளியின் குற்றம். அவர்தான் குற்றவாளி. அவர்தான் விபத்துக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும்" என்று அந்த அழகி கூறுகிறார்.

ஆனால் அந்த முதலாளியோ, "இது எனது தவறல்ல. குடித்து விட்டு வண்டி ஓட்டியது அந்த அழகியின் தவறே." என்று வாதிடுகிறார்.

இந்த வழக்கைத் தொடுத்த பொலிஸ் திகைக்கிறது. இருப்பினும் டெக்ஸாஸ் நீதிமன்றத்தால் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது. ■

## கலக்குது பாரு கவர்ச்சி



**டெ**ன்னிஸ் பெண்கள் பிரிவில் முதல் நிலை வீராங்கனைக்கு இல்லாத மதிப்பு ரஷ்யாவின் அன்னா கோர்னிகோவாவுக்கு உண்டு. 'கவர்ச்சிப் புயல்' என்ற பட்டத்தை டென்னிஸ் உலகில் காலடி எடுத்து வைத்த மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே எடுத்து விட்டார் அன்னா.

டென்னிஸ் போட்டிகளில் மிகவும் பிரபலம் வாய்ந்த 'விம்பில்டன்' போட்டியில் கோர்னிகோவா பங்கேற்கவில்லை. 'கவர்ச்சிப்புயல்' டென்னிஸ் களத்தில் இல்லாதது பெருங்குறை என நினைத்த, இலண்டன் பத்திரிகை ஒன்று புதிய புயலைத் தேடி உருவாக்கும் வேலையில் இறங்கியது.

ஒஸ்ரிய டென்னிஸ் வீராங்கனை பார்பரா ஷெட் இந்தப் பத்திரிகையில் விழ, பார்பரா பற்றிப் பக்கம் பக்கமாக எழுதியது. அதுமட்டுமன்றி பார்பராவைப் பல கோணங்களில் படமெடுத்து, கலக்கலாக அலங்கரித்தது. எதிர்பார்த்தது போலவே பார்பராவின் மவுஸ் டென்னிஸ் களத்தில் பரபரப்பாக அடிபட்டது.

பார்பரா களமிறங்கிய போட்டிகளில் இரசிகர்கள் கூட்டம் 'ஓஹோ' வென வரவேற்பளித்தது. தட்டுத் தடுமாறி இரண்டு சுற்றுக்கள் முன்னேறிய பார்பரா மூன்றாவது சுற்றில் ஜெலினா டொகிச்சிடம் தோற்றுப்போனார்.

"ஒழுங்காகப் பயிற்சிகளில் ஈடுபடாமல், ஃபோட்டோவுக்குப் போஸ் கொடுத்துக் கொண்டு திரிந்ததால் போட்டிகளில் ஒழுங்காக விளையாட முடியாமல் போயிற்றே" என்று புலம்பியுள்ளார் பார்பரா. ■

## காதல் மொழி பேச ஏற்ற இடம்

**ஒ**ரு காதலன், தனது காதலியிடம் காதல் மொழி பேசி கொஞ்சிக் குலவ ஏற்ற இடம் எது என்று கேட்டால், பலர் பூங்கா, கடற்கரை, திரையரங்கு என்று கூறிக் கொண்டு போவார்கள்.

அதெல்லாம் கிடையாது. காதலியின் காதுதான் காதல் மொழி பேசிக் கொஞ்சிக் குலவ ஏற்ற இடம் என்று இங்கிலாந்து ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளார்கள். அதிலும் இடது காதுதான் அதி விசேடமாம்.

இதற்கு இங்கிலாந்து ஆய்வாளர்கள் கூறியிருக்கும் காரணம் இது.

இடது காதை மூளையின் வலப்புறப் பகுதி கட்டுப்படுத்துகிறது. எனவே அதில் தான் உணர்ச்சிகரமான சொற்களைப் பதிவு செய்து வைக்க முடியும். ■

## 'விடுமுறை' மனைவிகளின் சோகக்கதை



**வெ**ளிநாட்டில் வேலை பார்க்கும் இந்திய ஆண்கள் பலர் இப்படி ஒரு மோசடியில் ஈடுபட்டு வருவது இந்தியாவில் வாடிக்கையாகி விட்டது.

விடுமுறை காலத்தில் 2 மாதம் இந்தியாவில் தங்க நேரிடும் போது, கிராமப் பெண்களை மனைவியாக்கிக்கொள்கிறார்கள். விடுமுறை நாட்களில் அவர்களுடன் உல்லாசமாக இருந்து, அவர்களுக்கு குழந்தைகளைப் பரிசாகக் கொடுத்து விட்டு, மறுபடி வெளிநாட்டுக்குப் பறந்து விடுகிறார்கள்.

தாலியோடு குழந்தையையும் சுமக்கும் பெண்களின் வாழ்க்கையோ கேள்விக் குறியாகி விடுகிறது. அப்பெண்ணை இரண்டாம் தாரமாக்க யாரும் முன் வருவதும் இல்லை. இதனால் பல இளம் பெண்களின் வாழ்க்கை இருண்டு போயிருக்கிறது.

இப்படி வெளிநாட்டில் வேலை செய்யும் வாலிபர் ஒருவரால் சமீபத்தில் ஏமாற்றப்பட்ட பெண் பல்ஜிந்தர் கவுர். பஞ்சாப்பைச் சேர்ந்த இவர் ஒரு பட்டதாரி.

அழகு தேவதையான பல்ஜிந்தர், நரீந்தர் சிங் என்ற இளைஞரில் கண்களில் பட்டார். நரீந்தர் சிங் அமெரிக்காவில் சாரதியாக வேலை பார்ப்பவர். 2 மாத விடுமுறையில் இந்தியாவுக்குச் சென்றார்.

பல்ஜிந்தரின் பெற்றோரிடம் சென்று நரீந்தர், தனக்கு வரதட்சணை, எதுவும் தேவையில்லை என்றும், திருமணமான பின் பல்ஜிந்தரை அமெரிக்கா அழைத்துச் சென்று விடுவதாக 'ஆசை வார்த்தை' கூறி பல்ஜிந்தரைத் திருமணம் செய்து கொண்டார்.

2 மாத காலம் பல்ஜிந்தருடன் உல்லாசமாக வாழ்க்கை நடத்திய நரீந்தர், மனைவியை இந்தியாவில் விட்டு விட்டு, அமெரிக்கா சென்று விட்டான். இது நடந்தது 1993ம் ஆண்டு.

போனவர் போனவர்தான். அதன் பின் பல்ஜிந்தரைப் பார்க்க நரீந்தர் ஒரு முறை கூடச் சென்றதில்லை. தனது வாழ்க்கையைப் பறிகொடுத்து விட்டு, பெற்றோருடன் வசித்து வருகிறார் பல்ஜிந்தர்.

இவரைப் போல் ஏராளமான இந்தியப் பெண்கள் விடுமுறை மனைவிகளாக மாறி எதிர்காலத்தைத் தொலைத்துவிட்டுக் கண்ணீரில் நனைந்து கொண்டிருக் கிறார்கள்.



## சாதனைக்காக சாகசம்

ஒருசாண் வயிற்றுக்காக மனிதன் என்னவெல்லாம் செய்ய வேண்டி இருக்கிறது? அந்தரத்தில் கயிற்றைக்கட்டி விட்டு, அதன் மேல் அநாயாசமாக நடந்து காசு சம்பாதித்து, அன்றாட வாழ்க்கையை ஓட்டுபவர்களைப் பார்த்திருக் கிறோம்.


படத்தில் அந்தரத்தில் கம்பியைக்கட்டி அதன் மேல் நடப்பவர் பெயர் ஜேகோச்ரேன். சாதனை செய்வதற்காக இந்தச் சாகசத்தைச் செய்யும் கோச்ரே னின் வயது 56.

'காற்றின் மன்னர்' என்று பெயரெடுத்த இந்த 56 வயது இளைஞர் அந்தரத்தில் காட்சியளிப்பது கனடா நாட்டில் ஓடும் 'லவ் நதி'யின் மேலே. 'லவ் நதி'க்கு மேலாக 90 மீட்டர் உயரத்தில் கம்பியைக் கட்டி, அதன் மேல் நடந்தார். பின்புறத்தில் கனடா நாட்டின் வானுயர்ந்த கோபுரங்கள் காட்சியளிக்கின்றன.

## படகுப் போராட்டம்

படத்தைப் பார்த்தால், படகுப் போட்டி ஒன்று நடைபெறுகிறது என்று நினைக்கத் தோன்றும். ஆனால் உண்மை அதுவல்ல. படகுகளில் ஊர்வலமாகச் சென்று மீனவர்கள் நடத்திய போராட்டம் அது. ஹொங்கொங் நாட்டில் ஆழமற்ற கடல் பகுதியில் படகுப் போட்டி நடத்தப்படுவதால் அங்கு மீன்வளம் பாதிக்கப்படுகிறது, என்று கூறி மீனவர்கள் நடத்திய போராட்டம்தான் அது.





## நீச்சலடிக்கச் செல்லும் நாரைகள்

வெய்யில் கொடுமை நம் நாட்டின் சில பகுதிகளில் மாத்திரமன்றி ஐரோப்பிய நாடுகளிலும் உள்ளது போல் தெரிகிறது. ஸ்பெயின் நாட்டில் வெய்யில் அதிகமாக இருப்பதால், டோனானா தேசியப் பூங்காவில் வளர்க்கப்படும் நாரைகள் செயற்கை ஏரியில் நீந்துவதற்காக அங்குள்ள ஊழியர்களால் அழைத்துச் செல்லப்படுகிறது. இவை நீர்நிலைகளில் நீந்தி உஷ்ணத்தைக் குறைத்துக் கொள்வதற்காகவே, இந்தச் செயற்கை ஏரி அமைக்கப்பட்டுள்ளது. கடும் வெய்யிலுக்கு இப்படியென்றால், கடும் குளிருக்கு இந்த நாரைகள் என்ன செய்யும் என்கிறீர்களா? யாரும் அழைத்துச் செல்லாமலேயே அருகில் இருக்கும் ஆபிரிக்க நாடுகளுக்குப் பறந்துவிடும். குளிர் குறைந்ததும் மறுபடி இவை நாடு திரும்பி விடும்.




## சின்ன ரோபோ

இப்போதெல்லாம் ஆளுயர ரோபோக்கள் உலகெங்கும் தயாரிக்கப்பட்டு, சந்தையில் விடப்பட்டுள்ளன. அருகே காணப்படும் இந்த ரோபோவின் உயரம் வெறும் இரண்டே அடிதான். நிறை நாலரைக்கிலோ. அதனாலென்ன, உயரமான மற்ற ரோபோக்கள் செய்யும் வேலைகள் அனைத்தையும் இந்த ரோபோவால் செய்ய முடியும். ஜப்பான் அறிவியல் தொழில் நுட்ப பிரிவால் உருவாக்கப்பட்ட இந்த ரோபோ, கோலாலம்பூரில் நடைபெற்ற 'எக்ஸ்போ சயன்ஸ் அன்ட் டெக்னோலொஜி 2001' கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டது.

## ரோமானிய ஆடை அணிவகுப்பு

முகம் மட்டும் தெரியத்தக்கவாறு சுற்றிலும் பட்டுக் குஞ்சங்களால் அழகு படுத்தப்பட்ட ஆடையை அணிந்து கொண்டு கடைக்கண் பார்வையை வீசும் இந்த அழகி இத்தாலி நாட்டைச் சேர்ந்தவள்.

இத்தாலியத் தலைநகர் ரோமில் அண்மையில் நடந்த நவீன ஆடை அணிவகுப்பில் பவனி வந்த இந்த அழகி அணிந்திருக்கும் ஆடையை வடிவமைத்தவர் லோரென்ஸோ ரிவா. இத்தாலி நாட்டைச் சேர்ந்த லோரென்ஸோ இந்த மாதிரி ஆடை களை வடிவமைப்பதில் கைதேர்ந்த வர்.



## மறுபடி இணையும் மாதவன்-ஜோதிகா

பல இந்திப் படங்களைத் தயாரித்த விக்ரம் சிங் இப்போது ஒளிபதிவாளர் ஜீவா இயக்கத்தில் ஷாம்-சிம்ரான்-ஜோதிகா நடிக்கும் '12பி' என்ற படத்தைத் தயாரித்து வருகிறார். இதையடுத்து இவர் 'அச்சம் தவிர்' என்ற படத்தைத் தயாரிக்கவுள்ளார்.

'டும் டும் டும்' வெற்றிப் படத்தில் இணைந்து நடித்த மாதவன்-ஜோதிகா மறுபடி இணைந்து இப்படத்தில் நடிக்கிறார்கள். இவர்களுடன் நாசர், தலைவாசல் விஜய், சார்லி, ஷோபனா உட்பட பலர் நடிக்கின்றனர். மணிரத்னத்தின் உதவியாளராகப் பணியாற்றிய சிவகுமார் இப்படத்தை இயக்குகிறார்.

ஒளிப்பதிவு: வினோத், இசை: 'வி.ஐ.பி' புகழ் ரஞ்சித் பரோட். கதை-திரைக்கதை-வசனம்: ஆர்.செல்வராஜ்-சிவகுமார்.

இப்படத்தில் இடம் பெறும் 3 பாடல்கள் முதல் முறையாக தென் அமெரிக்க நாடுகளான பிரேஸில் மற்றும் மெக்ஸிகோவில் படமாக்கப்படவுள்ளன.

## சௌத்ரியின் 'காதலுக்கு மரியாதை'

ஆர்.பி.சௌத்ரி தற்போது தயாரிக்கும் படங்களில் ஒன்று 'அற்புதம்'. இப்படத்தின் மூலம் நாயகனாக அறிமுகமாகிறார் நடன இயக்குநர் லாரன்ஸ்.

தமிழில் வெளியாகும் அதே நேரத்தில் தெலுங்கிலும் 'அற்புதம்' படத்தை மொழிமாற்றி வெளியிடவுள்ளார் சௌத்ரி. தெலுங்கு 'அற்புதத்'திற்கு தமிழில் பெருவெற்றி பெற்ற 'காதலுக்கு மரியாதை' படத்தின் பெயரைச் சூட்டியிருக்கிறார்.



நெப்போலியன்-ஜெயசீல் படம்: கலகலப்பு

## பெயரை மாற்றும் நடிகரும் நடிகையும்

பிரசாந்த் நடித்து வரும் 'மஜ்னு' படத்தில் அவரது பெயர் 'ரீஸ்.பிரசாந்த்' என்று போடப்பட்டுள்ளது. 'ரீ'என்பது அவரது தந்தை தியாகராஜன். அதென்ன எஸ்? பிரசாந்தின் முழுப்பெயர் ஷோகித் பிரசாந்த். என் ஜோதிடப்படி இப்போது 'ரீஎஸ்.பிரசாந்த்' என்று மாற்றி வைத்துள்ளார்.

இதே நேரம் அஜித் நடிக்கும் 'பூவெல்லாம் உன்வாசம்' படத்தில் ஒரு பாடலுக்கு நடனமாடும் முன்னாள் உலக அழகி பிரியங்கா சோப்ராவுக்கும், 'சுவாசம்' பட நாயகி பிரியங்கா திரிவேதிக்கும் ஒரே பெயர்.

பெயர்க் குழப்பம் வராமல் இருக்க யாராவது ஒருவரது பெயரை மாற்ற வேண்டும் எனக்கூற, முன்னாள் அழகி மறுத்துவிட்டார். 'சுவாசம்' நாயகி பிரியங்கா திரிவேதி தனது பெயரை மாற்றச் சம்மதித்துள்ளார்.

## 'கிளிக்'கில் கீது இல்லை

பிரபு-கார்த்திக் இணைந்து நடிக்கும் 'க்ளிக்' படத்தில் மலையாள நடிகை கீது மோகன் தாஸ் நாயகியாக நடிப்பார் என்று முதலில் அறிவிக்கப்பட்டது. இப்போது கீது 'க்ளிக்'கில் நடிக்கவில்லை என்று கூறியுள்ளார் தயாரிப்பாளர் கப்பையா.

தமிழில் தற்போது படவாய்ப்புகளின்றி இருக்கும் மீனா-தேவயானி ஆகியோர் 'க்ளிக்' படத்தின் நாயகிகளாக நடித்து வருகின்றனர்.

## கவர்ச்சி காயத்ரி

பெரிய திரையில் வாய்ப்பில்லாமல் போனவர்கள் தான் சின்னத்திரைக்குச் செல்வார்கள். காயத்ரி ஜெயராம் விஷயத்தில் இதில் உல்டாவாகி இருக்கிறது.

சின்னத்திரையில் 'டெலிபோன் மணிபோல்' என்ற நிகழ்ச்சியைத் தொகுத்து வருவதுடன் மாடலிங்கும் செய்து வந்த காயத்ரிக்கு, பிரபுதேவா ஜோடியாக 'மனதைத் திருடி விட்டாய்' படத்தில் நடிக்கும் வாய்ப்பு வந்தது.

உடனடியாக ஒப்புக் கொண்டு, பிரபுதேவாவுக்கும் பிடித்தவராகி விட்டார் காயத்ரி. முதல் படம் வெளிவர முன்னரே பிரபுதேவா ஜோடியாக 'சார்லி-சாப்ளின்' படத்தில் நடிக்கிறார்.

முதல் படத்திலேயே மும்தாஜ் ரேஞ்சுக்கு போய் ஆடைகளைக் களைந்து நடிக்க ஆரம்பித்து விட்டார் காயத்ரி. 'இப்படி நடிச்சாத்தான் முன்னுக்கு வரமுடியும்' என்று வேறு கூறி இப்படி அசத்துகிறார்.



காயத்ரி ஜெயராம்

## பெயர்க் குழப்பம்

காயத்ரி ஜெயராம் கதாநாயகியாக அறிமுகமாகும் 'மனதைத் திருடி விட்டாய்' படம் வளர்ந்து வருகிறது. இதேவேளை நடன இயக்குநர்களான ரகுராம்-கிரிஜா தம்பதியின் மகள் காயத்ரி ரகுராம் 'என்ன சொல்லப்போகிறாய்' படத்தில் கதாநாயகியாக அறிமுகமாகிறார்.

இந்த இரு நாயகிகளும் ஒரே விதமான பெயர்களுடன், வந்திருப்பதால் பெயர்க்குழப்பம் ஏற்படுகிறது. அதனால் இருவரில் ஒருவர் விரைவில் பெயர் மாற்றம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## முகப்பில்

விக்ரம்-லைலா படம்: தில்

பிரியங்கா திரிவேதி படம்: $H_2O$

## நடிகர் திலகத்தின் புதிய படம்

அண்மையில் காலமான நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த மலையாளப்படம் ஒன்று விரைவில் தமிழில் வெளியாகவுள்ளது. சில வருடங்களுக்கு முன் மலையாள சூப்பர் ஸ்டார்களில் ஒருவரான மோகன்லாலுடன் இணைந்து நடிகர் திலகம் நடித்த மலையாளப் படம் 'யாத்ரா மொழி'.

பிரதாப் போத்தன் இயக்கிய இப்படத்தில் நடிகர் திலகம் தமிழ் பேசி நடித்திருக்கிறார். எனவே 'யாத்ராமொழி' தமிழில் மொழிமாற்றப்பட்டாலும் நடிகர் திலகத்தின் சிம்மக்குரல் தமிழிலும் ஒலிக்கும்.

பிரபல மலையாளப்பட இயக்குநர் பிரியதர்ஷனின் கதையமைப்பில் உருவான இப்படத்தின் கதை பல வருடங்களுக்கு முன் நடிகர் திலகம் நடித்துப் பெருவெற்றி பெற்ற 'அந்தமான் காதலி' படக்கதையை ஒத்தது.

இதில் நடிகர் திலகத்தின் மகனாக மோகன்லால் நடிக்கிறார்.

## கமல் தலையிட்டும் பயனில்லை


கமல் தற்போது நடித்து வரும் 'பம்மல் கே.சம்பந்தம்' படத்தில் தேவயானி நடிப்பதாக முதலில் அறிவிக்கப்பட்டது. தேவயானியின் திடீர் திருமணத்திற்குப் பின் 'பம்மல் கே.சம்பந்தம்' படத்தில் இருந்து அவரைத் தூக்கிவிட்டு, ஸ்நேகாவை போட்டனர். இந்த விஷயம் கமல் காதுக்கு எட்ட, அவர் தலையிட்டு மறுபடி தேவயானி நடிக்கவைக்கும்படி கூறினார். ஸ்நேகாவை வைத்து சில காட்சிகள் படமாக்கப்பட்டு விட்டது. அவரை மாற்றினால் சில லகரங்கள் நஷ்டம் ஏற்படும் என்று கமலிடம் கூறி, மறுபடி தேவயானி நடிக்க வைக்க முடியாதென்று விட்டார் தயாரிப்பாளர்.

## உயர்த்தி விட்டார் லைலா

'பார்த்தேன் ரசித்தேன்', 'தீனா' போன்ற படங்களின் வெற்றியை அடுத்து 'தில்' படத்தில் நடித்து முடித்து விட்டு 'காமராசு' படத்தில் நடித்து வருகிறார் லைலா.

சிறிது கால இடைவெளிக்குப்பின் மறுபடி தொடங்கப்பட்டிருக்கும் 'காமராசு' படத்தின் தயாரிப்பாளரும் மாறிவிட்டார்.

தற்போதைய நிலவரப்படி புதிய தயாரிப்பாளரிடம் சென்று அதிக சம்பளம் கேட்டு வாங்கி விட்டார் லைலா.



ரஞ்சனா
படம்: லவ்மேரேஜ்

## ஸ்ரீ வித்யா அஞ்சலி

மறைந்த இயக்குநர் திருப்பதிசாமிக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவரது நண்பரும் பத்திரிகையாளருமான ஸ்ரீகௌதம் என்பவர், 'ஓ.. திருப்பதி' என்ற பெயரில் ஒரு கையடக்கக் கவிதை நூலை வெளியிட்டுள்ளார்.

## பானுப்பிரியா கும்பிடு

சத்யராஜை வைத்து 'கட்டளை' என்ற படத்தைச் சொந்தமாகத் தயாரித்துக் கையைச் சுட்டுக் கொண்டவர் பானுப்பிரியா. இவர் இப்போது சின்னத்திரைத் தொடர்களில் நடித்து வருகிறார்.

சமீபத்தில் சத்யராஜின் ஜோடியாகப் புதிய படமொன்றில் நடிக்க பானுப்பிரியாவைக் கேட்டபோது, சின்னத் திரை ஒன்றே போதும் என்று கும்பிடு போடாத குறையாக அந்த் தயாரிப்பாளரைத் திருப்பி அனுப்பி விட்டார்.

## சேகரிக்கிறார் செல்வமணி

அன்றாட அரசியலில் நடக்கும் சம்பவங்களை வைத்துப் படமெடுப்பதில் கில்லாடி ஆர்.கே.செல்வமணி.

அண்மையில் கலைஞர் மு.கருணாநிதியின் கைது சம்பந்தப்பட்ட அனைத்துப் பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சி செய்திகளைச் சேகரித்து வருகிறார்.

செல்வமணியின் அடுத்த படத்தின் கதை கலைஞர் கைது செய்யப்பட்டது சம்பந்தப்பட்டதோ, யார் கண்டது?

## விரைவில் வெளியீடு

கே.பாக்யராஜ் தயாரிப்பில், அவரது சிஷ்யர் பாண்டியராஜன் இயக்கி நடித்துள்ள 'கபடி கபடி' முடிவடைந்து பல காலமாக முடங்கிக்கிடந்தது. அண்மையில் இப்படத்தைத் தூசு தட்டிய பாக்யராஜ் விரைவில் வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இப்படத்தில் பாண்டியராஜன் ஜோடியாக ரசிகா நடித்துள்ளார்.



முரளி-லைலா
படம்: காமராசு

## காதோடு சொல்லுகிறோம்

கேரளத்திலிருந்து, சில காலம் முன்னர் தமிழுக்கு நடிக்க வந்த அக்கா, தங்கை இருவரும் கொஞ்சக் காலம் தமிழில் வலம் வந்தார்கள். மார்க்கெட் சரிந்ததுடன், இருவரும் வெளிநாட்டு மாப்பிள்ளைகளுக்குக் கழுத்து நீட்டி, வெளிநாட்டில் செட்டிலானார்கள். கணவர்களை உதறி விட்டு மறுபடி நடிக்க வந்த அவர்களுக்கு யாரும் வாய்ப்புக் கொடுக்கவில்லை. அதனால் ஒவ்வொரு படப்பிடிப்புத் தளத்திற்கும் 'விசிட்' அடித்து நடிகர்களைப் பார்ட்டிக்கு அழைக்கிறார்கள்.

பிரமாண்டமான படங்களை இயக்கும் அந்த இயக்குநர் இயக்க, படத்திற்குப் படம் வித்தியாசம் காட்டி நடிக்கும் நடிகர் நடிக்க 'இயந்திர மனிதன்' படத்தைத் தயாரிக்க கனவு நிறுவனம் திட்டமிட்டது. இதற்காக அந்த நடிகருக்குப் பெருந்தொகைப் பணத்தை அட்வான்சாகக் கொடுத்தது. இந்திக்குப் போன அந்த இயக்குநர் திரும்ப நாளாகும் என, நடிகரிடம் கொடுத்த அட்வான்சைத் திருப்பிக் கேட்டது தயாரிப்பு நிறுவனம். பணத்திற்குப் பதில் நகைச்சுவை இயக்குநரை வைத்து தான் நடித்துக் கொண்டிருக்கும் படத்தை 'கனவு' நிறுவனத்துக்குக் கொடுத்து விட்டாராம் நடிகர்.

அதிர்ச்சி கொடுக்கும் அந்த மூன்றெழுத்து நடிகைமீது படப்பிடிப்பின்போது கண்வைத்திருந்தாராம் அந்த ஆக்ஷன் மன்னன் நடிகர். நடிகையோ அவரைக் கண்டுகொள்ளவே இல்லையாம். உடனே நடிகர், நடன இயக்குநரை அழைத்து, நடிகைக்குக் கடினமான நடன அசைவுகளைக் கொடுக்கச் சொன்னாராம். நடிகை மிகச் சிரமப்பட்டாலும் நடிகருக்குப் பணிந்து போகவேயில்லையாம்.

இயக்குவதில் சதமடிக்கும் அந்த 'சிகர' இயக்குநர், தனது நூறாவது படத்தில் தன்னால் அறிமுகமாகி இன்று உச்சத்தில் திகழும் இரண்டு நடிகர்களையும் கௌரவவேடத்தில் நடிக்கக் கேட்டிருந்தாராம். முதலில் இரு நடிகர்களும் 'ஆம்' என்று தலையசைத்த போதிலும், படத்துக்குப் படம் வித்தியாசம் காட்டும் மூத்த நடிகர் நடித்துக் கொடுத்து விட்டார். 'ஸ்டைலான' மற்ற நடிகரோ அமைதியாக இருக்க, அவர் இல்லாமலேயே படத்தை முடித்து விட்டாராம் அந்த இயக்குநர்.

## அர்ஜுன் நடிக்கும் 'அசோகா'

'வைகாசி பொறந்தாச்சு' படத்தில் இருந்து 'தை பொறந்தாச்சு' படம் வரை பல வெற்றிப் படங்களைத் தயாரித்த அம்பாலயா பிரபாகரன் அடுத்து தயாரிக்கும் படத்திற்கு 'அசோகா' என்று பெயரிட்டுள்ளார்.

அர்ஜுன் கதாநாயகனாக நடிக்க, அவருக்கு ஜோடிகளாக இரண்டு நாயகிகள் நடிக்கிறார்கள். நாயகிகள் தேர்வு நடைபெற்று வருகின்றது.

மேலும் ரகுவரன், ராஜீவ், ரஜன பி.தேவ் உட்பட பலர் நடிக்கும் இப்படத்தை இயக்குபவர் மலையாள முன்னணி இயக்குநர் ஷாஜி கைலாஷ்.

'வாஞ்சி நாதன்' படத்திற்குப் பின் ஷாஜி கைலாஷ் இயக்கும் இப்படத்திற்கு இசை: ஏ.ஆர்.ரகுமான், வசனம்: பாலகுமாரன், ஒளிப்பதிவு: சஞ்சீவ் சங்கர்.

## மலையாளத்தில் பார்த்திபன்

மலையாளப்படமொன்றில் நடிக்கவுள்ளார் பார்த்திபன். தனது 'புள்ளகுட்டிக்காரன்' படத்தில் மலையாள நடிகர் சீனிவாசனை நடிக்க வைத்திருந்தார் பார்த்திபன். இப்போது, அந்த சீனிவாசன், பார்த்திபனுக்கு மலையாளத்தில் நடிக்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

பிரபல மலையாள இயக்குநர் சத்யன் அந்திக்காடு இயக்கும் மலையாளப்படத்திலேயே பார்த்திபன் நடிக்கிறார். படத்திற்கு இன்னமும் பெயரிடப்படவில்லை.

பார்த்திபன் பற்றி இன்னொரு தகவல்.

தனது சொந்தப்படமான 'ஏலேலோ' படத்தை இயக்கி நடிக்கும் பார்த்திபன், முதல்முறையாக அப்படத்தில் ஏ.ஆர்.ரகுமானோடு இணைந்து பணியாற்றுகிறார்.

இவர் இப்படத்திற்காக முதல் முறையாக பாடல் ஒன்றைப் புனையவிருக்கிறார்.

## மினி சினி

* 'சிட்டிசன்' படத்தை அடுத்து மோகன் ...ல் ஜோடியாக 'ராவண பிரபு' என்ற மலை...ளப்படத்தில் நடித்து வருகிறார் வசுந்தரா...ன். இப்படத்தில் இன்னொரு நாயகியாக ...டிக்கிறார் வித்தியா.

* 'பிரியமுடன்' படத்தை அடுத்து வின்சென்ட் செல்வா இயக்...த்தில் விஜய் நடிக்கும் படம், தெலுங்கில் வெற்றி பெற்ற பட...மொன்றில் தழுவல் ஆகும். அந்தத் தெலுங்குப் படத்தில் 'பொட்டு ...ம்மன்' நாயகன் வேணு நடித்துள்ளார்.

* 'சேது' வெற்றிப்படத்தைத் தயாரித்த கந்தசாமி அடுத்து 'நீ ...உன்னை அறிந்தால்' என்ற படத்தை தயாரிக்கவுள்ளார். முரளி ...கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தை 'அறுபடை வீடு' படத்தை ...இயக்கி வரும் லோகசந்தர் இயக்கவுள்ளார்.


* 'மாயி' படத்தைத் தெலுங்கில் தயாரித்து வெளியிட்டுள்ள ...ஆர்.பி.சௌத்ரி அப்படத்திற்கு 'சிம்மராசி' என்று பெயரிட்டுள்ளார். ...டாக்டர் ராஜசேகர், சௌந்தர்யா ஜோடி தெலுங்கு 'மாயி'யான ...'சிம்மராசி'யில் நடித்துள்ளது.

* 'மாயன்' படத்தை இயக்கி வரும் பரமேஷ்வர் அடுத்து ...'மாயன்' பட நாயகி ரம்பா தயாரிக்கும் படத்தை இயக்கவுள்ளார். ...இப்படத்தில் இன்னொரு நாயகியாக லைலாவும் நடிக்கிறார்.

* 'குஷாமி' என்ற பெயரில் வெளியான இந்திப்படம் ஒன்று ...றிபெற, உடனே அதைத் தமிழில் மொழிமாற்றி வெளியிடும் ...கள் நடந்து வருகின்றன. இதில் நக்மாவின் தங்கையும் ஜோதிகாவின் ...வுமான ரோஷினி கதாநாயகியாக நடித்துள்ளார்.

...தோன்கு' படத்தைத் தொடர்ந்து எஸ்.ஏ.சந்திரசேகரன் மூன்று ...பட நிறுவனங்கள் தயாரிக்கும் மூன்று படங்களை அடுத்தடுத்து ...விருக்கிறார்.

...'புதுவசந்தம்' முதல் 'வானத்தைப் போல' வரையான விக்ரமனின் ...ங்களுக்கு இசையமைத்த எஸ்.ஏ.ராஜ்குமார், விக்ரமன் அடுத்து ...கும் 'மௌனமே காதலாக' படத்திற்கு இசையமைக்கவில்லை.



ரவிராகுல்-மும்தாஜ்
படம்: மிட்டா மிராசு



பிரசாந்த்-ஜெயா ரே
படம்: சாக்லேட்

திரையுலக மறுபக்கம் 207

தமிழ்நாட்டிலிருந்து மயன்

## தன்னை ஏமாற்றி விட்டதாகப் பேட்டி கொடுக்கும் நடிகை!

பல வித கெட்-அப்களில் இளம் நாயகன் நடித்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் படத்தில் நுப்பறியும் அதிகாரியாக நடித்த நடிகை அப்படத்தின் நாயகனை பத்திரிகைப் பேட்டிகளில் திட்டித் தீர்த்து வருகிறார்.

மீசைக்கார தயாரிப்பாளரின் 'காதல்' படத்தில் நாயகியாக அறிமுகமான அந்த மூன்றெழுத்து நடிகை அதன் பின் 'உச்ச நட்சத்திரத்'திற்கு ஜோடியாக நடித்தார். அப்படங்களின் பெரு வெற்றிகளால் தமிழில் முன்னணிக்கு வந்த அவர் 'சரச' நடிகருடன் ஒன்றாக வாழ்ந்தார்.

அதன் பின் நடிகையின் மார்க்கெட் சரிய ஆரம்பித்தது. இந்த நேரத்தில் நடிகருடனான தொடர்பு துண்டாக நடிகையின் நிலை திண்டாட்டமாகியது.

படவாய்ப்புக்கள் இல்லாமல் தவித்த நடிகை, தனது சொந்த இடமான மும்பைக்கே விரட்டப்பட்டார். அங்கிருந்தபடியே தமிழ் வாய்ப்புக்களுக்குத் தூண்டில் போட்டார்.

தமிழில் மட்டுமன்றி வேறு எந்தமொழிகளிலும் படவாய்ப்பு இல்லாத நடிகை, தனது தங்கையை அழைத்துக் கொண்டு தமிழ்த் திரையுலகிற்கு வந்தார். தமிழ்த் திரையுலகிற்கும் குண்டு நடிகைகளுக்கும் நல்லராசி என்பதால் நடிகையின் குண்டுத் தங்கை தமிழில் பிரபலமாக ஆரம்பித்தார்.

குண்டுத்தங்கைக்கு மெய்ப்பாதுகாவலராக வந்து போன நடிகை, தங்கை மூலம் நடிக்க வாய்ப்புக் கேட்டார். தங்கை மூலம் ஒரேயொரு படத்தில், அதுவும் ஒரு பாடல் காட்சியில் நடனமாடும் வாய்ப்பு நடிகைக்குக் கிடைத்தது.

இந்த வாய்ப்பை 'ஆசை' நாயகன் ஏற்படுத்திக் கொடுத்தார். தான் நடித்த இரண்டெழுத்துப் படத்தில் நடிகையை தன்னுடன் ஒரு பாடல் காட்சியில் நடிக்க வைத்தார் நாயகன்.

இதனால் பெரிதும் மகிழ்ச்சியடைந்த நடிகை, 'ஆசை' நாயகனை ஓஹோ வென்று புகழ்ந்து தள்ளினார்.

ஒரு பாடல் காட்சியில் நடிக்க வைத்த நடிகரைப் புகழ்ந்து தள்ளிய நடிகை பிறகேன், அடுத்தபடத்தில் நடிகர் தன்னை ஏமாற்றி விட்டார் என்று அதற்கு நேர்மாறாக தூற்றினார்?

எல்லாம் காரணத்தோடுதான்.

தமிழ்-தெலுங்கு-இந்தி-மலையாளம்-கன்னடம் என்று எந்த மொழியிலும் படமில்லாமல் கிரிக்கெட் வீரருடன் காலத்தை ஓட்டி வந்த நடிகையை ஒரு கட்டத்தில் அந்தக் கிரிக்கெட் வீரரும் கழற்றி விட்டார்.

மறுபடி நடிக்க முடிவு செய்த நடிகைக்கு யாரும் வாய்ப்பு வழங்கத் தயாரில்லை. உடனே சொந்தப்படம் ஒன்றைத் தயாரிக்க முடிவு செய்தார். 'என்' ஃபிலிம்ஸ் என்ற தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்கினார்.

அதில் கதாநாயகியாக நடித்து இழந்த மார்க்கெட்டை பிடிக்கத் திட்டமிட்டார். படம் வியாபாரமாக வேண்டும் என்பதற்காக, தமிழில் தற்போது பிரபலமாக இருக்கும் குண்டுத் தங்கையை இன்னொரு நாயகியாக்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

இந்த நிலையில் 'ஆசை' நாயகனைப்படத்தில் நாயகனாக நடிக்கக் கேட்டார். நடிகரும் அதற்கு ஒப்புக்கொண்டார். அந்த 'நட்பை' வைத்து தனது 'குடிமகன்' படத்தில் நடிகைக்கு முக்கிய வேடத்தைக் கொடுத்தார் நடிகர்.

இதற்கிடையில் நடிகையின் படத்தில் நடிக்க, நடிகர் பெரியதொரு தொகையைச் சம்பளமாகக் கேட்க, நடிகை பேரம் பேசிப் பார்த்தார். பேரம் படியாததால் நடிகையின் படத்தில் நடிக்க மறுத்து விட்டார் நடிகர்.

இந்தக் கடுப்பில் தான் நடிகர் தன்னை 'குடிமகன்' படத்தில் ஏமாற்றி விட்டதாகப் பேட்டி கொடுத்து வருகிறார்.

## இந்தியில் 'மின்னலே'

'மின்னலே' தமிழில் வெற்றி பெற்றதை அடுத்து, இந்தியில் தயாராக இருக்கிறது. படத்தின் கதை மட்டுமன்றி கதாநாயகன், இசை, இயக்கம் அனைத்தும் இந்திப்படத்தயாரிப்பாளருக்குப் பிடித்துப் போக, தமிழில் நாயகனாக நடித்த மாதவன், இசையமைத்த ஹாரிஸ் ஜெயராஜ், இயக்கிய கௌதம் ஆகியோரே இந்தியிலும் இணைகிறார்கள்.

# நடிப்புச் சுடருக்கு அஞ்சலி

நடிப்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் நடிப்புலக மாமேதை நடிகர் திலகம் சிவாஜி கணேசன். 50 வருடங்களுக்கும் மேலாக இந்தியத் திரையுலகில் பிரகாசித்த நடிப்புச் சுடர் அணைந்து விட்டது.
காலத்தை வென்ற அந்த மகா கலைஞனுக்கு ஒரு புகைப்பட அஞ்சலி.



'அன்னை இல்லம்' வந்த ஜெமினி – சாவித்ரி ஜோடியுடன் தாயார் ராஜாமணி அம்மாள் சகிதம்.



'புதிய பறவை' படப்பிடிப்புக்காக ஊட்டிக்குச் சென்றபோது மனைவி கமலாவுடன் ஆனந்தமாக.



பேரறிஞர் அண்ணாவின் உடல் அருகே எம்.ஜி.ஆர். (தொப்பி கண்ணாடி இல்லாத) உடன் சோகமே உருவாக.



தன்னுடன் 'நவராத்திரி' படத்தில் நடிக்க வந்த புலியோடு நடிப்புப்புலி.

# மாப்பிள்ளை கேட்டுப்பார்...!

வாசற்படிகள் பல ஏறி–உன்
'பாட்டா' தேய்ந்துவிடும்.
உன் மதிப்பும்
ஒருபடி குறைவதாய் உணர்வாய்
மாப்பிள்ளை கேட்டுப்பார்!
***
முகம் சுழிக்காமல் உனக்கு
முன்னால் 'சரி' சொல்லிவிட்டு
முதுகு காட்டியதும்
பின்னால்... 'சாரி' என்பார்கள்.
மாப்பிள்ளை கேட்டுப்பார்..!
***
யாரிடமெல்லாம்–நீ
யாசிக்கக்கூடாதென்று
நினைத்தாயோ
அவர்களிடமெல்லாம்
அடிபணிந்து நிற்பாய்.
மாப்பிள்ளை கேட்டுப்பார்..!
***
நீ போகும் இடமெல்லாம்
எதிரிகள்.. தருணம் வாய்த்ததென்று
உன் காரியத்தைக் கெடுக்க
சனியனாய் முன்னிற்பார்கள்
மாப்பிள்ளை கேட்டுப்பார்..!
***
உன் மகளிடம்
ஒரு குறையும் இல்லாவிட்டாலும்
ஊரார்... பொறாமையில்
இல்லாத கதைகளை இட்டுக்கட்டி
ஓராயிரம் குறைகளை
ஓதக் கேட்பாய்
மாப்பிள்ளை கேட்டுப்பார்...!
***
நீ வரன் கேட்கும் இடத்தில்
ஒருசிலர் அழகு, அந்தஸ்து, அறிவை
எதிர்பார்ப்பார்கள்
ஒரு சிலர் வரதட்சணை எதிர்பார்ப்பார்கள்
ஒரு சிலர் எல்லாவற்றையும்...
ஆனால்... உனக்கோ
ஒன்றிருந்தால்...
இன்னொன்று முட்டுக் கட்டையாகும்.
மாப்பிள்ளை கேட்டுப்பார்..!
***
வசதி இல்லாவிட்டாலும்
'வட்டிக்காவது பணம் வாங்கி
வரம்பு மீறிய வரதட்சணையாவது
தருகிறேன்' என்று தலையசைப்பாய்
ஆனால்...
செல்வந்தர்களிடம்
பல்லிழிப்பதிலேயே காலங்கடந்து
சொல்லி வைத்த மாப்பிள்ளையும்
சொல்லாமல் மறைந்துவிடுவான்...?!
மாப்பிள்ளை கேட்டுப் பார்.
***
ஒரு மாப்பிள்ளைக்காக அனைவரிடமும்
அடிக்கடி–உன்
வார்த்தை உரையிலே
வெட்கத்திரையை கிழித்துப்போட்டு
வழிந்து கொண்டு நிற்பாய்!
***
வரன் கேட்டுக் கேட்டு
ஏமாந்தாலும்
படைத்தவன் படியளப்பான் என்ற
நம்பிக்கையில்
நாளைய விடியலுக்காய் காத்திருப்பாய்
மாப்பிள்ளை கேட்டுப்பார்...!
***
'இவள் எனக்கு
பெண்ணாய்ப் பிறந்ததால்
பிசாசாய் அலைகிறேன்
ஆணாய்ப் பிறந்திருந்தால்
அவஸ்தையே இல்லை'
உள்ளுக்குள் சபித்துக் கொள்வாய்!
மறுகணம்
நான் மட்டுமா..?
இன்னும் எத்தனையோ பேர்
என்னைப் போல...
சமாதானப்பட்டுக் கொள்வாய்!
***
மாதரைப் பெற்றவன்
'மாபாவி' என்று உணர்வாய்!
மாப்பிள்ளை கேட்டுப்பார்...!
***

செல்வி பொ.விஜயமலர், சம்பூர்-04.

# காதல் பரிசு

நான் உன்பின்னே
அலைந்ததற்கு
நீ தந்தாய் பரிசு
அழியாத
காதல் பரிசு.
***
இதயம் சிரித்தது
அன்று அது
சொன்னது ஞாபகம்
வருகின்றது
***
"வேண்டாம் அவள்
பணக்காரி
அவள் அப்பா
பொல்லாதவன்."
***
வலி தாக்கவே
ஞாபகங்கள்
தொடராமல்
கலைகின்றது.
***
நிச்சயமாய் இது
கின்னசில்
பதிய வேண்டும்
அழியாத சுவடுகளாய்
காதலி தந்த
அடி உதை பரிசு என்று.

கா.ரமேஸ்குமார்,
ஆரையம்பதி-02.

# தேன் கிண்ணம்

## இளமையில் காதல்

அப்போதெல்லாம் நீ!
குமரிதான்–ஆனால்
நான் குமரனா?
என்பது எனக்குத்
தெரியாது.
***
நிர்வாணமாய்க்
குளித்ததும்...
நீ பார்க்க
அம்மா முதுகில்
ஒளிந்ததும்...
அப்படியே நினைவுண்டு
அப்போதெல்லாம்–நான்
பல் துலக்கினேனா?
என்பது ஞாபகமில்லை.
***
நீ பேனாபிடித்துப்
படித்த நாட்களில்
எனக்குப் பென்சில்
கொடுத்தது நெஞ்சில் உண்டு.
அப்போதெல்லாம்–நான்
என்ன படித்தேன்..
என்பது நினைவில்லை.
***
தவணை விடுமுறையில்
உனைப் பிரிந்து
தாயோடு போய்விடுவது
தெரியும். ஆனால்
அப்போதெல்லாம்–ஏன்
விடுமுறை
வருகிறது என்பது தான்.
எனக்குத் தெரியாது.
***
அப்போது நீ!
குமரிதான்–நான்
குமரனா? என்பது
எனக்குத் தெரியாது.
ஆனால்...
***
அப்போதே.. நானுன்னை
நேசிக்கிறேன் என்பது
தெரியும்–அன்று
நீயும் என்னை
நேசித்தாயா.. என்பதுதான்.
இப்போதும் எனக்குத்
தெரியாது.

எம்.வதனரூபன், சம்பூர்.

# கணேசா நீ எங்கு சென்றாய்?

எண்ணற்ற வேடங்களை நீ புனைந்தாய்
ஏற்றிருந்த வேடமதாய் நீ மாறி–பார்க்கும்
எம்மையெல்லாம் ஏமாற்றி வாழ்ந்திருந்தாய்
சிம்மக்குரலால் பேசி எம்மை சிக்க வைத்தாய்
சிரிப்பதற்கும் அழுவதற்கும் சிந்திக்க வைப்பதற்கும்
வெறுப்பதற்கும் விசனப்பட்டுத் துடிப்பதற்கும்
வெங்கோபம் கொண்டு வேங்கையெனப்
பாய்ந்து சதி செய்வோர் அனைவரையும்
வேரோடு பெயர்த்தெறிந்து
வெற்றிவாகை சூடுதற்கும் வழி சமைத்தாய்
கற்றவரும் மற்றவரும் உன்னைப்பார்த்தே
கதிகலங்கி நிற்பதற்கும் உன் நடிப்பால்
விதி செய்த வள்ளலே நீ
சதி செய்துவிட்டாயே
கதியற்ற கப்பல்போல் கடல் நடுவே
கலங்கித் தவிக்கின்றோம்
கரைசேர்ப்பார் யாருமின்றி
கலையுலகம் கலங்குகிறது
கணேசா நீ எங்கு சென்றாய்?

நாதன்




# தாழ்வு தேவையில்லை

நம்மையே நாம் நேசிக்காவிட்டால் மற்றவர்களை நம்மால் நேசிக்கவே முடியாது. நாமே தாழ்மையான எண்ணம் கொண்டிருந்தால், மற்றவர்களிடம், நடந்து கொள்ளும் முறையிலேயும் அது பிரதிபலிக்கவே செய்யும்.

நாம் உயரம் குறைவாக இருக்கிறோம் திறமையற்றவர்களாக விளங்குகிறோம் என்று எண்ணம் கொண்டிருப்பது தான் தாழ்வு மனப்பான்மையாகும். எதற்காக நம்மையே குறைவாக நினைத்துக்கொள்ள வேண்டும்.

நம்மிடம் மற்றவர்களைப் போலவே எல்லாவிதமான ஆற்றல்களும் இருக்கின்றன. எந்த விதமான குறையும் நமக்கு இல்லை என்பதனை முதலில் நினைத்துக் கொள்ளவேண்டும்.

நெப்போலியன் குள்ளமானவர். ஆனால் அவர் இதனை குறையாகவே நினைக்கவில்லை. இராணுத்தில் சாதாரண பேர் வீரனாகத்தான் ஆரம்பத்தில் சேர்ந்தார்.

படிப்படியாக முன்னேறி ஃபிரான்ஸ் நாட்டுக்கே அதிபதியாக விளங்கினார். பெரிய சாம்ராஜ்யத்தையே நிறுவினார். தன்னால் முடியும் என்று செயல் பட்டாரே தவிர ஒரு நாளும் தன்னை குறைவாக நினைத்து குன்றிப்போய் விடவில்லை.

கவிஞர் பைரனுக்கு காலில் சிறிது குறைபாடு இருந்தது. அவரால் வேகமாக ஓடுவதற்கும் மலைமேல் ஏறுவதற்கும் முடியாமல் இருந்தது. இதனை ஒரு பொருட்டாகவே அவர் கருதவில்லை. தன்னால் மற்றவர்களைப் போல ஓட முடியவில்லையே என்று நினைக்கவில்லை.

தன்னிடம் இருக்கும் ஆற்றலைப் பயன்படுத்தினார். நீந்தக் கற்றுக் கொண்டார். அவருக்குப் போட்டியாக யாராலும் நீந்த முடியவில்லை. மிகவும் வேகமாக நீந்துபவர் என்ற சிறப்புப் பெற்றார்.

இது மட்டுமா! உலக இலக்கியங்களை எல்லாம் கற்று அறிவை அபிவிருத்தி செய்து கொண்டார். அதன் பயன் அழியாத அற்புதமான கவிதைகளைப் படைத்து உலக மகாகவி என்ற பட்டத்தையும் பெற்றார்.

தாழ்வு மனப்பான்மை கொண்டு இருந்தால் இப்படிப்பட்ட உயர்வான நிலைக்கு வந்திருக்க முடியுமா! தன்னால் நடக்க முடியாமல் போய் விட்டதே இனி மேல் ஒன்றும் செய்ய முடியாது. வாழ்வே அவ்வளவுதான் என்று அவர் ஒரு போதும் எண்ணாத படியினால் தான் வெற்றி பெற்றார்.

கண்ணை இழந்த மில்டன் 'சொர்க்கம் நீக்கம்' என்ற உலகப்புகழ் பெற்ற காவியத்தைப் படைக்கவில்லையா.

'எனக்குத்தான் கண் போய் விட்டதே இனிமேல் எப்படி வாழ்வது?' என்று தாழ்வு மனப்பான்மைகொண்டு மூலையில் போய் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாரா என்ன? இல்லையே!

சொர்க்கம் மீட்சி என்ற புதிய காவியத்தையும் படைத்தார். அல்லவா! இவர் தாழ்வு மனப்பான்மை என்பதை என்ன வென்று அறியாத படியினால்தான் உலக இலக்கியத்தில் இடம் பெற முடிந்தது.

இவர்களைப் போலவே நாமும் தாழ்வுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் நம்மிடம் இருக்கும் ஆற்றலுக்கு முதன்மை அளித்து அதனைச் செயல் வடிவும் பெறச் செய்து வெற்றி பெறுவோம்.

# இந்தவாரம் உங்கள் பலன்

05.08.2001 தொடங்கி 11.08.2001வரை

## சோதிட மாமணி தில்லை

### மேடம்:
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்,) எடுத்த கருமங்களில் வெற்றியும், மனமகிழ்ச்சியும் கிடைக்கும். பொருள் வரவு, சிறந்து விளங்கும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவிகளில் உயர்வுண்டாகும். மாணவர்களுக்குக் கல்வியில் உயர்ச்சி கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள், முதலீடுகளால் இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### இடபம்:
(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி மிருகசீரிடத்து முன்னரை,) மனக்குறை நீங்கி, குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டாகும். எதிர்பார்த்த விடயங்களில் வார இறுதியில் தாமதமுண்டாகும். உத்தியோகத்தில் உள்ளோர் உயர்வடைவர். மாணவர்களுக்குக் கல்வியில் இருந்து வந்த மந்த நிலை நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 06.

### மிதுனம்:
(மிருக சீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) தொழில் நிலையிலும், குடும்பத்திலும் இருந்து வந்த தொல்லைகள் மறையும். பொருள் வரவு சிறந்து காணப்படும். உத்தியோகத்தில் உள்ளோர் உயர்வு பெறுவர். மாணவர்களுக்கு, கல்வித் தடை நீங்கும். விவசாயிகள் வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 05.

### கர்க்கடகம்:
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்,) தொழில் கஷ்டங்கள் தீரும். பணவருவாய், குடும்ப சுகம் சிறந்து விளங்கும். வார இறுதியில் வீண் பிரச்சனை ஒன்று உருவாகும். உத்தியோகஸ்தர்கள், எதையும் திட்டமிட்டு செய்வது நன்மைதரும். மாணவர்களுக்கு கல்வி சிறப்புண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள், குறைந்த இலாப மடைவர்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### சிங்கம்:
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்,) காரியங்களில் வெற்றியும், பொருள்வரவும் சிறந்து விளங்கும். எதிர்பார்த்த சில கருமங்கள் வார இறுதியில் முடிவுறும். உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளின் அனுகூலத்தைப் பெறுவர். மாணவர்களுக்குக் கல்வியில் சிறப்புண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள், இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 02.

### கன்னி:
(உத்தரத்து பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை,) தொழிலில் சிறு பிரச்சனைகள் தோன்றும். குடும்பத்தில் வார இறுதியில் துக்க நிகழ்வு ஒன்று நடந்தேறும். உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளுடன் பகைத்துக் கொள்ளாமலிருப்பது நல்லது. மாணவர்களுக்குக் கல்வி சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 05.

### துலாம்:
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்துமுன் முக்கால்,) மனக்குறை நீங்கும், குடும்பத்தில் மகிழ்ச்சியும், சந்தோஷமும் நிலவும், வீண் பிரச்சனையொன்று வார இறுதியில் மனக்கவலை தரும். உத்தியோகத்தில் உள்ளோர் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது.மாணவர்களுக்குக் கல்வியில் இருந்து வந்த தடைகள் விலகும்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 06.

### விருட்சிகம்:
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை,) தொழில் நிலையிலும், குடும்பத்திலும் கவனமுடன் செயற்படுவது நல்லது. சிறு சிறுபிரச்சனைகள் மனக்கவலைதரும். உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 07.

### கிரக நிலை

| | |
|---|---|
| கர்க்கடகம் | – சூரியன், புதன் |
| தனு | – செவ்வாய், கேது |
| இடபம் | – சனி |
| மிதுனம் | – வெள்ளி, வியாழன், இராகு |

சந்திரன் கும்பம், மீனம், மேடம் ராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### தனு:
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் முன்னேற்றமும், எதிர்பார்த்த கருமங்களில் வெற்றியும் கிடைக்கும். பண வரவு சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் உள்ளோர் உயர்ச்சிகளைப் பெறுவர். மாணவர்களுக்கு நன்மையுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### மகரம்:
(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் விவகாரங்களிலும், குடும்ப விடயங்களிலும், அவதானத்துடன் நடந்து கொள்வது நல்லது. உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து செயலாற்றல் நன்மை தரும். மாணவர்களுக்குக் கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 05.


### கும்பம்:
(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்,) கருமங்களில் வெற்றியும், பண வரவும் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோகஸ்தர்கள், நன்மை பெறுவர். மாணவர்களுக்கு கல்வித் தடை நீங்கி முன்னேற்றம் உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள், இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### மீனம்:
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி,) தொழில் நிலை, குடும்ப நிலை, இரண்டிலும் அவதானம் தேவை. தேக சுகம் பாதிப்புறும். பொருள்வரவு மந்தமடையும். உத்தியோகஸ்தர்கள் கடும் எதிர்ப்புக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்வியில் மந்த நிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள், மத்திம இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 01.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## குழந்தைகளைக் கவனியுங்கள்!



**பெ**ரும்பாலான வீடுகளில் குழந்தைகளால் பெற்றோர் சண்டையிட்டுக் கொள்வது பெரும்பிரச்சனையாகியுள்ளது. இம்மாதிரியான பிரச்சனைகளை எவ்வாறு தவிர்க்கலாம்.

* முதலில் குழந்தைகளை அளவுக்கதிகமாக கொஞ்சுவதைத் தவிர்க்க வேண்டும். இதை நிறுத்தினாலே குழந்தைகளுக்குச் சுயகட்டுப்பாடு வளரும். உதாரணமாக, குழந்தை கீழே விழுந்து விட்டால், "அட என் செல்லமே, இதுதானே உன்னை விழுத்தினது. இந்த இடத்துக்கு உதை" என்று குழந்தைகளைப் பலரும் 'ஏற்றி' விடுகிறார்கள்.

இது முற்றிலும் தவறு. கீழே விழுந்த குழந்தையைத் தூக்கி, வாயே திறக்காமல் தடவிக் கொடுத்து, "பார்த்து நடக்க வேண்டும்" என்று நிறுத்திக்கொள்ள வேண்டும்.

* தொலைக்காட்சிகளில் காட்டப்படும் வன்முறைக் காட்சிகளைக் குழந்தைகள் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும். இவை குழந்தைகள் நல்ல முறையில் வளர்வதைத் தடுக்கும்.

* குழந்தையை மையமாக வைத்துப் பெற்றோர் ஒருவருக்கொருவர் சண்டை போடுவதை அடியோடு நிறுத்த வேண்டும்.

* குழந்தைகள் தவறு செய்தால், அது எந்த மாதிரியான தவறு, அதனால் என்ன பின்விளைவுகள் ஏற்படும் என்பதைக் கவனமாக எடுத்துக் கூற வேண்டும். அதை விட்டுவிட்டு, 'காச் மூச்' என்று கத்தினால் எந்தப் பயனும் ஏற்படாது.

* குழந்தைகள் கேட்பதை எல்லாம் உடனுக்குடன் வாங்கிக்கொடுப்பது என்பது மிகமிகத் தவறு. குழந்தைகள் கேட்பது உண்மையிலேயே அவர்களுக்குத் தேவையா என்பதைப் பெற்றோரே முடிவு செய்ய வேண்டும்.

இனிப்புக்கள், சொக்லேட்டுக்கள் என்று கேட்டால், ஆசைக்கு ஒன்றிரண்டு வாங்கிக் கொடுங்கள். அதிகம் கேட்டால் இவ்வளவும் சாப்பிட்டால் வயித்தில பூச்சி வளரும். பல்லெல்லாம் கறுப்பாகி முகம் அசிங்கமாகி விடும்" என்று சொல்லிப்பாருங்கள். குழந்தைகள் கேட்கும்.

பெற்றோருக்கு அடுத்தபடியாக ஆசிரியர்கள்தான் குழந்தைகளின் முன்னோடிகளாகத் திகழ்கிறார்கள். இவர்களும் குழந்தைகள் வளர்ச்சியில் கவனமாக இருக்க வேண்டும். ■

## பயனுள்ள குறிப்புக்கள்



* உருளைக்கிழங்கு, வெங்காய 'சூப்'கள் செய்யும் போது சிறிதளவு சீஸ் சேர்த்தால், 'சூப்' சுவையாக இருக்கும்.

* எந்தக் காய்கறி சமைக்கும் போதும் மூடி வைத்தே சமைக்க வேண்டும்.

* கடுகு தாளிக்கும்போது, கடுகு வெடித்து நாலாபக்கமும் சிதறாமல் இருக்க, வாணலியை மூடிவிடுவது சிறந்தது. சமையலறைச் சுவரிலும் எண்ணெய் படியாமல் இருக்கும்.

* காய்கறிகளுக்குப் புளி சேர்ப்பதற்கு முன்பாக அவற்றை அரைவேக்காடு வைத்து எடுத்தால் பதமான-சுவையான உணவு கிடைக்கும்.

* காய்கறிகளைத் தண்ணீரில் வேகப் போடுவதற்கு முன்பாக, தண்ணீரைக் கொதி நிலைக்கு வரும் வரைச் சூடேற்றி விட்டுப் பிறகு காய்கறிகளைப் போட்டால் விரைவாக வேகும்.

* காய்கறிகளின் நிறம் மாறாமல் இருக்க, வேக வைக்கும் நீரில் சிறிது உப்புப் போடலாம். ■


## பட்டுச் சேலை பரிசுப் போட்டி

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** JV

பெயர்:....................

முகவரி:....................

....................

தொழில்:....................

கையொப்பம்:....................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 11-08-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
### மாத்தளை வாசகிக்கு அதிஷ்டம்!

**இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்**

திருமதி மீனலோஜினி குமாரவேல்பிள்ளை,
27/2, மாதெலட்ட வீதி, மாத்தளை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


**டா**க்டர் கஸ்தூரி ஷெட்லூரின் முகத்தில் அந்த 'செக்'கைப் பார்த்ததும் எவ்விதச் சலனமும் இல்லை.

மது மனசுக்குள் நினைத்துக் கொண்டாள்.


'சிரித்தால் என்னவாம்? ஒரு சென்டிமீட்டராவது புன்னகை செய்யேன்.'

"அத்தனைப் பணத்தையும் ஃபெஸ்டிவலுக்குச் செலவழிக்கப் போறீங்களா?"

"ஆமாம் மேடம் " என்றாள் மது.

"இது ரொம்ப அநியாயம்.... இதில் ஒரு லட்சத்துக்கு லைப்ரரிக்கு ஒரு பர்ஸன் கம்ப்யூட்டர் வாங்கிரலாம்."

"இல்லை மேடம். இது ஃபெஸ்டி




வலுக்கு....." என்றாள் மது விரோதமாக.

"லெட்ஸ் ஸீ... லெட்ஸ் ஸீ...."

"அதுல மட்டும் கைவைச்சா ரொம்ப கோபம் வரும் !"

"எப்படிக் கிடைச்சது யாரந்த ஆளு?"

"பெரிய இன்டஸ்ட்ரியலிஸ்ட். என்னவோ ..... வி.ஐ.எல்னு கம்பனி!"

பிரின்ஸிபாலின் முகம் வெளிறிப் போனது.

"நீங்க சொல்ற ஆளு வி.ஐ.எல் இன்டஸ்ட்ரியலிஸ்ட் வைரவனையா? அவரையா பார்த்தீங்க நீங்க?"

"ஆமாம் மேடம்!"

"நம்பவே முடியலை. ஒரு வருஷமா அந்தாளோட அப்பாயின்ட்மெண்ட் கேக்கறதுக்குத் தவிச்சுக்கிட்டிருக்கேன். இப்ப அப்பன்னு டாட்ஜ் பண்ணிக்கிட்டிருக்கார்."

"எங்களுக்கு அப்படி ஏதும் சிரமம் இல்லையே காா்டு கொடுத்திருந்தாரு... போய்ப் பார்த்தோம்."

"அவர் விசிடிங் கார்டு உங்ககிட்ட இருக்கா?"

"ஏன் மேடம் அவ்வளவு பெரிய ஆளா அவரு?"

"ஓ மைகாட்! விழாவுக்கு வாராரா அவரு?"

"இல்லை; இத்தாலி போறதா சொன்னாரு. யாரு அவர்?"

பிரின்ஸிபால் "ஈஸ்வரன் அந்த 'பிஸினஸ் வீக்' போனவாரம் இஷ்யுவை எடுங்க!" என்றாள்.

ஈஸ்வரன் எடுத்துக் கொடுத்த இதழின் அட்டைப் படத்தில், கோட்டு , டையெல்லாம் போட்டுக் கொண்டு வைரவன் சிரித்துக் கொண்டிருந்தான்.

"பிஸினஸ் வீக் ... இது அமெரிக்காவில் பப்ளிஷ் ஆகுது." என்றாள் பிரின்ஸிபால்.'India's fortune 500 company, என்று வைரவன் மார்மேல் எழுதியிருந்தது.

"மது அவர் கூட இன்னொரு அப்பாயின்ட் மெண்ட் வாங்கித் தருவியா?"

"செய்றோம் மேடம்."

"அவர் கிட்ட லைப்ரரி பில்டிங்குக்கு டொனேஷன் கேக்கணும்."

"இப்ப இந்தப் பணத்தை விழாவுக்கு....."

"தாராளமா! நல்லா நடத்துங்க..... வைரவன் கண்டாக் வந்ததே நமக்குப் பெருமை, அதிஷ்டம்." என்றாள் பிரின்ஸிபால்.

**ப**த்தாம் தேதியிலிருந்து பந்தல் போட ஆரம்பித்தாயிற்று. அனிதாவுக்கு 'டம் ஷராட்ஸ்', 'கொலாஜ்' போன்ற 'ஆர்ட்' சமாசாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. மது ரொம்ப புத்திசாலித்தனமாக ராக் ஃபெஸ்டிவல், ஒன் ஆக்ட் பிளே, மிமிக்கிரி, மோனோ ஆக்டிங் என்று எடுத்துக்கொண்டு விட்டாள். ஸ்போர்ட்ஸுக்கு ஐரீன் டிகாஸ்டாவும், பேச்சுப் போட்டிக்கு அம்ருதாவும் பொறுப்பு எடுத்துக்கொண்டார்கள். கவிதைப்போட்டியைத் தமிழரசியும் (காலேஜ் பேரு 'தமிழ் அரிசி'), ரிஸப்ஷன் டிபார்ட்மெண்டை வினோதாவும் (வேளாச்சேரி குஷ்பு) எடுத்துக்கொண்டனர். ஹாஸ்டலுக்கு வெள்ளையடித்தார்கள். பெண்கள் பெஞ்ச் மேல் ஏறி தோரணம் கட்டினார்கள். இஷ்டத்துக்கு ரகளையாக இருந்தது. அந்த வாரம் எல்லாருமே டென்ஷனாக இருந்தார்கள். அம்மணி காலேஜில் யூனியனே கிடையாது. யூனியன் ஆரம்பிக்க வேண்டும் என்று பேச்சு புறப்பட்டது.

விழாவுக்கு எக்கச்சக்கத்துக்கு என்ட்ரி வந்தது, நகரத்தின் அத்தனை காலேஜ்களும்-ஐ.ஐ.டி., ஆர்.ஈ.ஸி., கோவை காலேஜ்கள், சின்ன சின்ன ஊர்களிலிருந்து தமிழ்நாடு மாநிலத்தின் அத்தனை ஜில்லாக்களிலிருந்தும் பேர் கொடுத்திருந்தார்கள்.

பன்னிரண்டாம் தேதியே கார்களும் மோட்டார் சைக்கிள்களும் வேன்களும் பறந்தன. அவ்வப்போது ஏதாவது ஒரு மூலையிலிருந்து கைதட்டலும் கும்மாளமும் எழுந்தன. இளைஞர்கள் சிகரெட்டைப் பற்களில் கடித்துக் கொண்டு பாங்கரா டான்ஸ் போல ஆடினார்கள். உலகத்தில் உள்ள அத்தனை வாத்தியங்களும் வந்து இறங்கின. ராக் ஃபெஸ்டிவலுக்காக ஆம்ளிஃபையர் வைத்து மேடையெங்கும் கேபிள்களும், சின்தஸைஸர்களும், ராட்சஸகிதார்களும், சைக்கெடிலிக் விளக்குகளும் பொருத்தப்பட்டன. மரத்தடியில் மாணவர்களும் மாணவிகளும் சகஜமாகப் பழகுவதில் உள்ள இடைவெளி குறைந்து கொண்டிருக்க, மது அவர்கள் அத்தனை



பேர் மத்தியிலும் ஊடாடினாள். மதுதான் தலைவி.

பிஸிக்ஸ் லாபில் பரதநாட்டியம், கெமிஸ்ட்ரி ஹாலில் மிமிக்ரி என்று சிறு குழுக்களாகப் பிரிந்தாலும், சாயங்கால ராக் இசைப் போட்டிக்குத்தான் கூட்டம் அம்மியது. சிகரெட்டுகளில் விநோத வாசனைகள் அடித்தன. மாணவர்கள் பாரபெட் சுவர்களில் உட்கார்ந்து கொண்டு கையில் 'பீர்' வைத்துக் கொண்டு விசில் அடிப்பதில் டாக்டர் பட்டம் பெற்றார்கள்.

யார் பெண்... யார்... ஆண் என்று தெரியாதபடி அத்தனை ஒற்றுமை! அவர்கள் பாஷை, பழக்க வழக்கங்கள் எல்லாமே வயசானவருக்கு வேற்று கிரகத்து மனுஷர்கள் போல தோற்றத்தைத் தந்தன.

உதாரண உரையாடல்-

"எண்ணெய் புண்ணாக்கெல்லாம் இருட்னப்புறம் பாத்துக்கலாம் பாப்லு!"-அவர்கள் இவ்வாறு பேசுவதற்கு மறைமுக அர்த்தங்கள் இருந்தன.

பாய்ஜார்ஜ், ந்யு கிட்ஸ் இன் தி ப்ளாக், மடோனா, எம்ஸி ஹாமர் போன்ற மேற்கத்திய குழுக்கள் பாடிய பாடல்களை இவர்களும் பாடினாலும், நடுவே ஒரு தஞ்சாவூர் காலேஜ் குழு சுத்தமான ராக் துடிப்பில்...

**நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா**

"ரோட்டோரம்வீட்டுக்காரி என் தங்கமே தில்லாலே
ரோசாப்பு சேலைக்காரி தங்கமே தில்லாலே
நான் வாரேன் சாமத்திலே-தங்கமே தில்லாலே
நாதாங்கி போட்டுராதே தங்கமே தில்லாலே..."

என்று பாடியபோது பெண்கள்கூட வாயில் விரல் வைத்து விசிலடித்துப் பார்த்தார்கள். ஸோடியம் விளக்கு நட்ட நடுமைதானத்தில் ஒற்றை நட்சத்திரமாக இருட்டைவிரட்ட, அத்தனை இளைஞர்களும் பெண்களும் விபரீத எண்ணங்கள் இல்லாமல் கைகளைக் கோர்த்துக் கொண்டு தமிழரங்கிலத்தில் எதிர்காலக் கனவுகளைப் புதுப்பித்துக் கொண்டிருந்தார்கள்.

**அ**னிதாவுக்கு 'டம் ஷராட்ஸ்' போன்ற டியூட்டி போர் அடித்தது. மொத்தமே ஆறு டீம்கள் தான் இருந்தன.

ஜட்ஜுகள் அக்கறையில்லாமல் பேசிக் கொண்டிருந்தார்கள். அனிதாவுக்கு மதுவின் மேல் பொறாமையாக இருந்தது. ஏனோ அழுகை வந்தது. 'எப்போ முடியும்' என்று அலுப்பாக இருந்தது.

மதுவை இளைஞர்கள் சூழ்ந்திருந்தார்கள். அவ்வப்போது அவளை முத்தமிட முயன்றவர்களை மிகவும் சாமர்த்தியமாகத் தள்ளித் தள்ளிச் சமாளித்தாள். மதுதான் அந்த இடத்து ராணி. 'எங்கே மது?' என்று எல்லோரும் கேட்டார்கள், லௌட்ஸ்பீக்கர் அவ்வப்போது, "மது தேசாய் கன்ட்ரோல் அறைக்கு உடனே தொடர்புகொள்ளவும்.. ப்ளீஸ்!" என்று கூப்பிட்டது.

கொலாஜ் போட்டிக்கு ஏற்பாடு செய்வதற்குள் இடைவேளையில் மரத்தடியில் போய் சும்மா உட்கார்ந்தாள் அனிதா. யாரோ ஒரு இளைஞன் அங்கே கவிதை எழுதிக் கொண்டிருந்தான். அப்போது சைக்கிளில் வேகமாக சீதாராமன் வந்து இறங்கினான்.

"அனி... அம்மா ஒன்னை அழைச்சுண்டு வரச்சொன்னா!"

"எதுக்கு?"

"எதுக்குன்னு சொல்லலை. அவசரமா கூட்டிண்டு வரச் சொன்னா!"

"எனக்கு நிறைய டியூட்டி இருக்கு சீதா. என்னால இப்ப வர முடியாது. எதுக்குன்னு போய் கேட்டுண்டு வா."

"உன்னைப் பார்க்க யாரோ பையன் வரானாம்!"

அனிதாவுக்கு இது விஷயம் அரசல் புரசலாகத் தெரியும்.

"தெரியும் சீதா. நான் படிச்சுண்டே இருக்கேன்னு சொல்லு சீதா.. எனக்குப் பத்தொன்பது வயசுதானே ஆறதுன்னு அம்மாகிட்ட சொல்லிடு சீதா. எனக்கு இப்ப கல்யாணம் வேண்டாம்னு சொல்லிடு."

"அதெல்லாம் நான் சொல்ல மாட்டேன். நீயே சொல்லிக்கோ."

"வர முடியாதுன்னு சொல்லு. இன்னிக்கு எனக்கு ரொம்ப இம்பார்ட்டெண்ட் வேலை இருக்கு."

"அப்பா கோவிச்சுப்பார்."

"கோவிச்சுக்கட்டும்.. என்ன பண்ணுவா?"

"அப்ப தீர்மானமா வரமாட்டியா?"

"மாட்டேன்."

"சரி... இதுக்குத்தான் பேசாம என்னைக் கல்யாணம் பண்ணிண்டுடேன்!"


"உன்னையா!" என்று அவன் கன்னத்தில் தட்டினாள். சீதாராமன் சைக்கிளில் திரும்பிப் போய்விட்டான். அவன் போன பிறகு அனிதாவுக்குப் பயமாக இருந்தது.

'போய் என்னவென்று விசாரித்து விட்டு வந்து விடலாமா? அடுத்த போட்டி ஆரம்பிப்பதற்கு இன்னும் மூன்று மணி நேரம் இருக்கிறதே' என்று புறப்பட்டாள். அப்பா அம்மா சொன்னதை இதுவரை மீறினதில்லை. என்ன... அப்பா அடிப்பாரா? வளர்ந்த பெண்ணை அடிக்க மாட்டார். அம்மாவாவது எப்போதாவது முதுகில் மொத்துவாள். அப்பா தொட மாட்டார். ஆனால், அந்தப் பார்வை பார்த்தாரானால் தகிக்கும்.

விக்கெட் கேட்டைத் தாண்டிக் கொண்டு பஸ் நிலையத்துக்கு வந்து பல்லவன் ஏற்பாடு செய்திருந்த ஸ்பெஷல் பஸ் வந்ததும் ஏறிக் கொண்டாள். காலியாக இருந்தது. பஸ் புறப்பட்டதும் "எங்கே கிளம்பிட்டே?" என்று சத்தம் கேட்க, திரும்பிப் பார்த்தாள்.

வைரவன்!

[அனிதா வருவாள்...]



## பாப்பா முரசு சிறுகதை

# பீர்பால் எங்கே?

அக்பரும், பீர்பாலும் அடிக்கடி உரையாடுவார்கள். அந்த உரையாடலின்போது, பீர்பாலின் அறிவு பூர்வமான விஷயங்களைக் கேட்டு அளவற்ற மகிழ்ச்சி கொள்வார் அக்பர். அதேசமயம் ஆத்திரமும் கொள்வார்.

அவர் எப்பொழுது ஆத்திரம் கொள்வார். எப்பொழுது மகிழ்ச்சி கொள்வார் என்பதை யாராலும் கண்டு பிடிக்க முடியாது.

மகிழ்ச்சி கொள்ளும் சமயங்களில் பீர்பாலுக்குப் பரிசுகள் கொடுத்துப் பாராட்டுவார். ஆத்திரம் கொள்ளும் சமயங்களில் பீர்பாலை உடனே வெளியேறும்படி உத்தரவிடுவார். ஆத்திரத்தில் அப்படிச் செய்துவிட்டுப் பிறகு மனம் வருந்துவார். அதன்பிறகு பீர்பாலை வரவழைக்க முயலுவார்.

ஒருநாள்–

அக்பருக்கும், பீர்பாலுக்கும் நடந்த உரையாடலின்போது, ஏடாகூடமாக பேச்சு மாறிவிட, அக்பர் ஆத்திரத்துடன், பீர்பாலை உடனே வெளியேறும்படி உத்தரவிட்டார்.

பீர்பாலும் மூச்சுவிடாமல் வெளியேறி விட்டார்.

அவர் எங்கு சென்றார் என்பது யாருக்கும் தெரியாது.

சில நாட்கள் ஓடின.

தனது ஆத்திரத்தை நினைத்து வருந்திய அக்பர், பீர்பாலை உடனே பார்க்க வேண்டும் என்று விரும்பினார்.

பல இடங்களில் காவலர்களை அனுப்பித் தேடினார்.

ஆனால் பீர்பால் எங்கும் கிடைக்கவில்லை.

பீர்பாலை எப்படிக் கண்டுபிடிக்கலாம்? என்று யோசித்தார்.

அறிவைப் பயன்படுத்தினால் நிச்சயம் அவர் இருக்கும் இடத்தை அறிய முடியும் என்ற முடிவுக்கு வந்த அக்பர் மிகத் தீவிரமாக யோசித்தார்.

அவருக்கு ஒரு யோசனை வந்தது.

தம் ஆட்சிக்கு உட்பட்ட சிற்றரசர்களுக்கெல்லாம் கீழ் கண்ட ஓலையை அனுப்பினார்.

'நமது ராஜ்ஜியத்திலுள்ள கடலுக்குத் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறது. உம்முடைய எல்லைக்கு உட்பட்டிருக்கும் ஆறுகளையெல்லாம், உடனே எனது அரண்மனைக்கு அனுப்பி வைக்கவும்.'

ஓலையைப் பெற்ற சிற்றரசர்கள், விஷயம் எதுவும் புரியாமல் குழப்பமடைந்தனர். ஆனால் ஒரே ஒரு சிற்றரசர் மட்டும், அக்பரின் செய்திக்குப் பதில் அனுப்பியிருந்தார்.


'என்னுடைய எல்லைக்குட்பட்டிருக்கும் ஆறுகள் அனைத்தும், கடலின் திருமணத்துக்கு வர முன்னேற்பாடுகளுடன் இருக்கின்றன. தாங்கள், தங்கள் ராஜ்ஜியத்திலிருக்கும் கிணறுகள் அனைத்தையும் தயார் செய்து, ஆறுகளை வரவேற்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.' என்பது தான் அந்த சிற்றரசர் அனுப்பிய செய்தி.

இதைப்படித்த அக்பருக்குப் புரிந்து விட்டது.

'எனது கேள்விக்கு, இத்தனை அறிவுப் பூர்வமாக பதில் கூறும் திறமை, பீர்பாலைத் தவிர வேறு யாருக்கும் இருக்க முடியாது. பீர்பால் இந்த சிற்றரசரின் பாதுகாப்பில் தான் இருக்கிறார். எனது செய்திக்குப் பதில் எழுதி சிற்றரசருக்கு உதவியவரும் அவர்தான்.'

அக்பர் உடனே அந்த சிற்றரசரின் நாட்டுக்குச் சென்று சகல மரியாதையுடன் பீர்பாலை அழைத்துக் கொண்டு நாடு திரும்பினார்.







1 முதல் 24 வரையான இலக்கங்களில் உள்ள அத்தனை பூனைக்குட்டிகளையும் இணைத்து அதற்குள் என்ன மறைந்திருக்கிறது என்று கண்டுபிடியுங்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **11.08.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **406**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 404

பரிசுக்குரியவர்:
ந. நிரோஜா,
தமிழ் மகா வித்தியாலயம், நானுஓயா.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ஏ.எல். ஜவ்ஸா,<br>அல்-அக்சா தேசிய பாடசாலை, கல்பிட்டி. | சி. அபிலாஸ்,<br>சென். மேரிஸ் தமிழ் கல்லூரி, பொகவந்தலாவ. |
| சி. லக்மன்,<br>பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு-04. | நஸீர் நஜாமா,<br>அல்-ஹிலால் மகா வித்தியாலயம், மூதூர். |
| எம். சஹீர்,<br>முஸ்லிம் மகா வித்தியாலயம், உடுதெனிய. | கே. மேபல் பினிடா,<br>கலாபொக்க தமிழ் வித்.,மடுல்கலை,கண்டி. |
| சுஜையிர் அஹமட்,<br>அல்-மனார் தேசிய கல்லூரி, மருதமுனை-02. | எஸ். பார்த்திபன்,<br>விவேகானந்தா வித்தியாலயம், அக்கரைப்பற்று. |
| பாத்திமா றுஸ்கா நஸீர்,<br>மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மூதூர். | கே. சுதர்ஷினி,<br>தமிழ் மகா வித்தியாலயம், பசறை. |

## சர்வதேச குறியீடுகள்

1. ஒலிவ் மரத்தின் இலை:- சமாதானம்.
2. புறா:- சமாதானம்.
3. சக்கரம்:- வளர்ச்சியைக் குறிக்கும்.
4. தாமரை:- பண்பாடு நாகரீகம்.
5. கையில் சட்டையில் கறுப்புத் துணி:- துக்கம்.
6. கறுப்புக் கொடி:- எதிர்ப்பு.
7. எலும்பு நடுவில் மண்டையோடு:- ஆபத்து.
8. செஞ்சிலுவை:- செஞ்சிலுவைச்சங்கம், மருத்துவமனை, உதவி.
9. செம்பிறை:- அரபு நாடுகளின் செஞ்சிலுவைச் சங்கம்.
10. கையில் தராசு ஏந்தி கண்கட்டப்பட்டுள்ள பெண்:- நீதி.
11. சிவப்புக் கொடி:- புரட்சி, உலகத்தொழிலாளர் சங்க அமைப்புகள் சிவப்புக் கொடியைப் பயன்படுத்துகின்றன.
12. அரைக் கம்பத்தில் கொடி:- இரங்கல்.
13. மேல் நோக்கி செங்குத்தாக கொடி:- வெற்றி, ஆரம்பம்.
14. வெள்ளைக் கொடி:- சமாதானம்.
15. மஞ்சள் கொடி (கப்பலில் மட்டும்) தொற்றுநோய்.

தொகுப்பு:- வ.மணிமாலா
-மட்டக்களப்பு.

## தமிழ் நூல்களும் அவற்றை இயற்றியவர்களும்

1. திருக்குறள்-திருவள்ளுவர்.
2. சிலப்பதிகாரம்-இளங்கோவடிகள்.
3. மணிமேகலை-கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.
4. கந்தபுராணம்-கச்சியப்ப சிவாச்சாரியார்.
5. பெரியபுராணம்-சேக்கிழார் பெருமான்.
6. திருவிளையாடற் புராணம்-பவனந்தி முனிவர், புலியூர் நம்பி.
7. அரிச்சந்திர புராணம்- வீரகவிராயர்.
8. நளவெண்பா-புகழேந்தி புலவர்.
9. ஆத்திசூடி/கொன்றைவேந்தன்/நல்வழி/ மூதுரை ஔவையார்.
10. இரகுவம்சம் புராணம்- அரசகேசரி.
11. நன்னூல்- பவனந்தி முனிவர்.

தொகுப்பு:- மு.சக்திலேந்திரன்-
கொழும்பு.

## வலிமையின் சின்னம்



சீனாவில் வலிமையின் அடையாளமாக 'ட்ராகன்' என்ற மிருகம் கருதப்படுகிறது.



பழங்கால இந்தியாவில் வெள்ளைக் கழுத்துள்ள கருடனை வலிமையின் சின்னமாகக் கருதினார்கள்.



பழங்கால அசிரியா நாட்டில் பறக்கும் காளை வலிமையின் சின்னமாகக் கருதப்பட்டது.

## தண்ணீரில் கூடு கட்டும் பீவர்



வட அமெரிக்கா, ஐரோப்பா பகுதிகளில் காணப்படுவது பீவர். இது நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய எலி வகையைச் சேர்ந்த பிராணி. நீரில் அதிகமாக வாழும் இதன் உடல் முழுக்க அடர்த்தியான மிருதுத் தன்மையுடன் கூடிய உரோமம் கொண்டது. இந்த அழகான உரோமத்திற்காக இவை வேட்டையாடப்படுகின்றன.

நீந்திச் செல்லும் உடல்வாகு கொண்ட பீவர், நீரில் ஏற்படும் திடீர் ஆபத்துக்களை உணர்ந்து கொண்டு தப்பி விடும்.

இதன் விருப்பமான உணவு மரப் பட்டைகள். தம்முன்னங்கால் நகங்களின் மூலம் மரங்களைச் சுரண்டியே பெரிய மரங்களைக்கூட இவை சாய்த்து விடும்.

குளிர்காலத்தில் இவை இரை தேடுவதில்லை. அதனால் முன்னதாகவே நீருக்கடியில் தனது இரையைச் சேமித்துக் கொண்டு குளிர் காலத்தில் உணவாக்கிக் கொள்ளும்.

இவை மரக்கிளைகளை ஒடித்துக் கூடுகட்டும். அப்படிக்கூடு கட்டும்போது 12 பீவர்கள் வரை ஒன்று சேர்ந்து கட்டுமானப் பணியை மேற்கொள்ளும்.

மரத்துண்டுகளோடு கற்களையும் கூட்டின் உறுதிக்காக பயன்படுத்தும். தண்ணீர் நிலைகளுக்குச் சற்று மேலே கூடு கட்டிக் கொள்ளும் இவை, தண்ணீர் மட்டம் உயரும் போது புதிய கூட்டை அதற்கு மேல் இன்னும் உயரமாகக் கட்டிக் கொள்ளும்.

மாலை நான்கு முப்பது. தசரா வேலைத் தளத்திலிருந்தான். பேஜரில் ஒரு செய்தி கிடைத்திருந்தது. 'ஐந்து மணிக்கு வாசலுக்கு வா' -பிரவீன் அனுப்பியிருந்தான். பிரவீன் தசராவின் பால்ய நண்பன். பக்கத்து பிறாஞ்சில் வேலை பார்க்கிறான்.

"ஆ புரோக்கர் கந்தையாவே, வாங்கோ கனநாளுக்குப் பிறகு?"

"அருணாச்சலத்தார் ஒரே வேலை கண்டியளே!" வேட்டித்தலைப்பின் ஒரு நுனியை கமக்கட்டுக்குள் செருகியபடி, பழைய குடையும் பையுமாக உள்ளே நுளைந்தார் புரோக்கர் கந்தையா.

# கல்யாண கனாக்கள்

"இருங்கோ, இதையும் பிடியுங்கோ" என்று வெற்றிலைத் தட்டத்தை புரோக்கரிடம் கொடுத்துவிட்டு,

"என்ர பொடியன்ர அலுவல் எப்படி, பாத்தனியளே?" வெற்றிலையைக் கொடுப்புக்குள் அடக்கிக் கொண்டார் அருணாச்சலத்தார்.

"கைவசம் என்னட்ட நாலு படங்கள் இருக்கு. பாக்கிறியளே வாத்தியார்?" புரோக்கரின் கேள்விக்கு தலையசைவில் பதில் சொல்லி படங்களை ஒவ்வொன்றாக வாங்கிக்கொண்டார் அருணாச்சலம். முதல்படம் நல்ல முகவெட்டு... பார்த்துக் கொண்டிருக்கும் போதே விவரிக்கத் தொடங்கினார் புரோக்கர்.

"பெயர் கஸ்தூரி. அம்பலத்தாற்ற ஒரே பிள்ள",

"ம் நிறம் குறைவெண்டாலும் விறுத்தமான பெட்டை."

"... ஆனா வாத்தியார், சீதனம் புரட்டுறதுதான் கொஞ்சம் கஷ்ரம்."- புரேக்கர் கந்தையா சொல்லி முடிப்பதற்குள் துள்ளிக்குதித்தார் அருணாச்சலம். "கந்தையா உனக்கென்ன விசரே, என்ர மகன் என்ன உத்தியோகத்தில இருக்கான் தெரியுமே? அதுக்கேத்தமாதிரி வாங்கினாத்தானே மதிப்பு... சரி சரி அடுத்ததத்தா..." இரண்டாவது படம் கைமாறியது. அதைப் பார்த்ததுமே அருணாச்சலத்தின் முகம் மாறியது.

"என்னப்பா இது, விறுத்தமே இல்ல, நிறம்மட்டும் வெள்ள. சப்பை மூக்கு, மாறு கண் மிதந்த பல்லு இது என்ன கோலம் இதையும் பிடியும்".

"தாங்கோ இந்தப்பிள்ளைய கரைசேர்க்கிறது சுகம்... இந்தக் காலத்து பொடியளுக்கு வெள்ளையெண்டா போதும் வேறொண்டுமே பாக்காயினம்" புரோக்கரின் அனுபவம் அந்தப் புன்னகையில் தெரிந்தது.

★★★

இரண்டு முறை அழைப்பு மணி அல றவும் அந்தக்குரல் ஒலிக்கவும் சரியாக இருந்தது. "யெஸ் கம்மிங் ஆ பிரவீன் வாங்கோ!"

"சந்யா கொஞ்சம் வேளைக்கே வந்திட்டம்." என்றவாறு உள்ளே நுளைந்தான் பிரவீன். அவனைத் தொடர்ந்து தசரா "அதுக்கென்ன இருங்கோ.. இருங்கோ ஒரு நிமிஷம் வந்திர்றன்!" என்றவாறு மூலையில் காத்திருந்த தும்புத்தடியுடன் மறைந்தாள் சந்யா. அவளை அப்படியே பார்த்துக் கொண்டிருந்த பிரவீன், தசராவைப் பார்த்தான். புன்னகைத்தான். குருவிக்கூடுபோல சிறிய வீடென்றாலும் கிளிக்கூடு போல் அழகாய் சுத்தமாயிருந்தது.

"மச்சான், சந்யா நம்மட பிராஞ்சில வேல பாக்கிறா தெரியும்தானே?" என்றான் தசரா. "சற்று இருபிள்ள அவர்களெல்லாம் வரட்டும், கோயிலுக்குப் போய் பகவான சேவிச்சிண்டு வருவம்..."

"ஓம் மாமி..." பிரவீன் றிமோட்டை அழுத்தியபோது, தொலைக்காட்சி நாடகம் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.

"சொல்லுங்கோ பிரவீன்" "புத்தம்புது மலர் போல இயற்கை அழகோடும் செயற்கைத் தனமில்லா புன்னகையோடும் வந்து கொண்டிருந்த சந்யா கேட்டாள். பிரவீன்! "என்ன வீடேவெறிச்சோடிக்கிடக்கு!"


"அம்மாவும் தங்கச்சியும் கோயிலுக்கு போட்டினம்"

"அப்போ நீங்க.."

"நான் காலமையில போய் வந்திடுவன்"

"ஓஃபிசுக்கு வரமுதலேயா?" வியந்தான்.

"பை த பை இது என் தோஸ்த் தசரா."



"ம் அவர நான் கண்டிருக்கிறன்" மீண்டும் அவளுடைய அதே வசீகரப் புன்னகை.

"சந்யா நாடகங்கள் இதிலொன்லயும் இன்றெஸ்ற் இல்லையா?"

"நேரம்போறதே தெரியாது பிரவீன். வேலைக்கு போய் வந்து சமைக்க வீட்டு வேல செய்ய சரியாயிடும் நேரம். கொஞ்ச நேரம் கிடைக்கும் அதுவும் கதைகள் கவிதை புத்தகம் வாசிக்க... இப்பத்தே நாடகங்களெல்லாம் மெகாசீரியல்ன்னு வருஷக்கணக்கில இழுத்திட்டுப் போறாங்க, ஏன் நிஜ வாழ்க்கேல கவலையும் கண்ணீருமென்றா இதிலயும் அதையே காட்டி போரடிக்கிறாங்க..."

★★★

"என்னையா காட்டிறாய்?" அருணாச்சலத்தார் அலுத்துக்கொண்டார். "பொறுங்கோ, இந்தப் படத்தப்பாருங்கோ!" கறுப்பென்றாலும் நல்ல முகவெட்டு அருணாச்சலத்தாருக்கு பிடித்துவிட்டது

"பீ.ஏ.படிச்சிட்டு வீட்டில இருக்கா, சீதனம் எவ்வளவு தரவும் அவையள் ஆயத்தம்!" என்று புரோக்கர் சொன்ன போது அருணாச்சலத்தார் இளம்புன்னகையோடு மீசையை முறுக்கிக்கொண்டார்.

"வாத்தியார், இவள் செல்லத்துரையின்ர ஒரே பொண்ணாச்சே!"

"என்னது செல்லத்துரையின்ர பெட்டையா. வேண்டாம்!" அருணாச்சலத்தார் உறுமியது புரோக்கருக்கு ஆச்சரியமாக இருந்தது.

"பொடியள் இரண்டுபேர் கனடாவில, வளவுவாய்க்காலெண்டு ஊர்முழுக்க வாங்கிப் போட்டிருக்கு மனுஷன்!"

"கந்தையா உது சரிப்பட்டுவராது. சாதி குறைஞ்சவங்களோட சம்பந்தம் வைச்சிருக்க நானென்ன மடையனே...?" என்று அருணாச்சலத்தாரே தொடர்ந்தார்.

"என்னையா இது அழகெண்டா சீதனமில்லை, படிச்சதெண்டா சாதிக்குறைச்சல்..." இடையில் புரோக்கர் குறுக்கிட்டார். "இதப்பாருங்கோ வாத்தியார்!"

"ம் பரவாயில்லையோ மற்ற விஷயங்கள் எப்படி?"

"அது பேசி ஒரு முடிவுக்கு வரலாம். நானெல்லாம் கொண்டுதாறன்" புரோக்கர் கந்தையா கண்சிமிட்டினார்.

"இப்பத்தேய நிலவரம் எப்படி, கந்தையா உனக்குத்தானே தெரிஞ்சிருக்கும் இப்பத்தைய ரேற்றெல்லாம்!"

"வெளிநாட்டில இருந்து வாறவன் அஞ்சுக்குள்ள வாங்குறான். உள்ளூர் காரருக்கு நல்ல கிராக்கி, சனமெல்லாம் பத்து இருபதெண்டு நீட்டுது. அதுவும் கொழும்பில வீடெண்டா பாருங்கோவன்... இப்பெல்லாம் சீதனம் வாங்கிறது. ஃபாஷனாப் போச்சு கண்டியளே. அப்படியும் ஆராவது சீதனம் வாங்காட்டில் அவன குறையுள்ளவனா ஒரு புழுவப்பாக்கிறதுமாதிரி பாக்குது நம்ம கேடுகெட்ட சமுதாயம்..."

"பிரவீன், இந்த நாடகங்களெல்லாம் மக்கள் மனதில பொதுவா பெண்கள் மத்தியில ஒரு மாயத் தோற்றத்த ஏற்படுத்திக் கொண்டிருக்கு. உதாரணத்துக்கு கணவன் மனைவியை கை நீட்டி அடிக்கிறதா காட்டிறாங்க. பெண்சுதந்திரம் என்ற பெய ரில பெண்களுக்கான காப்பு வேலிய உடைச்சுக் கொண்டிருக்கிறாங்க. பை த பை அல்பம் இருக்கு பாக்கிறீங்களா?" பிரவீன் தலையசைத்தான்.

"இது தங்கச்சியின்ர பிறந்த நாளையான்ர. இதுதான் அம்மா, இது அப்பா.. தங்கச்சி.. பார்த்துக் கொண்டிருங்கோ நொடியில வாறன்." சில நிமிடங்களில் காப்பியோடு வந்தாள் சந்யா.

சுவாரசியமான உரையாடல் தொடர்ந்தது. நேரம் ஆறு ஆறரை ஏழுமணி ஆகியிருந்தது.

"ஓகே சந்யா நாங்க புறப்படறம். என்ன பிரவீன்?"-தசரா கேட்க

**க. ராகுலன் – வெள்ளவத்தை**

"யெஸ் யெஸ்" பிரவீன் ஆமோதிக்க

"என்ன சாப்பிட்டுப்போகலாமே"

"பரவாயில்ல வேறொருநாள் வாறமே" இரு வரையும் வாசல்வரை வந்து வழி அனுப்பினாள் சந்யா.

"மச்சான் ஷீ இஸ் கிரேட்"- இது தசரா

"அது சரி பிரவீன் நீயேன் வீடெல்லாம் சுத்திப்பாத்தாய் முக்கியமா பாத்றூம் கிச்சினெல்லாம்."

"ஒரு பெண்ணோட அழகு அவ லிப்ஸ்ரிக்லயோ கியுரெக்ஸ்லயோ இல்ல. அவ இருக்கிற வீட்டோட சுத்தத்திலயும் விருந்தோம்பல்லயும்தான் மச்சான்."

"இதெல்லாம் பாக்கிறியே நீயென்ன சந்தியாவ கட்டிக்கப்போறியா?" பிரவீன் சின்னப் புன்னகையோடு சொன்னான்.

"யெஸ் மச்சான், ஐ வோன்ரு மெறிஹேர்"

★★★

"அப்பா வாத்தியார் நான் வரட்டே. தம்பியின்ர விரும்பத்த கேட்டு அறிவியுங்கோவன், கலாட்டாவே கல்யாணமில்ல ஜோடி சேர்க்கிறதிலதான்.. ம் தம்பியே வந்திட்டார்" அருணாச்சலத்தார் ஆர்வத்தோடு பிரவீனிடம் படத்தை நீட்டினார்.

"பிரவீன் என்ன பிடிச்சிருக்கா?" அந்தப்படத்தில் சந்யா புன்னகை சிந்திக்கொண்டிருந்தாள்.

---

முட்டுக்காலிட்டிருந்த ஃபாதர் ஜேம்ஸுக்குள் புதுவிதமான உணர்வுகள் பிறந்தன. நிறைவானதொரு அமைதி சூழ்ந்திருந்ததுதான் அதற்குக் காரணமென்பதை அவரைச் சுற்றியிருந்த சூழல் உணர்த்தியது. தூய வெண்விரிப்பில் அலங்கரிக்கப்பட்டிருந்த பலிபீட மேஜை மீது இருமருங்கிலும் அரையடி உயர தங்க முலாம் பூசி ஸ்டாண்டு பளிச்சென்று குந்த வைக்கப்பட்டிருந்தது. நடுவில் வேலைப்பாடுகளுடன் கூடிய வட்டப் பேழையொன்று தேர்ந்த கலைஞனின் கைவண்ணத்தில் மிக அழகாக செதுக்கப்பட்டிருந்த அந்தப் பேழை மெல்லிய துப்பட்டாவினால் மூடப்பட்டிருந்தது.

வண்ணப் பூங்கொத்துக்களின் அலங்காரமும் தூபமிட்ட பித்தளைப் பாத்திரத்திலிருந்து வந்த புகையும் சேர்ந்து கலவையான சுகந்தத்தை பரப்பி அவ்விடத்தின் அமைதியையும் புனிதத்தையும் மேலும் அதிகரித்துக் காட்டியது.

மேல் கூடாரத்தில் வளைவாக, வில் போன்றமைக்கப்பட்டிருந்த தொங்கு சுவரில் சிலுவையிலறையுண்ட இயேசுநாதர். உலக மக்களது பாவங்களுக்குப் பரிகாரமாக அதிலறையுண்டு உயிர்நீத்த காட்சியை பார்க்கவே மிகவும் பரிதாபம் தரும் தோற்றம். எலும்புகள் துருத்திக் கொண்டு நின்ற விலாவின் கீழே அழுந்திக்கிடந்த வயிற்றில் ஈட்டியால் குத்திய அடையாளம். அதிலிருந்து இரத்தம் வழிய, கிரீடமாக தலையிலிறுக்கிய முள்முடியின் கூர்மைக்கு வழிந்தோடிய இரத்தச் சுவடுகள் முகமெங்கும் கோலம்போட வேதனையின் அயர்வும், உணர்வுகளின் துடிப்பும் அப்படியே உயிரோட்டமாகத் தெரிந்தது. அதைப்பார்க்கும் எவருக்கும் அந்த நிமிஷத்திலொரு குற்றவுணர்வின் உதைப்பும், பாவத்திற்கான பரிகாரம் தேவை என்கிற ஆத்ம சோதனையும் எழுந்தே தீரும்.

உத்தரியத்தை இருகைகளிலும் ஏந்திய வண்ணம் சிலுவையை ஏறிட்டார் ஃபாதர் ஜேம்ஸ். "பரமபிதாவே! தெரிந்தும், தெரியாமலும் இவர்கள் செய்துவிட்ட பாவங்களுக்கு மன்னிப்பை தந்து இவர்கள்மீது கருணை காட்டும். ஏனெனில் இவர்கள் மனிதர்கள். மன்னிப்பது இறைவன். தயை செய்தருளும் பிதாவே!" வணங்கியவர் உத்தரியத்தை முத்தமிட்டு அணிந்து கொண்டார். கணிசமான தொகையினர் கூடியிருந்ததைக் கவனித்தவர். பாவப் பொறுத்தலுக்கான தட்டுக்குள் முகம் மறைக்கும் மெல்லிய திரையின் மறைவில் உட்கார்ந்தார்.

கடைசியாக அவன் வந்தான். அவன் சொன்னதைக் கேட்ட ஜேம்ஸ் ஃபாதருக்கு மனமும், உடலும் தூக்கிப்போட்டது. பதற்றமாக அந்த தடுத்து நின்ற மெல்லிய திரையை விலக்கிப் பார்த்தார்.

"என்ன... என்.ன நீ. நீ கொலை செய்துட்டியா?"

"ஆமா. ஃபாதர் கொலைதான். நானொரு கிறிஸ்தவன். மன்னிப்பு கேட்டால் ஏழு தடவையல்ல. ஏழெழுபது தடவையானாலும் உன் சகோதரனை மன்னிக்கும் கடமையுண்டென்று ஆண்டவன் சொல்லியிருக்கிறான்!"

"அதுக்காக எழுபது தடவை கொலை செய்வியா?" வெறுப்பாகக் கேட்டார். ஃபாதர்.

"இல்லை." அழுத்தமாக சொன்னான். அவனே தொடர்ந்தான்.

"ஒரேயொரு கொலைதான். பாவப் பொறுத்தலென்று சொல்லுபவை அவையாயிருந்தாலும் ஆண்டவனுக்கு வெளிப்படுத்துவதைத் தவிர வேறெவர்க்கும் குருவானவர் தெரிவிக்கக்கூடாதென்பது வேதவாக்கு. அதனால்தான் என் பாவத்துக்கான மன்னிப்பை உங்கள் மூலம் இறைவனிடம் கேட்கிறேன்." என்றான் தெளிவாக.

'சத்திய போதனைகளை சுத்தமாக தெரிந்து வைத்திருக்கிறான். ஜாக்கிரதையாக பேச வேண்டும்.' மனதுள் நினைத்தார்.

"ம் நீ சொல்வது சரி மகனே! திட்டமிட்டு கொலை செய்வது மகாகுற்றம். உன் கொலை, அதற்கான காரணம் என்ன. சொல்லு.?"

"உங்களை நம்பித்தான் சொல்கிறேன். கிறிஸ்தவ சமய சட்டத்துக்கமையும் குருவென்ற வகையில் பொறுத்தல் வேண்டி வரும் பாவிக்கு மன்னிப்புத் தருவதுதான் கடமை. காட்டிக் கொடுப்பதல்ல. அப்படியேதும் நடந்தால் மறுபடி கொலைகாரனாகவும் தயக்கமாட்டன். அதற்கும் சேர்த்து இப்பவே பிரார்த்தித்துக் கொள்ளுங்க" என்றான்.

பாதிரியாருக்கு பயங்கரமாக வியர்த்தது. மூடியிருந்த வெள்ளையங்கி நனைந்ததில் நிறம் மாறித் தெரிந்தது. மனதை ஒரு நிலைப்படுத்த முயன்றவராக கூரையின் தொங்கு சுவரின் வளைவைப் பார்த்தார்.

# ஒரு மன்னிப்பு



**ஜெ. சூரியன்**

கூர்ந்து கேட்டார். அவன் மேலே சொன்னவற்றைக் கேட்ட ஃபாதருக்குள் சக்திவாய்ந்த மின்னலைகள் நெடுக்கும் குறுக்குமாக ஓடியதில் தலை, விறு, விறு என்றது.

"என்ன.... என்ன சொல்கிறாய்?"

"ஆமா. ஒரு மாசம் முந்தி இந்தக் கோவில் பாதிரியாரை கொலை செய்துவிட்டேன். கத்தியால் குத்திக் கொலை செய்துவிட்டேன்." அழுத்தம் திருத்தமாக சொன்னான். அதைக்கேட்ட ஜேம்ஸ் ஃபாதருக்குள் என்னென்னவோ கன்னாபின்னாவென்ற வேகமெழுந்தது. அடக்கிக் கொண்டார். போட்டிருக்கும் அங்கி, உத்தரியம், எடுத்துக்கொண்ட சத்தியவார்த்தையை காப்பாற்ற வேண்டிய கட்டாயத்தை உணர்த்தியது.

"ஃபாதர் வின்செண்ட். அப்பகுதியிலுள்ள மக்களின் ஆப்த தோழன். என்ன பிரச்சனையானாலும் முறையிடுவார்கள். அன்பும், அரவணைப்புமாக-சம்பந்தப்பட்டவர்களை அணுகி தீர்த்துவைப்பார். பங்குப் பணத்தில் பெரும் பகுதியை ஏழைகளுக்காக செலவிட்டார். அப்பகுதியில் படித்த இளைஞர் யுவதிகளுக்கு பல எதிர்காலத்திட்டங்களை உருவாக்க உறுதுணையாக இருந்தார். மொத்தத்தில் போதனையைவிட, செயற்பாடே மனிதனை மனிதனாக உருவாக்கும் அதுவே ஆத்மார்த்தமான இறை சேவை என்பதற்கிணங்க அவர்களுக்கொரு உற்ற துணையாக விளங்கினார். இப்படிப்பட்டவர் மக்களின் நெஞ்சங்களில் பெருமதிப்புடன் குடிகொண்டிருந்ததில் வியப்பேதுமில்லை. அப்படிப்பட்டவரைக்கூட ஒருவன் கொலை செய்ய காரணமிருக்குமா என்று எவருக்குமே நம்பிக்கையில்லை. ஆனாலும் கொன்றுவிட்டான். அந்தப் பிராந்தியம் முழுவதுமே மர்மமான கொலையின் காரணத்தை அறிய முடியாமல் துடித்தது, இவன்தானென்று அடையாளம் காண்பிக்கும் பட்சத்தில் ஜனங்களே குதறி விடுவார்கள்.

பாவப் பொறுத்தலுக்காக வந்தவன் வாயிலிருந்து 'நான்தான் கொன்றேன்' என்றதும் அவர் மௌனமாகினார்.

அவன் தொடர்ந்தான்.

"என் மனைவி எனக்குத் துரோகம் பண்ணுவதாக என்னுள் ஏதோவொரு உணர்வு என்னை சதா அரித்துக் கொண்டிருந்தது. சமீபகாலமாக அவள் நடந்து கொள்ளும் முறை எனக்குள் சந்தேகத்தை விதைத்தது. அது மெல்ல மெல்ல, அவளது உதசீனங்களால் வளர்ந்து பெரிதாகியது. அதனால் அமைதியை இழந்து தவித்தேன். அப்போதுதான் ஒரு சமயம் அதைக் கவனித்தேன். அவள் இங்கு ஃபாதரிடம் அடிக்கடி பாவமன்னிப்பு பெற வருவதை. வரும்போதெல்லாம் நீண்ட நேரம் ஆனதையும் அவதானித்தேன். அதிலேதும் இருக்கலாமென என்னுள்ளே ஏதோ சொன்னது. ஃபாதரிடம் கேட்டேன். அவர் சொல்ல மறுத்துவிட்டார். எவ்வளவோ கெஞ்சினேன். முடியவே முடியாதென்றார். மேலும் தமக்குள்ள சத்தியவார்த்தைக்கு கட்டுப்பட்டேயாக வேணுமென்றார். ஆனாலென்னவோ அவரெதையோ மறைக்க முயல்வதாகவே என் சந்தேகப்பட்ட மனது நினைத்தது. அப்போதும் அவர் சொன்னார். உன் மனைவி அப்படியெதுவும் தப்பு செய்ததாகச் சொல்லவில்லை. வீணாக மனதை சங்கடத்தில் போட்டுக் குழப்பாதே. சமாதானமாக போ" என்று.

எனக்கோ அதில் உடன்பாடு இல்லை. அப்படியானால் அவள் என்னதான் சொன்னாள் என்பதை சொல்லுங்களென்று விடாப்பிடியாக நின்றேன். 'இதோ பார். எனக்குள்ள கடமைகளை நான் மீறமுடியாது. மீளவும் சொல்கிறேன் அவள் ஏதும் தப்பாக நடந்ததாக சொல்லவில்லை என்றால் நம்பு. அதுதான் உனக்கு நிம்மதி தரும். சொன்னால்தான் நிம்மதியென்றால் அதைச் சொல்ல என்னால் முடியாது.' ஒரேயடியாக மறுத்துவிட்டார்.

அந்த மறுப்பு என் சந்தேகத்தை மேலும் அதிகமாக்கியது. கெஞ்சினேன். எவ்வளவோ சொல்லிக்கேட்டேன். முடிவில் அதுவே ஆத்திரமாக, வெறியாக மாறியதில் நிலை மறந்த நான் அவரைக் கொன்றுவிட்டேன்."

அவன் மூச்சுவிடாமல் கூறிவிட்டு மன்னிப்புக் கேட்டபோது, ஃபாதர் ஜேம்ஸுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. நெஞ்சுள் கனமாக முட்டல் அழுத்தமாக இடித்தது. திணறியவர் வழிகள் அலைந்தது. மேலே அந்த வளைவு தட்டுப்பட்டது. பரமபிதா அந்த தொங்கு சுவரில் துவண்டு தொங்கிய நிலையில் வழிந்தோடிய இரத்தத் துளிகளில் ஈரத்தின் மினுமினுப்பு தெரிந்தது. பரமபிதாவின் உடலெங்கும் மீண்டுமொரு தடவை பலமாக ஆணிகளசைந்து நிலைப்பதை உணர்ந்து கொண்டவராக "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. மகனே மனச்சாந்தியுடன் போ. இனிமேல் பாவம் செய்யாதே" சொல்லியவர் நெஞ்சு கனத்துப்போக கைகள் அவனை ஆசித்து மடியில் துவண்டு விழுந்தது.

ஆனால் இப்படியொரு பாவப் பொறுத்தலும் தேவன் கட்டளையென்கிற பெயரில் மனிதன் கைக்கொள்ளும் வாக்குறுதியும் தேவைதானா? என்ற கேள்வி சதா அவர் மனதை அறுத்துக்கொண்டேயிருந்தது.

# மர்மத்தீவு

## 16

## சங்கர்லால் துப்பறியும்

அவன் விமானத்தை மிகவும் சிறப்பாகச் செலுத்தி எப்படியாவது குறிப்பிட்ட இடத்தை அடைந்துவிடப் போராடினான்.

விமானத்தை அவன் மேலும் மேலும் உயரக் கிளப்பினான். கொஞ்சம் உயரத்தில் சென்றதும், அதே விரைவில் அது இறங்கியது.

மீண்டும் மீண்டும் உலுக்கல்.

மலர்ச்சோலை அஞ்சினாள். அவள் அப்படியே ஷாவை இறுக அணைத்தபடி உட்கார்ந்து கொண்டாள்.

ஷா ஒன்றும் பேசவில்லை.

விமானம் எவ்வளவு உயரத்தில் இருக்கிறது என்று பார்த்தார். அது இறங்கிக் கொண்டே இருந்தது. மலைகளின் உச்சிகளை உராய்வதைப் போல் சில இடங்களில் சென்றபோது, எல்லாருக்கும் மூச்சே நின்று விடும்போல் இருந்தது.

வழியில் எங்கேயாவது கொஞ்சம் வாய்ப்பான இடம் கிடைத்தாலும், போதும், விமானத்தை எப்படியாவது இறக்கிவிடலாம் என்று அப்துல்லா முயன்று கொண்டிருந்தான்.

விரைந்து பொத்துப் பொத்தென்று இறங்கிக் கொண்டிருந்த விமானம், ஒரு மலைப் பகுதியில் உராய்ந்தபோது,

அதன் இறக்கையில் ஒன்று உடைந்து விழுந்தது! காதைப் பிளக்கும் ஓசை.

விமானம் இறக்கை முறிந்து, ஒரு பக்கமாகச் சாய்ந்து அச்சம் கொடுக்கும் வகையில் உராய்ந்து இறங்கிக் கொண்டிருந்தது.

அப்துல்லா எவ்வளவு முயன்றும் அதை நேராகப் பறக்கும்படி செய்ய முடியவில்லை.

பெருத்த ஓசையுடன் அது மலையின் பக்கத்தில் இரண்டு மரங்களுக்கு இடையில் போய்விழுந்தது.

மரங்களின் கிளைகள் விமானத்தைத் தாங்க முயன்றபோது-



கிளைகள் முறியும் ஓசை.

விரைந்து விழுந்த விமானம், மரக் கிளைகளில் சிக்கி, முறிந்த கிளைகளுக்கு இடையில் விழுந்ததால், தாக்குதல் ஓரளவுக்குக் குறைந்தது என்றாலும், விமானம் பெருத்த ஓசையுடன் கீழே விழுந்து நொறுங்கியது.

விமானத்திலிருந்து அப்துல்லா முதலில் தூக்கி எறியப்பட்டான்.

ஷாவும் மலர்ச்சோலையும் நல்ல வேளையாகத் தூக்கி எறியப்படவில்லை. விமானத்திற்குள்ளேயே இருந்து அவர்கள் கொஞ்சமும் அடியின்றி, ஆற்றலுடன் கூடிய ஒரு தாக்குதலுடன் தப்பினார்கள்.

விமானம், மரத்தின்மீது விழாமல் நேரிடையாகத் தரையில் விழுந்திருந்தால் நொறுங்கிப் போய்த் தீப்பிடித்து வெடித்துச் சிதறி இருக்கும்.

விமானம் விழுந்த தாக்குதலில் இருந்து அவர்கள் விடுபடக் கொஞ்ச நேரம் பிடித்தது

ஷாவும் மலர்ச்சோலையும் நொறுங்கிய விமானத்திலிருந்து தப்பியதும், இரகசியக் கவர் பாதுகாப்புடன் இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டார்கள். அந்தக் கவர், ஷாவிடம் பாதுகாப்புடன் இருந்தது.

அடுத்தபடியாக, அப்துல்லா என்ன ஆனான் என்று பார்க்கப் போனார்கள்.

கீழே விழுந்து கிடந்த அவன் முனகிக் கொண்டிருந்தான். ஷா, ஓடிப்போய் அவன் பக்கத்தில் குனிந்து பார்த்தார்.

அவனுடைய இரண்டு கால்களும் ஒரு கையும் முறிந்து கிடந்தன. அவன் செயலற்றுக் கிடந்தான். அந்த நிலையிலும் கூட ஷாவுக்கும் மலர்ச்சோலைக்கும் ஒன்றும் ஆபத்து இல்லை என்பதை உணர்ந்ததும் அவன் உதடுகளில் மகிழ்ச்சி தோன்றியது.

அப்துல்லாவுக்கு எலும்பு முறிவு சரியாகக் குறைந்தது மூன்று மாதங்களாவது ஆகும். அவனுடைய உதவியின்றி எப்படி இருக்க முடியும், எப்படி அயல் நாட்டுக்கு வேறு விமானத்தில் தப்பிச் செல்ல முடியும் என்று எண்ணியபோது ஷாவுக்குத் துன்பமாக இருந்தது.

அவர், அவனுக்கு முதல் சிகிச்சை கொடுத்தார். விமானத்திலிருந்து சிதறி விழுந்த பெட்டியிலிருந்த சட்டைகளைக் கிழித்து எலும்பு முறிந்த இடங்களில் கட்டுப்போட்டார்.

மலர்ச்சோலை அவனுக்குத் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

இதற்குள், அந்த மலைப் பகுதியில் வாழ்ந்த சிலர் நொறுங்கிய விமானத்தைத் தேடி ஓடி வந்தார்கள். அப்படி வந்தவர்கள் எல்லாரும் ஷாவுக்குப் பழக்கப் பட்டவர்கள். அவர்களில் சிலரை அழைத்து ஷா பண நோட்டுகளை நீட்டினார்.

"அப்துல்லாவை எப்படியாவது பாதுகாப்புடன் தூக்கி வாருங்கள். நானும் மலர்ச்சோலையும் நடந்தே போகிறோம். குறுக்கு வழியில் ஐந்து கல்தொலைவு நடக்கும்படி இருக்கும்" என்று சொல்லிவிட்டு மலர்ச்சோலையுடன் அவர் புறப்பட்டார்.

மலைவாசிகள் மகிழ்ச்சியுடன் பணத்தை வாங்கிக் கொண்டு, அப்துல்லாவைப் பாதுகாப்புடன் சுமந்தபடி மலைப் பாதையில் சென்றார்கள்.

அவர்கள் எல்லாரும் ஷாவின் மறைவிடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோதுதான், சங்கர்லாலின் ஜெட் பார்ட் விமானம் பல நூறு கல் தொலைவுக்கு அப்பால், அந்தப் பகுதியை நோக்கி வந்து கொண்டிருந்தது.

யோகோ டானி, கல்கத்தாவைக் கடந்ததும் மீண்டும் ஒரு தடவை இந்தியாவின் படத்தை, சிவப்புப் பென்சிலால் வட்டமிடப்பட்ட இடத்தைக் கூர்ந்து பார்த்தாள்.

விமானத்தைப் பாதுகாப்புடன் அவள் ஓட்டிச் சென்றாள். மலைகள் மிகுந்த அந்தப் பகுதியில் விமானத்தைப் பாதுகாப்புடன் எப்படி இறக்குவது என்று பார்த்தாள்.

மலைப் பகுதியின் மேல் ஜெட்பார்ட் விமானத்தில் பல தடவைகள் வட்டமிட்டார்கள்.

ஷாவின் இருப்பிடம் என்று ஒன்றும் புரியவில்லை. வெறும் காட்டுமிராண்டிகள் வாழும் பகுதியைப் போல் இருந்தது அது. பெரிய ஊர் என்று சொல்லும்படி எதுவும் தெரியவில்லை. ஷாவின் விமானம் எங்கேயாவது தென்படுகிறதா என்று பார்த்தார் சங்கர்லால்.

நொறுங்கி விழுந்து கிடந்த விமானம்கூட அவர் கண்ணில் படவில்லை. மரங்களுக்கு நடுவில் விழுந்த விமானம் உயரத்திலிருந்து தெரியவில்லை.

"எங்கே இறக்கவேண்டும்?" என்று கேட்டாள் யோகோ டானி.

"வாய்ப்பான இடம் எங்குக் கிடைத்தாலும் இறக்கி விடு" என்றார் சங்கர்லால்.

பல தடவை மலைகளுக்கு இடையே எங்கேயாவது பாதுகாப்பான இடம் தெரிகிறதா என்று பார்த்துவிட்டு ஓர் இடத்தில் போய் விமானத்தை இறக்கினாள்.

அந்தப் பகுதியில் மனிதர்களே இல்லாததைப்போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது.

விமானம் வந்து இறங்குவதை வேடிக்கைப் பார்க்கக்கூட எவரும் வரவில்லை.

சங்கர்லாலும் மாணிக்கமும் முதலில் இறங்கினார்கள். யோகோ டானி இறுதியில் இறங்கினாள்.

சங்கர்லால் இங்கும் அங்கும் சென்று தரையைப் பல இடங்களில் பார்த்தார். கட்டை வண்டியோ, ஜீப்போ போன அடையாளங்கள் எதுவும் தெரியவில்லை.

மனிதர்கள் நடமாடிய அடையாளம்கூட அங்கே எதுவும் இல்லை.

மலைச்சரிவுகளில் போய்ப் பல இடங்களில் நின்று தொலைநோக்கியால் பார்த்தார். மாணிக்கமும் வேறு பக்கங்களில் போய்த் தொலைநோக்கியில் பார்த்தான்.

ஒன்றும் தெரியவில்லை.

"தவறான இடத்துக்கு வந்துவிட்டோமோ?" என்றாள் யோகோ டானி.

"இந்தப் பகுதியில்தான் ஷா ஒளிந்திருப்பார் என்று முதலையும் ஆமையும் சொன்னார்கள். அவர்களையே நம்முடன் அழைத்து வந்திருக்கலாம் போல் இருக்கிறது" என்றான் மாணிக்கம்.

சங்கர்லால் மட்டும் ஒன்றும் பேசவில்லை.

அவர் தொலைநோக்கியால் மலை உச்சியில் நின்று எல்லாப் பக்கங்களிலும் நிமிர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

திடீரென்று ஏதோ அவர் கண்களுக்குத் தட்டுப்பட்டது.

**தமிழ்வாணன்**

ஒரு கல் தொலைவுக்கு அப்பால் சுருள் சுருளாகப்புகை கிளம்புவது தெரிந்தது.

எங்கே புகை கிளம்புகிறதோ அங்கே நெருப்பு எரிகிறது என்று பொருள். நெருப்பு இல்லாமல் புகை இல்லை. எங்கே நெருப்பு எரிகிறதோ அங்கே மனிதன் இருக்கிறான் என்று பொருள்.

அவர், மாணிக்கத்தை அழைத்தார்.

அவன், அவர் பக்கத்தில் ஓடினான்.

"அதோ அந்தப்புகையைப் பார். அங்கே போய் வருகிறேன். நீயும் யோகோ டானியும் இங்கேயே இருங்கள்" என்றார்.

"நானும் வருகிறேன்" என்றான் மாணிக்கம்.

"நானும் வருகிறேன்" என்றாள் யோகோ டானி.

"மனிதர்கள் இல்லாத இந்த இடத்தில் விமானத்தை விட்டுச் செல்லுவதை நான் விரும்பவில்லை. அரவமே இல்லாத இந்த இடந்தான் உண்மையில் மற்ற இடங்களை விட ஆபத்தானது" என்றார் சங்கர்லால்.

"அப்படியானால் விமானத்துக்கு பாதுகாப்பாக நான் இருக்கிறேன். நீங்கள் இருவரும் போய்ப் பகைவர்கள் இடம் எங்கே இருக்கிறது என்று கண்டுபிடித்து வாருங்கள்" என்றாள் யோகோடானி.

சங்கர்லால் கொஞ்சம் சிந்தனை செய்தார். பிறகு,

"மாணிக்கம், யோகோடானியை இங்கே தனியேவிட்டுச் செல்லுவதை நான் விரும்பவில்லை. எதற்கும் நீ இங்கே அவளுக்குத் துணையாக இரு" என்றார்.

மாணிக்கம், தலையை அசைத்துத் தன் ஒப்புதலைத் தெரிவித்தான்.

சங்கர்லால் மட்டும் இப்போது மலைப் பாதையில், புகை எழும்பிய இடத்தை நோக்கி விரைந்து நடந்து கொண்டிருந்தார்.

**தொடரும்...**

# தமிழக ஹோட்டலில் கைதான 'அயல்நாட்டு' அமைச்சர்

தமிழகத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்து விபசார குற்றச்சாட்டின்பேரில் மூன்று பேர் கைதாகினர். விசாரணை நடத்தியதில் அந்த மூவரில் ஒருவர் இந்தியாவுக்கு மிக அருகில் உள்ள நாடொன்றின் அமைச்சர் என்ற உண்மை தெரியவந்தது. தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் சஞ்சிகை ஒன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது. அந்த நாடு எது, அமைச்சர் யார் என்பதை புரிந்து கொள்வதில் வாசகர்களுக்கு சிரமமிருக்காது என்று நம்புகிறோம்...!

கடந்த வாரத்தின் ஒரு நள்ளிரவு நேரம்... தென் சென்னை பகுதியில் உள்ள அந்த பொலிஸ் ஸ்டேஷன் ஒன்றின் ஃபோன் அலறியது. ஸ்டேஷன் இன்ஸ்பெக்டரே ரிஸீவரை எடுத்துப் பேசுகிறார்.

மறுமுனையிலிருந்து, "சார்... உங்க ஏரியாவில் உள்ள நட்சத்திர ஓட்டலில் இலங்கைத் தீவிரவாதிகள் ரூம் போட்டுத் தங்கியிருக்காங்க. உடனே போனீங்கன்னா, அவங்களை அமுக்கிடலாம் என்றார் ஒரு நபர். ஓட்டல் பெயர், முகவரி, ரூம் எண் ஆகியவற்றையும் கனகாரியமாகச் சொல்லிவிட்டு, தன்னை மட்டும் அடையாளம் காட்டிக் கொள்ளாமல்" போனை துண்டித்தார்.

ஸ்டேஷன் பரபரப்பானது. தனது உயர் அதிகாரியைத் தொடர்பு கொண்டு விஷயத்



தைச சொலலி, ரெய்டு நடதத அனுமதி வாங்கிக்கொண்டார் இன்ஸ்பெக்டர்.

"இலங்கைத் தீவிரவாதிகளா.. கட்டி கட்டியா தங்கம் வெச்சிருப்பானுவ... கூடவே, சயனைடு குப்பியும் துப்பாக்கியும் இருக்கும். யாருக்கும் உயிர்ச் சேதம் இல்லாம ரெய்டு நடத்துங்க. பெஸ்ட் ஆஃப் லக்.." என்று உற்சாகமூட்டியதோடு, அந்த மேலதிகாரியும் தன் அலுவலகத்திலிருந்து நேரே அந்த ஓட்டலுக்குக் கிளம்பி வந்துவிடுவதாகச் சொன்னார்.

சீறிப் பறந்த பொலிஸ் வண்டிகள், டயர் தேய பிரேக் அடித்து ஓட்டல் வாசலில் நின்றன. பொலிஸ் படை விறுவிறுவென்று அந்த ஓட்டலின் அறை எண் 901-க்கு போய் கதவைத் தட்டுகிறது. ஆடம்பரமான அந்த 'சூட்' சிறு தயக்கத்துக்குப் பின் திறக்கப்படுகிறது. கதவைத் திறந்த நபரைக் கொத்தாகப் பிடித்துக்கொண்டு, பொலிஸார் அறைக்குள் பாய.. உள்ளே மங்கிய வெளிச்சத்தில் மூன்று பெண்கள் அரை நிர்வாணமாக இருந்தனர். மொத்தம் மூன்று ஆண்கள் போதை ஏற்றிக் கொண்டு அந்த 'சூட்'டில் தங்கியிருப்பதும் தெரிகிறது.

ஏ.ஸி.குளிரையும் தாண்டி அந்த மூன்று ஆண்களும் பெண்களும் சூடாக இருக்க.. துப்பாக்கியும் காணோம்... சயனைடு குப்பியும் காணோம். உள்ளே இருப்பவர்கள் வெறும் 'செக்ஸ்' தீவிரவாதிகள்தான் என்று புரிந்தாலும், பொலிஸார் எளிதில் விட்டுவிடத் தயாராக இல்லை. "ஏய்.. நீங்கள்லாம் யாரு? எல்லாம் நடங்க ஸ்டேஷனுக்கு..." என்று அதட்டல் போட்டார் அந்த தென் சென்னை பொலிஸ் அதிகாரி. அள்ளிச் சுருட்டி ஆடைகளை மாட்டிக்கொண்டு, போதைத் தள்ளாட்டத்தோடு ஆறு பேரும் வண்டியில் ஏற.. ஓட்டல் நிர்வாகிகள் நடப்பவற்றை நொந்துபோய் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ஓடும் வண்டியிலேயே பொலிஸ் கடுமையாக விசாரிக்கிறது.. தாங்கள் தீவிரவாதி இல்லை என்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள் அவர்கள். மூன்று ஆண்களில் இருவர் பக்கா சென்னைவாசிகள் என்பது கொஞ்ச நேரத்தில் பொலிஸுக்குத் தெரிந்து போகிறது. ஆனால், கொஞ்சம் முதியவராக இருந்த ஒருவரின் முகத்தோற்றமும் பேச்சும் மட்டும் அவர் வெளிநாட்டுப் பிரஜையோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியது.

ஸ்டேஷன் வாசலில் அந்த ஆண்கள் மூவரும் பொலிஸ் விசாரணைக்காக உட்கார வைக்கப்பட்டார்கள். உள்ளே, மூன்று பெண்களும் அழைத்துச் செல்லப்பட்டு, விபசார வழக்குப்போட ஆயத்தப் பணிகள் நடந்து கொண்டு இருந்தன.

"என்னய்யா கொடுமை இது... தீவிரவாதிகளைப் புடிச்சு மெடல் வாங்கலாம்னு போனா.. இந்த மாதிரி கேஸ் சிக்குது" என்று நொந்துபோய் புலம்பினார் உயர் அதிகாரி. இன்ஸ்பெக்டரும் சுவாரஸ்யமில்லாமல் தலையாட்டினார்.

"அந்தா... கறுப்பா இருக்கான் பாருங்கய்யா. அந்தாள்தான் ரொம்ப தெனாவட்டா தென்படறான். அவனை அழைச்சுட்டு வர்றப்ப நாலு போட்டேன். அப்புறம்தான் திமிர் பண்றதைக் கொறைச்சுட்டான். யாருன்னு கரெட்டா டீடெய்ல் விசாரிச்சு, ஸ்டிராங்கா கேஸ் போடணும்யா!" என்று உயர் அதிகாரியிடம் சொன்னார் இன்ஸ்பெக்டர்.

"யோவ்...! பார்த்துய்யா. நல்லா விசாரிங்க. அவனுக பாட்டுக்கு பெரிய இடத்து ஆட்களா இருக்கப்போறானுக. நடுராத்திரியில அரஸ்ட் பண்ணினோம்னு, மனித உரிமை மீறல்... அது இதுன்னு வம்புல மாட்டி உட்ற போறனுங்க!" என்று உயர் அதிகாரி கொஞ்சம் நிதானப் படுத்தினார்.

மூவரையும் மறுபடி விசாரிக்க ஆரம்பித்தது பொலிஸ். அவர்கள் மெதுவாக வாய் திறக்க ஆரம்பித்த சமயம், மறுபடி ஃபோன் ஒலித்தது. "சார்... நீங்க கைது பண்ணி இருக்கற மூணு பேர்ல கறுப்பா இருக்கறவர் இந்தியாவுக்குப் பக்கத்து நாட்டு அமைச்சர். அவரை அரஸ்ட் பண்ணத்தான் போறீங்களா? அம்மா ஆட்சியை கவுக்காம விடமாட்டீங்க போல..." என்று அந்த டெலிஃபோன் குரல் சொல்லவும்.. வியர்த்து விறுவிறுத்துப் போனார் இன்ஸ்பெக்டர்.

உயர் அதிகாரியிடம் "சார்... நாம மோசம் போயிட்டோம். இவங்களைக் கூட்டிகிட்டு வந்த விவகாரம் வெளியில தெரிஞ்சாலே பேஜார்தான் சார். ரொம்ப பயமா இருக்கு, சார்!" என்று அழமாட்டாக் குறையாக சொன்னார் இன்ஸ்பெக்டர்.

ஓட்டலில் இருந்து அழைத்து வரப்பட்ட நபர், அண்டை நாட்டு அமைச்சராகத்தான் இருக்கமுடியும் என்று உயர் அதிகாரிக்கும் உறைத்தது. அவருடன் இருந்த இரண்டு ஆண்களில் ஒருத்தர் சினிமா தயாரிப்பாளர் என்பதையும் இன்னொருத்தர் வேறொரு தயாரிப்பாளரின் மகன் என்பதையும் மளமளவென்று தெரிந்துகொண்டார்கள்.

"அந்த மூவரையும் சத்தமில்லாமல் அப்படியே அனுப்பிவிடு!" என்று ஸ்டேஷன் வாசலில் நின்றிருந்த பாரா காவலருக்கு உத்தரவு போட்டுவிட்டு, உயர் அதிகாரியும் இன்ஸ்பெக்டரும் ஸ்டேஷனுக்குள்ளேயே இருந்துகொண்டனர். "ஐயா சொல்லிட்டாங்க.. நீங்க போகலாம்" என்று பாராவும் அவர்களை அனுப்பிவிட்டார். விபசார வழக்குக்காகத் தயாராகிக் கொண்டிருந்த ஆவணங்களெல்லாம் கிழித்தெறியப்பட்டு, அவர்களோடு அழைத்துவரப்பட்ட மூன்று பெண்களையும் சந்தடியில்லாமல் விரட்டி விட்டது பொலிஸ்.

முதலில் தகவல் சொல்லி ஒட்டலுக்குத் தங்களை அனுப்பிவைத்த ஃபோன் குரலை சபிக்கும் பொலிஸார்.. பிறகு, உஷார் படுத்திய குரலை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்களாம். அந்த ரெண்டாவது குரல் மட்டும் எச்சரிக்காமல் விட்டிருந்தால், அந்த நள்ளிரவு அரெஸ்ட் கேஸாகப் பதிவாகி, இன்றைய தேதிக்கு தமிழகத்தை உலுக்கும் பெரிய விவகாரமாகியிருக்கும் என்று அடித்துச் சொல்கிறார்கள் பொலிஸ் வட்டாரத்தில்.

குறிப்பிட்ட அந்த சென்னை ஸ்டேஷனில் நடந்தவற்றை நம்மிடம் விலாவாரியாகச் சொல்லி முடித்த பொலிஸ் அதிகாரி ஒருவர்,

"வெளிநாட்டு அமைச்சரை ஏதாவது குற்றவழக்கில் கைது செய்வதற்கு முன்னால், அந்த நாட்டுத் தூதரகத்துக்குத் தெரிவிக்க வேண்டும். இந்திய வெளியுறவுத் துறைக்கும் தகவலைச் சொல்லி அனுமதி பெற வேண்டும். இதையெல்லாம் செய்யாமல் அந்த அண்டை நாட்டு அமைச்சர் மட்டும் கைது செய்யப்பட்டு இருப்பரேயானால், இந்திய அரசுக்கே பெரும் நெருக்கடி ஏற்பட்டிருக்கும். அந்த அமைச்சரும் இதை பெரிதாக்காமல் கிளம்பிப் போனதற்குக் காரணம், அவர் சிக்கிய சூழல்தான்... இல்லையென்றால், அவர் நம் பொலிஸை உண்டு, இல்லைனு பார்த்திருப்பார்!" என்றும் சொன்னார்.

பர்சனல் விசிட்டாக ரிலாக்ஸ் பண்ணிக் கொள்ள தமிழக நண்பர்களைத் தேடி வந்த இடத்தில், யாரோ சில துரோகிகள் காட்டிக் கொடுப்பார்கள் என்று அந்த அமைச்சர் எப்படி எதிர்பார்த்திருப்பார்?

சிக்கித் தப்பிய அடுத்த நாளே சந்தடியில்லாமல் விமானத்தில் புறப்பட்டு தன் நாடு போய்ச் சேர்ந்து விட்டாராம் அந்த அமைச்சர்.

# எரியும் நகரம்

**இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சிறுகதைகளில் ஒன்று.**

**சுவீடன் நாட்டு எழுத்தாளர் யால்மர் சோடர்பேர்க் எழுதியது**

இரண்டு சன்னல்கள்; அழகிய திரைச்சீலைகள், அவற்றின் வழி குளிர் காலக் காலை இளம் வெயில் மெத் தென்ற பச்சைக் கம்பளத்தில் நீள் சதுரமாக சாய்ந்து விழுகிறது. வெது வெதுப்பாக ஒளிவிழும் இடங்களில் நின்று ஒரு சிறுவன் துள்ளிக்குதித்து ஆடு கிறான். இன்னும், உலகம் இன்னது என்று அறியாச்சிறுவன். அவன் இன்ன மும் சிறுவன்தான்; ஆனால் பெரியவன் ஆவான் என்பது அவனுக்குத் தெரியும். ஆனால், அவன் பிறந்திருக்கிறான் அல்லது அவன் இறப்பது நிச்சயம் என் றெல்லாம் அவனுக்குத் தெரியாது. இப் போது அவனுக்கு நாலு வயது; சீக்கிர மாகவே தனக்கு ஐந்து வயது ஆகிவிடும் என்பது அவனுக்குத் தெரியும். இருந்தும், வருஷம் என்றால் என்ன என்பது அவ னுக்குத் தெரியாது. இன்னும் காலத்தை நேற்று, இன்று, நாளை என்றுதான் கணக்கிடுகிறான்.

திடீர் என்று "அப்பா!" என்று கூப்பிடு கிறான். அவர் அப்போது தான் காலை உணவை முடித்து விட்டு, அன்றைய முதல் சுருட்டைப் பற்றவைத்திருக்கிறார். சுருட்டு குடிப்பதைக்கொண்டே அவர் காலத்தைக் கணக்கிடுபவர்.

"அப்பா, நேற்று ராத்திரி எத்த னையோ கனவுகள் கண்டேன்! இந்த அறை முழுவதையும் கனவில் பார்த் தேன்! நாற்காலிகள், பச்சைக் கம்பளம், கண்ணாடி, கடிகாரம், ஸ்டவ், சன்னல், கதவுகள், அலமாரிகள் எல்லாவற்றையும் கனவில் பார்த்தேன்."

இப்படி சொல்லிக்கொண்டே நெருப்பு சடசடவென்று எரிகின்ற 'ஸ்டவ்' பக்கமாகத் துள்ளிக்குதித்து, அங்கே போய் ஒரு குட்டிக் காரணம் போடுகிறான். அந்த 'ஸ்டவ்'வும், அதன் முன்னால் உள்ள இடமுமே அறையின் மிகச் சிறந்த முக்கியமான இடங்கள் என்பது அவன் எண்ணம்.

அவன் அப்பா, தன் கையில் வைத் திருந்த தினத்தாளின் மேல் பக்கமாக அவனைப் பார்த்து, தலையாட்டி சிரிக் கிறார். பையனும் சிரிக்கிறான்; அடக்க முடியாமல் சிரிக்கிறான்; சிரிப்பை மகிழ்ச்சியின் வெளிப்பாடாகவே கருதும் பருவத்தில்தான் அவன் இன்னமும் இருக்கின்றான். கேலியாகச் சிரித்து அனுபவிக்கும் வயது அல்ல அவனுக்கு. சில நாட்களுக்கு முன்னால் சன்னல் பக்கம் நின்று நிலவைப் பார்த்துச் சிரித்தான். அது, நிலவு வேடிக்கையாக இருந்தது என்பதற்காக அல்ல; அதன் வட்ட ஒளிமுகம் அவனுக்கு சந்தோஷம் தந்ததாலேயே.

சிரித்து முடிந்ததும் அவன் ஒரு நாற்காலியில் தொற்றி ஏறி நின்று, சுவரில் மாட்டியிருந்த படங்களில் ஒன்றை சுட்டிக் காட்டுகிறான்.

"மற்றெல்லாவற்றையும் விட இந்தப் படத்தையே நான் கனவில் கண்டேன்!" என்கிறான்.

'எரிகின்ற ஒரு நகரம்' என்னும் தலைப்புக் கொண்ட ஒரு டச்சு ஓவியத் தின் நிழற்படம் அது.

"சரி, கனவில் நீ என்ன பார்த்தாய்?"

"எனக்குத் தெரியவில்லை"

"கொஞ்சம் யோசித்துப்பார்!"

"ஆமாம். அது எரிந்து கொண்டிருந் தது. நான் ஒரு நாய்க்குட்டியைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருப்பதாகக் கனாக் கண்டேன்."

"ஆனால், சாதாரணமாக, நீ நாய்க் குட்டிகளைப் பார்த்து பயப்படுவாயே?"

"ஆமாம், ஆனால் படங்களில் நான் அவற்றை நன்றாகத் தட்டிக் கொடுப் பேன்."

பிறகு அவன் சிரிக்கிறான்; துள்ளிக் குதிக்கிறான்; ஆடுகிறான்.

கடைசியில் அப்பாவிடம் வந்து அவன் சொல்கிறான்; "அப்பா, சுவரி லிருந்து அந்தப் படத்தை எடுங்கள்; நேற்றுக் காட்டியது போல் திரும்பவும் அதை எனக்குக் காட்டுங்கள்."

அந்தப்படம் அறைக்குப் புதிது; முந்தின நாள்தான் அது அங்கே வந்தது. சுவர்களைச் சுற்றிலும் தொங்கிய படங் களை ஆரம்ப காலமாகவே பார்த்துப் பழகியிருந்தான். சிற்றப்பாக்கள் ஸ்டி ரின்பர்க், ஷோப்பனார், நெப்போலியன்; அவருவப்புத்தரும் கிழட்டு கதே, இள மைப்பருவத்துப் பாட்டி இவர்களுடைய படங்கள். ஆனால் எரிகின்ற நகரம் புதிய படம்; மேலும் மற்றப் படங்களை விட இது மிகவும் விசித்திரமாக இருந்தது. அப்பா பையனை குஷிப்படுத்துகிறார். படத்தைச் சுவரிலிருந்து கீழே எடுத்து, இரண்டு பேருமே அதைப் பார்த்து மகிழ்கிறார்கள்.

சிறிய ஒற்றைப்பாய்ப்படகுகளும், துடுப்புப்படகுகளும் நிரம்பி வளைந்து வளைந்து கடலுக்குச் செல்லும் பரந்த கழிமுகம். அதற்கு மேலே கவான்கள் உள்ள பாலம்; அதற்கும் உயரே கொத்த ளங்களுடன் கூடிய ஓர் அரண்; இடது புறக்கரையில் எரிகின்ற நகரம்; மஞ்சு உள்ளே வராமல் தடுக்கும் சுவர்கள். உயர்ந்த கூரைகளுடன் அகலம் குறைந்த, வரிசை வரிசையான வீடுகள். கிறித்துவக் கோயில்கள்; ஸ்தூபிகள்; இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருக்கும் மக்கள் கூட்டம்; பரந்து எரியும் அனல் கொழுந்து; புகை மண்டலம்; சுவர்கள் மேலே சார்த்தியிருக்கும் ஏணிகள்; ஆடிக் கொண்டிருக்கும் சுமைகளுடன் ஓடும் குதிரைகள்; பீப்பாய்களும் கோணிப்பை களும் சகல விதமான குப்பை கூளங் களும் நிறைந்த கடற்பாலம்; ஆற்றில் கவிழப் போகும் நிலையில் உள்ள துடுப்புப் படகில் மனிதக்கூட்டம். பாலத் துக்கு அப்பால் உயிர்தப்பிப் பிழைக்க ஓடும் சனங்கள். படத்தின் முன் பகுதியில் ஒன்றையொன்று முகர்ந்து பார்த்து வட்டமிடும் இரண்டு நாய்கள். படத்தின் மேல் பாகத்தில் வெகு தூரத்துக்கு அப் புறம் கழிமுகம் கடலை நோக்கிப் பரந்து கிடக்கும் இடத்தில், வெண் மேகங்களிடையே அடிவானத்தில் தோன் றும் ஒரு சின்னஞ்சிறு நிலவு; அது இந்தத் துயரக் காட்சியை வருத்தத்துடன் எட்டிப் பார்க்கிறது.

"அப்பா, நகரம் ஏன் எரிகிறது?"

"யாரோ நெருப்பை கவனியாது போட்டு விட்டிருக்கிறார்கள்"

"கவனக்குறைவாக இருந்தது யார்?"

"இவ்வளவு காலத்துக்குப் பிறகு யார் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது"

"நகரம் எரிந்துபோய்ப் பல நூற் றாண்டுகளாகி விட்டன" என்கிறார் அப்பா.

படத்தின் கண்ணாடியை அவன் தொட்டு எரிகின்ற நகரத்தைத் தன் சிறுவிரலால் சுட்டிக்காட்டி, "சரி, நேற்று இது எரிந்தது. ஆனால், இன்னும் அது எரிந்து கொண்டு இருக்கிறதே!" என் கிறான்.

உண்மைச் சம்பவங்களுக்கும், படங்களுக்கும் உள்ள வித்தியாசங்களை அப்பா அவனுக்கு விளக்கிச் சொல்லத் துவங்குகிறார். "அது உண்மையான நகரம் அல்ல; அது ஒரு படம்தான்; எத்தனையோ காலத்துக்கு முன்பே அந்த நகரம் எரிந்து முடிந்துபோய் விட்டது. அங்கே கைகளை ஆட்டியவாறு ஓடும் மனிதர்கள் இறந்து விட்டார்கள்; இப்போது அவர்கள் உயிரோடு இல்லை. வீடுகள் எல்லாம் எரிந்து போய் விட்டன; ஸ்தூபிகள் கீழே விழுந்து விட்டன. பாலமும் போய்விட்டது."

"ஸ்தூபிகள் எரிந்து போயிற்றா? அல்லது விழுந்து விட்டனவா?"

"எரிந்ததும் கீழே விழுந்து விட்டன."

"நீராவிப்படகுகளும் நாசமாகி விட்டனவா?"

"ரொம்ப காலத்துக்கு முன்னா லேயே அவை நாசமாய்ப் போய் விட்டன. ஆனால், அவை நீராவிப் படகுகள் அல்ல; பாய்மரப் படகுகள்தான்; அந்தக் காலத்தில் நீராவிப் படகுகள் கிடையாது" என்றார் அப்பா.



அதிருப்தியுடன் சிறுவன் தன் கீழுதட்டைப் பிதுக்குகிறான்.

"நீராவிப் படகுகள் இருப்பதை நான் பார்க்கிறேனே அப்பா. அந்த நீராவிப் படகின் பெயர் என்ன?"

அந்தப் பையனுக்கு என்று ஒரு தனி மனம். அவனுக்கு பதில் சொல்லிச் சொல்லி அப்பாவுக்கு அலுத்துப் போய் விட்டது. அதனால் அவர் சும்மா இருந் தார். பையன் பழைய டச்சு வர்த்தகக் கப்பல்களை சுட்டிக்காட்டி தனக்குத் தானே மழலையில் சொல்லிக் கொண்டி ருக்கிறான். "அந்தக் கப்பல் பெயர் பிரேகி, மற்றொன்று ஹில்லர்ஸீ; மூன்றாவது இளவரசி இஞ்சிபெர்க்.

திடீரென்று "அப்பா!" என அவன் கத்துகிறான், "நிலவும் போய் விட்டதா?"

"இல்லை. நிலவு இன்னும் இருக்கத் தான் செய்கிறது. அங்கு தெரிகிறவற்றில் இன்னும் இருப்பது அது ஒன்றுதான். குழந்தைகளுக்கு என்றுள்ள உன் அறையின் சன்னல் வழியாக அன்றொரு நாள் நீ பார்த்துச் சிரித்தாயே. அதே நிலவுதான் இது!"

திரும்பவும் பையன் அசையாமல் நின்று ஆழ்ந்து யோசிக்கிறான். பிறகு, இன்னும் ஒரு கேள்வி.

"அப்பா, இந்த நகரம் எரிந்தது ரொம்ப காலத்துக்கு முன்பா? இஞ்சி பெர்க் இளவரசியில் நாம் போனதற்கு வெகு நாளைக்கு முன்பா?"

"அதற்கும் மிக மிக நீண்ட காலத் துக்கு முன்பேயே எரிந்து விட்டது. அந்த நகரம் எரிந்தபோது நீயோ, நானோ, அம்மாவோ, பாட்டியோ யாருமே இங்கே இல்லை"

திடீரென்று சிறுவனின் முகத்தில் கவலை படர்ந்தது. மிகவும் துன்புற்றவன் போல எதையோ யோசித்தபடி வெகு நேரம் உட்கார்ந்திருக்கிறான். ஆனால் காரியங்கள் ஒன்றும் அவனுக்குப் பிடிபட வில்லை.

கடைசியில் அவன் கேட்கிறான்: "அந்த நகரம் எரிந்தபோது நான் எங்கே இருந்தேன், அப்பா? அம்மா வுடன் பாட்டி வீட்டில் இருந்த போதா அது நடந்தது?"

"பையா, இல்லை. நகரம் எரிந்த போது நீ இல்லை"

கீழுதட்டை மீண்டும் பிதுக்கியவாறு இருக்கிறான். 'நீங்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன்' என்று சொல்வது போல இருந்தது அது.

கடைசியாக அவன் கேட்கிறான்: "அந்த நகரம் எரிந்தபோது நான் எங்குதான் இருந்தேன்?"

"நீ உயிரோடு இல்லவே இல்லை" என்கிறார் அப்பா.

கண்களை உருட்டி அப்பாவைப் பார்க்கிறான் அவன். சட்டென அந்த சின்னஞ்சிறு முகம் பிரகாசிக்கிறது. அப்பாவிடமிருந்து பிய்த்துக் கொண்டு ஓடி, பச்சைக் கம்பளத்தில் சூரிய ஒளி விழும் இடத்தில் நின்று திரும்பவும் துள்ளிக் குதித்து ஆடி உரக்கக் கத்தி னான், "ஆமாம், எங்கேயோ! எங்கேயோ இருந்தேன்; அது அப்படித்தான்!"

அப்பா அவனோடு விளையாட்டா கப் பேசுகிறார் என்று நினைத்தான். இப்படிப்பட்ட எண்ணம் சிரிப்புக்கு இடமானது; வேலைக்காரப் பெண்கள் சில வேளைகளில் அவனிடம் இப்படி பேசுவார்கள். அது போலவே தன் அப்பாவும் பேசுகிறார் என அவன் நினைத்துக் கொள்கிறான்.

அதனால் சூரிய ஒளியில் குதித்துக் குதித்து ஆடுகிறான்.

(எஸ்.டி.எஸ். தொடர் அடுத்த வாரம் இடம் பெறும்)

---

# வாரம் ஒரு வார்த்தை!

**தென்கச்சி – கோ. சுவாமிநாதன்**

## 27. சொந்தம்

"இந்த வீடு எனக்குச் சொந்தம்"ன்னு சொல்றோம். அதுக்காக நாமபோற இடம்லாம் அந்த வீட்டையும் தோள்லே தூக்கி வச்சிக்கிட்டா போறோம்? அது முடியாத காரியம். நாம 'சொந்தம்'ன்னு நினைக்கிற பல விஷயங்கள் நமக்குச் சொந்தமில்லே சார்!

எட்டு லட்சரூபா செலவு பண்ணி வீடு கட்டியிருப்பீங்க.. பணம் உங்களுதுங்கற துக்காக அதுலே பல்லியும், எட்டுக்கால் பூச்சியும் வாழாமலா போயிடுது? அதுலாம் அந்த வீடு தன்னோடதுன்னு நினைச்சிக் கிட்டிருக்கும்!

"இவரு பத்துலட்சரூபா சொத்துக்கு அதிபதி!"ன்னார் ஒருத்தர். "சொத்து எங்கே?"ன்னு கேட்டா..

"கோர்ட் கேஸ்லே இருக்கு! ஜெயிச்சி வரணும்!"ங்கறார்! 'எது சொந்தம்?' இது தான் கேள்வி! இந்தக் கேள்விக்கு ஞானி கள் என்ன பதில் சொல்றாங்க? அதை இப்போ பார்க்கலாம்!

ஒரு முனிவர் இருந்தார். முற்றும் துறந்த முனிவர்! பற்றே இல்லாத பரமஞானி அவர். இன்னைக்கு ஒரு ஊர்லே இருப்பார். நாளைக்கு ஒரு ஊர்லே இருப்பார். ஒரு வேளைதான் சாப்பிடுவார். அதுவும் உப் பில்லாத சாப்பாடு. பொய் சொன்னா அவ ருக்குப் பிடிக்காது! பொய் சொல்றவங்க வீட்டுலே சாப்பிடவே மாட்டார்!

ஒரு நாள் அவரு ஒரு ஊருக்குப் போனார். இந்த ஊர்லே "உண்மையானவர் யார்"ன்னு கேட்டார். "அதோ ஒரு மாடி வீடு தெரியிதுங்களே! அந்த வீட்டுலே ஒரு பண்ணையார் இருக்கார். அவரு ரொம்பவும் உண்மையானவர். நேர்மையான வர். அடியார்கள் மேலே பக்தி கொண்டவர். ஒரு லட்சம் செல்வம் உள்ளவர். நாலு பிள் ளைகள் அவருக்கு!" அப்படின்னு பக்கத் துலே இருந்தவங்க சொன்னாங்க! உடனே இந்த முனிவர் அந்த பண்ணையார் வீட்டுக் குப் போனார். இதைப்பார்த்தவுடனே-உட் கார்ந்திருந்த பண்ணையார் உடனே எழுந்திரிச்சி ஓடியாந்து முனிவர் கால்லே விழுந்தார்.

"தயவு பண்ணி தாங்கள் எங்க வீட்டுலே வந்து சாப்பிடணும்"னார்! அவரோட அன்பு, அடக்கம், பணிவு இதுலாம் முனிவருக்குப் பிடிச்சிப் போச்சி! இருந்தாலும் 'அவர் உண்மையானவர்தானா?' அப்படிங்கறதை சோதிச்சிப் பார்த்துட்டுத்தான் அவரு வீட்டுலே சாப்பிடணும்ன்னு முடிவு பண் ணிட்டார் முனிவர்! "ஐயா! உங்களுக்கு செல்வம் எவ்வளவு உண்டு"ன்னார். "சுவாமி! என்கிட்டே இருபத்து இரண்டா யிரம் ரூபாய் உண்டு"ன்னார். "குழந்தைகள் எத்தனை பேர்?"ன்னு கேட்டார். "சுவாமி! எனக்கு ஒரே மகன்தான்"ன்னார் "உமக்கு வயசு என்ன?"ன்னு கேட்டார். "சுவாமி! என்னோட வயசு மூணு வருஷம், ஐந்து மாசம், ஏழு நாள் பதினாறரைமணி!"ன் னார்.

முனிவருக்குக் கோவம் வந்துட்டுது! "நீர் சொல்றது பூரா பொய்யா இருக்கு! உம்ம வீட்டுலே சாப்பிட்டா என்னோட தவமே அழிஞ்சுடும்!"ன்னு சொல்லி புறப் பட்டார்.



பண்ணையார் பதறிப்போய் அவர் கால்லே விழுந்தார். "சுவாமி! எனக்குப் பொய் சொல்லத் தெரியாது. நான் சொல்ற தெல்லாம் உண்மைதான்"ன்னார்! வரவு செலவு புத்தகத்தை எடுத்துக் காட்டினார். அதுலே இருப்புத் தொகை ஒரு லட்ச ரூபாய்ன்னு இருந்தது.

"இருபத்து ரெண்டாயிரம்ன்னு பொய் சொன்னியே!"ன்னார் முனிவர்.

"சுவாமி! ஒரு லட்சரூபாய் பெட்டியிலே இருக்கு! இதோ பாருங்க... 22 ஆயிரம் ரூபாய் தருமம் பண்ணியிருக்கேன். தருமம் பண்ணின பணம்தானே என்னோடது! பெட் டியிலே இருக்கிறது எப்படி எனக்குச் சொந்தமாகும்?"ன்னார்.

முனிவருக்கு ஆச் சரியம்! "சரி! உமக்கு நாலு பிள்ளைகள் இருக்கறதா கேள்விப் பட்டேனே!" ன்னார்.

"எனக்குப் பிறந்த பிள்ளைங்க நாலு பேரு தான்! ஆனா எம்பிள்ளை ஒருத் தன்தான்!"னார்.

"அது எப்படி"ன்னார் முனிவர்.

"மகனே நடராஜா"ன்னு கூப்பிட்டார் பண்ணையார். "சீட்டு விளையாடிக்கிட் டிருக்கேன்! வர முடியாது"ன்னான் நட ராஜன். "மகனே வேல்சாமி!"ன்னு கூப் பிட்டார். "ஏன் இப்படி கூச்சல் போடறே? பேசாமே இருன்"னான் வேல்சாமி! "மகனே சிவசாமி!"ன்னு கூப்பிட்டார். "உனக்குப் புத்தி இருக்கா! ஏன் இப்படி அலர்றே! இந்த பூமிக்கு சுமையா இன்னமும் ஏன் இருக்கே!" அப்படின்னான் சிவசாமி! "மகனே கந்தசாமி"ன்னு கூப்பிட்டார் பண் ணையார்!

கந்தசாமி உடனே ஓடிவந்து கைகட்டி நின்னான். "என்னப்பா வேணும்?"ன்னு கேட்டான்!

"சுவாமி! இவன் ஒருத்தன்தான் என் பிள்ளை!"ன்னார்.

"சரி! வயசு விஷயம் எப்படி?"ன்னார் முனிவர்.

"சுவாமி நான் ஒரு நாளைக்கு 1 1/2 மணி நேரம்தான் வழிபாடு செய்யறேன்! மத்த நேரம்லாம் இந்த உடம்புக்காக உழைக் கிறேன்.

அடியேனுக்கு இந்த உடம்பு பிறந்து அறுபது வருஷம் ஆகுது. ஆனாலும் 5 வயசுலேயிருந்து வழிபாடு பண்ணின நேரம் தான் எனக்குச் சொந்தம். அதை கூட்டி தான் வயசா சொன்னேன்!"னார்.

முனிவர் ரொம்பவும் சந்தோஷப்பட்டு, அவரு வீட்டுலே சாப்பிட்டுட்டுப் போனா ராம்.

இது பெரியவர் ஒருத்தர் சொன்னது. இதுலேயிருந்து எது 'நமக்குச் சொந் தம்'ன்னு விளங்குது இல்லையா?


இந்தத் தகவலை உங்ககிட்டே சொல்ற துக்கு முன்னாடி என் சிநேகிதர் ஒருத் தர்கிட்டே சொன்னேன். அவருக்கு வயசு 50 இருக்கும். சொல்லிபுட்டு "இப்ப சொல் லுங்க! உங்க வயசு என்ன?"ன்னேன். அதுக்கு அவரு..

"இப்பத்தான் நான் பொறந்திருக் கேன்!"னார்.

**(வார்த்தைகள் தொடரும்)**

# ஸ்போர்ட்ஸ்

## அண்டி ஃபிளவரை அசத்தியவர்கள்



**ஸி**ம்பாப்வே அணியின் துடுப்பாட்டத் தூண்களில் முக்கியமான வரும் முன்னாள் கப்டனுமான அண்டி ஃபிளவர் அண்மையில் அளித்த 'மினி' பேட்டி இது.

**✪ உங்களுக்குப் பந்து வீசியவர்களில் அச்சுறுத்தக்கூடிய பந்து வீச்சாளராக யாரைக் கருதுகிறீர்கள்? ஏன் கருதுகிறீர்கள்?**

☛ பாகிஸ்தானின் வாஸிம் அக்ரமும் அவுஸ்திரேலியாவின் கிளென் மக்ராத்தும் தான்.

பந்தை 'ஸ்விங்' செய்வதில் அக்ரம் கில்லாடி. துல்லியமாகப் பந்து வீசுவதில் மக்ராத்தை மிஞ்ச ஆளில்லை. இவர்கள் இருவரும் பந்து வீசுகிறார்கள் என்றால் நான் மட்டுமல்ல, யாராக இருந்தாலும் கொஞ்சம் திணரத்தான் வேண்டும்.

**✪ எந்த வீரரின் பேட்டிங்கைப் பார்த்து இரசிக்க விருப்பம்? ஏன்?**

☛ சச்சின் டெண்டுல்கர். இவரது ஆட்டத்தைப் பார்க்கும்போது பேட்டிங் என்பதை ஏதோ ரொம்ப சாதாரண விஷயம் என்று நினைக்க வைத்து விடுகிறார். சச்சினின் ஒவ்வொரு 'ஷொட்'டும் டெக்னிக்கலாக டொப் கிளாஸ்.

அபார மன உறுதியுடன் ஆட்டத் திறணை வெளிப்படுத்துவதில் அசகாய சூரர் அவுஸ்திரேலிய கப்டன் ஸ்டீவ் வோவ்.

**★ சர்வதேச கிரிக்கெட்டில் இன்னும் எவ்வளவு காலம் அசத்த ஆசை?**

☛ உடல் மற்றும் மன ரீதியாக எவ்வளவு காலம் முடியுமோ அவ்வளவு காலம் விளையாட ஆசை. கிரிக்கெட் மீதான 'பசி' இப்போதுதான் ஆரம்பமாகி இருக்கிறது. ஓய்வு பெறுவது பற்றி இன்னமும் வரையறுத்துக் கொள்ளவில்லை.

## ஒரு போட்டியில் 22 பட்டேல்கள்

**ஒ**ரு கிரிக்கெட் போட்டியில் இரு அணிகளிலும் விளையாடிய வீரர்கள் அனைவரினதும் பெயர்கள் பட்டேல்களாக இருந்ததால் நடுவர்களும் ஸ்கோரர்களும் திக்குமுக்காடிப் போய் விட்டார்கள். ஒரு பட்டேல் பந்து வீச, ஒரு பட்டேல் கட்ச் பிடிக்க, மற்றொரு பட்டேல் அவுட்டானார்

பட்டேல் என்ற பெயரைப் பார்த்ததும் இது நடந்தது இந்தியாவில் என்று யூகித்திருப்பீர்கள். ஆனால் இது நடந்தது இங்கிலாந்தில். இலண்டனில் இருந்து வெளியாகும் 'சண்' தினசரி இதைத் தெரிவித்துள்ளது.

இங்கிலாந்தின் பிரட் ஃபோர்ட் நகரில் சில நாட்களுக்கு முன் நடந்த லீக் போட்டி ஒன்றில் விளையாடிய அனைத்து வீரர்களின் பெயர்களுக்குப் பின்னாலும் பட்டேல் என்ற குடும்பப் பெயர் இருந்தது.

அத்தோடு இப்போட்டியில் ஸ்கோரராக இருந்த ஒருவரது பெயரும் பட்டேல் என்று இருந்தது. மேலும் ஓர் ஆச்சரியம்.

"இதுபோன்று இதுவரை நாங்கள் கேள்விப்பட்டதேயில்லை. நல்லவேளையாக இவர்கள் வருடத்திற்கு ஒரு முறைதான் விளையாடுகிறார்கள்.

தொடர்ந்து விளையாடினால் ஒரே குழப்பமாகி விடும்," என்று பிரட்ஃபோர்ட் மியூச்சுவல் சண்டே லீக் ஸ்கூலின் செயலர் பட்டர் ஃபீல்ட் தெரிவித்துள்ளார்.

கோடியில் ஒருமுறை தான் இப்படி நடக்கும் என கிரிக்கெட்டின் பைபிளாகக் கருதப்படும் 'விஸ்டன்' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

## அசத்தும் ஆட்ட நாயகன்

**கி**ரிக்கெட்டில் இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் செய்துள்ள சாதனைகள் கொஞ்ச நஞ்சமல்ல. அதிலும் ஒருநாள் போட்டிகளில் உலக சாதனைகளில் அதிகமானவை டெண்டுல்கர் வசம் உள்ளன.

டெண்டுல்கர் இல்லாத இந்திய அணி, இலங்கையில் படும் பாட்டைப் பார்த்தாலே புரியும்.

ஒருநாள் போட்டிகளில் அதிக சாதனைகளைப் படைத்த வீரர் என்ற சாதனையை டெண்டுல்கர் படைத்தாலும் ஆச்சரியமில்லை என்னுமளவுக்கு அவர் அதிரடி சாதனைகளை செய்து வருகிறார்.

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அதிக தடவைகள் 'ஆட்ட நாயகன்' விருது பெற்றிருப்பது சச்சினின் லேட்டஸ்ட் சாதனை.

சில வாரங்களுக்கு முன் ஸிம்பாப்வேயில் நடந்த 3 நாடுகளுக்கிடையிலான முத்தரப்புப் போட்டியின் லீக் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிராக சிறப்பாக விளையாடியமைக்காக 'ஆட்டநாயகன்' விருது சச்சினுக்கு வழங்கப்பட்டது.

சர்வதேச ஒருநாள் போட்டியில் அவருக்கு இது 40 வது 'ஆட்டநாயகன்' விருது ஆகும். ஒருநாள் போட்டிகளில் இதற்கு முன் எந்த வீரரும் இத்தனை தடவைகள் 'ஆட்டநாயகன்' விருதுகளை வென்றதில்லை.

## புயலுக்குப் புதிய போட்டி

**கி**ரிக்கெட் மைதானத்தில் ஏதோ புயல் மையம் கொண்டது போல், படுபயங்கர வேகத்தில் ஓடிவந்து அதிவேகத்தில் பந்து வீசுவதில் பாகிஸ்தான் பந்துவீச்சாளர் சொகைப் அக்தர் கில்லாடி.

ஆனால் அவரையும் முந்தி விடும் விதத்தில் ஓர் இளம் வீரர் தமிழகத்தின் சென்னையில் உருவாக்கப்பட்டுள்ளார். மிட்செல் ஜோன்சன் என்ற அந்த வேகப்பந்து வீச்சாளர் -ஓர் அவுஸ்திரேலியர்.

அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர்களான மிட்செல் ஜோன்சன், மைக்கல் திஸ்லே ஆகிய இருவரும் சென்னையில் உள்ள எம்.ஆர்.எஃப். வேகப்பந்து பயிற்சி மையத்துக்குச் சென்று பயிற்சி பெற்றனர். அவுஸ்திரேலிய முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் டென்னிஸ் லில்லியின் மேற்பார்வையில் பந்து வீச்சு நுணுக்கங்களைக் கற்றுத் தேர்ந்த இவர்கள் இருவரும் 20 வயதிற்கு உட்பட்டவர்கள்.

இவர்களில் மிட்செல் ஜோன்சன் 19 வயதுக்குட்பட்ட அவுஸ்திரேலிய அணியில் விளையாடுகிறார். "இதே வயதில், அவுஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் பிரெட் லீ வீசியதை விட, மிட்செல் அதிவேகமாக வீசுகிறார்" என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் அகாடமியின் தலைமைப் பயிற்சியாளர் ரொட்னி மார்ஷ் கூறியுள்ளார்.

"மைதானத்தில் சூறாவளி அடித்தது போல் அதிவேகமாகப் பந்து வீசச் செல்வதில் மிட்செல்லை மிஞ்ச முடியாது" என்கிறார்கள் அவுஸ்திரேலியர்கள்.

துடுப்பாட்டக்காரர்கள் பாடு இனித் திண்டாட்டம் தான் போலிருக்கிறது. புதிய புயலை எதிர்கொள்ள அவர்கள் தயாராக வேண்டும்.

## அப்பாவாகும் அவுஸ்திரேலிய வீரர்கள்



**அ**வுஸ்திரேலிய கிரிக்கெட் அணித் தலைவர் ஸ்டீவ் வோவ் மற்றும் பந்துவீச்சாளர்களான கிளென்மக்ராத், ஷேன் வோர்ன் ஆகியோர் வரும் செப்டெம்பர் மாதத்தை ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். செப்டெம்பரில் அப்படி என்ன விசேஷம்?

மேற்படி 3 வீரர்களும் செப்டெம்பர் மாதத்தில் அப்பாவாகப் போகிறார்கள். எனவே பிறக்கப்போகும் குழந்தைக்காக செப்டெம்பர் மாதத்தை ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்.

தற்போது இங்கிலாந்தில் விளையாடி வரும் அவுஸ்திரேலிய அணி, வருகின்ற செம்டெம்பர் மாதம் இந்திய அணியுடன் உள்ளரங்கு ஒருநாள் போட்டித் தொடரில் விளையாடத் திட்டமிடப்பட்டிருந்தது. இதனால் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் வோவ், மக்ராத், வோர்ன் ஆகியோர் கலந்து கொள்ள மாட்டார்கள் எனவும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை வருகின்ற செப்டெம்பர் மாதம் ஆசிய டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி கலந்து கொள்வதால், அவுஸ்திரேலியா சென்று, இந்திய அணியால் விளையாட முடியாது என்று தெரிவித்தார்.

இதையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையிலான உள்ளரங்கு ஒருநாள் போட்டித் தொடர் நடைபெற மாட்டாதென உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலக்கிய நயம்

## தலைவனின் அச்சம்!

"**எ**னக்குப் பாடசாலைக்குப் போகவேண்டும் என்று நினைத்தாலே வெறுப்பாக இருக்கிறது" என்றான் தேனரசன்.

"என்னப்பா, என்ன திடீரென்று?" என வினவினான் ரமணன், திறந்து வைத்திருந்த புத்தகத்தை மூடிக்கொண்டே.

"மாணவர்கள் என்னை மதிக்கிறார்களில்லை. ஆசிரியர்களோ எப்போதும் எனக்கு எரிச்சலூட்டும்படியாகத்தான் நடந்துகொள்கிறார்கள்... பாடசாலைக்குப் போவதை நினைத்தாலே ஏதோ கொலைக்களத்துக்குப் போவதைப் போலத்தான் இருக்கிறது..."

"ஆனாலும் நீ போய்தானே ஆகவேண்டும். பாடசாலையின் அதிபரான நீயே போகாமலிருந்தால் எப்படி?" என்று கேட்டு விட்டுத் திரும்பவும் கையிலிருந்த புத்தகத்தைத் திறந்து வைத்துக் கொண்டான் ரமணன்.

"டேய்.. நீ அந்தப் புத்தகத்தை மூடு, என்னுடைய பிரச்சனையைக் கேள்.."

"சரி, சொல்லு" என்றான் புத்தகத்தை மூடி அருகில் வைத்துவிட்டு.

"ஆசிரியர்கள் யாரும் என் சொல்லைக் கேட்கிறார்களில்லை. மாணவர்களோ நாளுக்குப் பத்துப் பதினைந்து பிரச்சனைகளைச் சொல்லிக்கொண்டு வந்து நிற்கிறார்கள்.

அவர்கள்மீது புகார்களை அடுக்கிக் கொண்டு ஆசிரியர்கள் வருகிறார்கள். அதிபர் அறைக்குள் போயிருந்தால், அங்கு ஒவ்வொரு நிமிஷமும் என்னைப் பிடுங்கித் தின்னுகின்றன. தாங்க முடியவில்லை..."

"தலைமைப் பொறுப்பென்றால் அப்படித்தான் தேனரசா! பிரச்சனைகள் உன்னிடம் வந்தவண்ணம்தான் இருக்கும் எரிச்சலடைந்தால் எதற்கும் தீர்வு காண மாட்டாய். நல்ல தலைமை என்பது பிரச்சனைகளுக்கு நடுவிலும் பெருந்தன்மையுடன் நடந்துகொள்வதே!"

"பிரச்சனைகள் அவ்வப்போது வந்து கொண்டிருந்தால் சமாளித்துக் கொண்டு செல்வதில் சிக்கலில்லை. ஆனால், ஒவ்வொரு நாளும் விடியற் காலையில் காற்சட்டை, சேர்ட் போட்டுக் கொண்டு டையையும் கட்டிக் கொண்டு போய் இருப்பதே பிரச்சனைகளின் மேல்தான் என்றால் எப்படிச் சகிப்பது சொல்லு?"

"பிரச்சனைகள் எல்லா இடத்திலும்தான் இருக்கும். ஒரு நல்ல தலைவனுக்குப் பதவியாசனம் ஒன்றும் மகிழ்ச்சியான இருக்கை அல்ல. 'கம்ப மதயானை கழுத்தகத்தின் மீதமர்ந்து இன்பமும் செல்வமும் இன்னரசும் யான் வேண்டேன்..' என்று தான் நல்ல உள்ளம் படைத்த அரசர்கள் பலரும் கதறியிருக்கிறார்கள். நல்லவனாய் நடந்துகொள்ள நினைப்பவனுக்கு சுற்றிவரப் பிரச்சனைகளோடு வரும் மனிதர்கள் தொல்லையாகத்தானிருக்கும். நீ நல்லவனாய் இருந்தால் போதாது. வல்லவனாயும் இருக்க வேண்டும். கண்டிப்பாக நடந்துகொள்ள வேண்டிய இடங்களில் வெறும் நல்லவனாக மட்டும் இருக்காதே!"

"ம்.. கம்பமத யானை கழுத்தின் மீதிருந்து போவதுபோலத் தான் பார்க்கிறவர்களுக்குத் தெரியும். ஆனால் ஏறி இருப்பவனுக்குத்தான் இருப்பதன் சிரமம் தெரியும். நீ சுலபமாய்ச் சொல்லிவிட்டாய் வல்லமையைக் காட்டு என்று. எதன் பக்கம் என் வல்லமையைக் காட்டுவது. ஆசிரியர்கள் சொல்வதைக் கேட்டால், மாணவர்கள் என்னைத் தப்பாக நினைத்துக் கொள்கிறார்கள். மாணவர்களின் பிரச்சனைக்குக் காது கொடுத்தால் ஆசிரியர்கள் என் தலைமையே சரியில்லை என்று போர்க்கொடி உயர்த்துகிறார்கள். யாரிடம் என் கண்டிப்பைக் காட்டச் சொல்கிறாய்?"

"எல்லோரையும் கூட்டி வைத்துப் பேசு. சரியானதைத் தெளிவுபடுத்து. தண்டிக்கப்பட வேண்டிய விடயங்களில் தண்டனை தருவதில் கறாராக நடந்துகொள். அதற்கு உன் முடிவுகளை எல்லோரதும் முடிவுகளாகக் காட்டிக் கொள்ள வேண்டும்.

"போடா! பிறகும் சுலபமாகப் புத்திமதிகளை அடுக்கிக் கொண்டு போகிறாய். என் கவலையும் பயமும் உனக்கு விளங்க மாட்டேன் என்கிறது..."

"புரியாமல் இல்லை தேனரசா! நான் உனக்கு ஒட்டு மொத்தமாக எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்றுதான் சொல்ல முடியும். ஒவ்வொரு விடயத்திற்கும் என்ன என்ன தீர்வு என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. உன் மனதைத் திடமாக வைத்துக் கொண்டு பிரச்சனைகளை அணுகுவதே வழி.

ஒரு நல்ல தலைவனுக்குத்தான் கவலையும் அச்சமும் இருக்கும். அப்படி இருப்பவன்தான் பொறுப்புணர்வோடு நடந்து கொள்வான். அரசர்களாயிருந்தவர்களின் அனுபவமும் இதுதான். ஒரு நல்ல அரசனுக்குத்தான் எத்தனை கவலைகள்!

அந்த வருடம் மழை பொய்த்துவிட்டதென்றலும் அரசனுக்குத்தான் கவலை, தனது அரசாட்சியில் ஏதோ நீதி தவறியதால்தான் மழை பெய்யவில்லையோ என்று மக்கள் துன்பமடைய நேர்ந்தாலோ பயம். தன்னுடைய ஆட்சியைத்தான் குற்றம் சொல்வார்கள் என்று அச்சமுறுவான். அதனால் நீதி பிறழ்ந்துவிடக்கூடாது என்பதில் எந்நேரமும் அவனுக்கு அச்சம் இருந்துகொண்டேயிருக்கும். மக்கள் தன்னைக் கொடுங்கோலன் எனச் சொல்லிவிடுவார்களோ என்று நினைந்து நினைந்து அச்சம்... இப்படி அச்சம் நிறைந்த வாழ்க்கையில் இருப்பவன்தான் நல்ல தலைவன். அச்சமும் கவலையும் படாதவன் கொடுங்கோலனாகத்தான் இருப்பான். நீ கவலைப்படுவதில் நியாயம் இருக்கிறது. நல்ல தலைவனாக இருப்பவன் கவலைப்பட்டபடிதான் அச்சப்பட்டபடிதான் இருப்பான்.



**மழைவளம் கரப்பின், வான் பேர் அச்சம்**
**பிழை உயிர் எய்தின், பெரும் பேர் அச்சம்**
**குடிபுரவுண்டும் கொடுங்கோல் அஞ்சி**
**மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்**
**துன்பம் அல்லது தொழுதகவு இல்.**

*சிலப்பதிகாரம்.*

தருவது முழடில்யன்

# சிந்தியா பதில்கள்

**★ எதற்கு மதிப்பு அதிகம்-உயிருக்கா, பணத்திற்கா?**

கி.சுபாசினி, வெதமுல்ல.

நாலாயிரம் கோடியை இழந்தும் ஒரு உயிரைக் காப்பாற்றும் போது உயிருக்கு மதிப்புக் கொடுக்கிறோம். நாலாயிரம் கோடியை அழிப்பதற்கு எட்டுப் பேரைப் பலி கொடுப்பது சரிதான் என்று அங்கீகரிக்கையில் பணத்திற்கு மதிப்புக் கொடுக்கிறோம்.

◈◈

**★ என் அபிமான எழுத்தாளர் ரமணி சந்திரன் அவர்களின் முகவரியைத் தரமுடியுமா?**

எ.ஃப்.சல்மா, கண்டி.

திருமதி ரமணி சந்திரன், 92, பிருந்தாவன் நகர், சென்னை 600 087. தெ.பே: 4867290.

◈◈

**★ வானொலிகளில் உமக்குப் பிடித்தது எது? பிடிக்காதது எது?**

ரீ.தாரிணி, நாவிதன்வெளி.

தென்றலின் உச்சரிப்பு சுத்தம் பிடிக்கும்; வான்கோழி ஆசைகள் பிடிப்பதில்லை. சக்தியின் கண்டிப்பும் கறாரும் பிடிக்கும்; அதையே நேயர்களோடு பேசும்போதும் காட்டுவது பிடிப்பதில்லை. சூரியனின் கலகலப்பு பிடிக்கும்; ஆனால் நேயர்களோடு அத்துமீறி வம்பளப்பது பிடிப்பதில்லை. சுவர்ண ஒலி அதிகம் வளவளக்காமல் சட்டென்று பாடலுக்கு நழுவி விடுவது பிடிக்கும்; சம்பந்தமில்லாமல் பேசச் சொல்லி அறுப்பது பிடிப்பதில்லை.

◈◈

**★ சிந்தியா! அதிகமாக சிரிக்கும் பெண்கள் பற்றி?**

கே.அக்கீத், ஆண்டியா புளியங்குளம்.

சந்தோஷம் அடைபவர்கள் சிரிக்கிறார்கள். இதில் ஆணென்ன, பெண்ணென்ன?

◈◈

**★ மறைந்த தலைவர் அஷ்ரப், புலிகளின் தலைவர் பிரபாகரன், ஜனாதிபதி சந்திரிக்கா இவர்களிடமுள்ள ஒற்றுமை ஒன்றைக் கூறுங்கள்?**

அலி மூஸா, நிந்தவூர்-03.

இவர்கள் மட்டுமில்லை. வாஜ்பாய், சோனியா, மகாத்மா காந்தி, மாசேதுங், ஸ்டாலின், ஹிட்லர், அரபாத், புஷ், மண்டேலோ, பொல்போட்... என்று எல்லோரிடமும் ஒற்றுமையாக இருந்த அம்சம்-நாம் நினைக்கும் வழியிலேயே மக்களுக்கு நல்லது நடக்கும் என்று அவர்கள் நம்பியதுதான்.


◈◈

**★ அன்புள்ள சிந்தியா! ரஜினிகாந்த் சொந்தமாக யானை ஒன்று வளர்க்கிறாராமே, உண்மையா?**

எஸ்.நிஷாந்தன், தவசிக்குளம்.

எனக்கது தெரியாது. ஒவ்வொரு படமும் முடிந்ததும் அவர் தாடி வளர்ப்பது தான் தெரியும்.

◈◈



**★ சக்தி ரி.வி.யில் முன்பு ஒளிபரப்பிய திரைப்படங்களையே மீண்டும் ஒளிபரப்புகின்றார்களே?**

சி.மனோரதி, பாலையடி வெட்டை.

சரியாகப் பார்த்தீர்களா? நடிகர்களும் அதே நடிகர்கள்தானா?

◈◈

**★ 'சேலை கட்டிய மாதரை நம்பினால் தெருவிலே நின்று தயங்கித் தவிப்பரே' என்று சொல்லியிருக்கிறார்களே... அப்படி என்றால் கவுண் அணிந்த மாதரை நம்பலாமா?**

க.கமால்தீன், ஏறாவூர்-03.

"வேட்டி கட்டிய வீணரின் வெட்டிப் பேச்சை விட்டுத் தள்ளு"

"காற்சட்டை அணிந்த கனவானை நம்பினால் கடலுக்குள் மாண்டு கதை முடியுமே..."

எவ்வளவு காலத்துக்குத்தான் அவர்களைப் பேசவிடாமல் நீங்களே ஏகத்தாளம் பண்ணிக் கொண்டிருக்கப் போகிறீர்கள்?

◈◈

**★ அன்பின் சிந்தியா, இந்த சமூகத்தில் நிலவும் அநியாயங்களை எல்லாம் எப்படி சகித்துக் கொள்வது?**

வீ.ஜெயராஜ், கோரகல்லிமடு.

அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். இந்த சமூக அமைப்பே உங்களை அதற்கு உரியவராக மாற்றிவிடும். கதை ஒன்று:

தருமன் என்று ஒரு தையல் கடைக்காரர் இருந்தார். ஒருநாள் தான் தைக்கக் கொடுத்திருந்த சட்டையை வாங்குவதற்காக ஒருவன் கடைக்கு வந்தான்.

வந்தவன் தைத்து முடிக்கப்பட்டிருந்த ஆடையை அணிந்து பார்த்து விட்டு, ஒரு கை மற்றைய கையைவிட நீளம் அதிகமாக இருப்பதைக் கண்டு அதிருப்தியோடு முணுமுணுத்தான்.

அதைப்பார்த்துவிட்டுத் தையல்காரர் சொன்னார்; "எதற்கு இவ்வளவு கவலைப் படுகிறீர்கள்? சட்டையைப் பாருங்கள். எவ்வளவு கலையம்சம் கொண்டதாக இருக்கிறது. ஒரு சின்னக் குறைபாட்டுக்காக நீங்கள் அதிகம் சங்கடப்பட்டுக் கொள்கிறீர்களே! உங்களுடைய அந்தப் பக்கத்துக் கையை கொஞ்சம் உள்ளே இழுத்து வைத்துக் கொண்டால் போதும். இரண்டு பக்கமும் சரியாக இருக்கும்!"

அந்த மனிதனும் அதுமாதிரி முயற்சி செய்து கையைக் கொஞ்சம் உள்ளே இழுத்துக் கொண்டு பார்த்தபோது, முதுகுப்பக்கம் சட்டை தொய்ந்திருப்பதை உணர்ந்தான்.

"முதுகுப் பக்கம் சட்டை தள்ளிக் கொண்டு நிற்கிறதே?" என்றான்.

"அதனாலென்ன? நீங்கள் சற்றுக் கூனிக் கொண்டால் இது சரியாகி விடும். இந்தச் சட்டை மிக அழகான வேலைப்பாடுகளைக் கொண்டிருக்கிறது. இதை மாற்றியமைத்தால் நன்றாக இராது. உங்களுக்கு இப்போது பொருந்திவிட்டது. அழகாயும் இருக்கிறது" என்றார் தையல்காரர்.

சட்டை வாங்க வந்தவன், அந்தப் புதிய சட்டையைப் போட்டுக் கொண்டு கொஞ்சம் கூனியவாறு நடந்து கடையை விட்டு வெளியேறினான்.

வீட்டை நோக்கி இவ்வாறு நடந்து சென்றுகொண்டிருக்கும் போது வழியில் ஒருவன் அவனிடம், "நில்லப்பா! இந்தச் சட்டை புதியதா? மிக அழகாக இருக்கிறதே! நிச்சயம் இதைத் தைத்தவன் தருமனாகத்தான் இருக்க வேண்டும்.." என்றான்.

இதைக் கேட்டு சட்டையை அணிந்திருந்தவன் ஆச்சரியப்பட்டான். "எப்படி ஐயா, உங்களுக்கு இது தெரியும்?"

"தருமனைப் போன்ற ஒரு தையல்காரன்தான் உங்களைப் போன்ற கூனனுக்கு இவ்வளவு அழகான சட்டையைத் தைத்துத் தர முடியும்" என்று கூறி நடந்தான் வழிப்போக்கன்.

# நாகலோகம் சென்ற விக்கிரமாதித்தன்

அச்சுத நகரத்தின் அரசன் அச்சுதவர்மனுக்கு வயது வந்த நான்கு பெண்கள் இருந்தனர். இவர்களில் எவருக்குமே திருமணம் நடைபெற வில்லை. மூத்த் மகளான அச்சுதவல்லிக்கு திருமணமான அன்றே அவளுக்குத் தாலி அணிவிக்கும் மணமகன் இறந்துவிடுவான்.

அந்த நகரத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிலிருந்தும் தலைமகன்களை ஒவ்வொரு நாளும் மணமகனாக அனுப்புவது வழக்கம்.

அன்றைய தினம் மணமகனாகச் செல்ல வேண்டிய ஓர் ஏழைத்தாயின் மகனுக்குப் பதிலாக விக்கிரமாதித்தன் அரண்மனைக்குச் சென்று அச்சுதவல்லியை மணம் முடிக்கிறார்.

ஒவ்வொரு நாளும் வரும் மணமகன்கள் எவ்வாறு இறக்கின்றனர் என்பதை வேதாளத்தின் மூலம் அறிந்து கொண்டார் விக்கிரமாதித்தன். திருமணமான அன்றிரவு மணமகனைக் கொத்திச் சாகவைத்துவிட்டு மணமகளை மயக்கி, அவளுடன் உறவு கொண்டு இருந்துவிட்டு சென்றுவிடுவது பாம்புருவில் வரும் நாகராஜனின் வழக்கமாக இருந்தது.

அன்றிரவும் பாம்பு அறையினுள் வந்த போது உடனே அதனுடைய வாலை விக்கிரமாதித்தன் வெட்டி விட்டார். பாம்பு ஓடி விட்டது. சற்று நேரத்தின் பின்னர் அச்சுதவல்லி மயக்கம் தெளிந்து எழுந்துப் பார்த்த போது, மணமகனான விக்கிரமாதித்தன் உயிருடன் இருந்ததைக் கண்டு ஆச்சரியப் பட்டதுடன் பெரும் மகிழ்ச்சியும் அடைந்தாள்.

அடுத்தநாள் காலை அரண்மனையின் இளவரசியின் அந்தப்புரத்தில் மணமகனின் பிரேதத்தை எடுத்துச் செல்வதற்காக வந்து பார்த்தபோது மணமகன் உயிருடன் இருப்பது கண்டு மன்னரிடம் சென்று உண்மையைக் கூறினார்கள். மணமகன் இறக்கவில்லையென்றும், தன் மகளை மணமுடித்தவர் மாமன்னர் விக்கிரமாதித்தர்தான் என்பதையும் அறிந்த மன்னர் மிக்க மகிழ்ச்சியடைந்தார்.



மணமகனுக்கு வேண்டிய மரியாதைகள் அனைத்தையும் செய்தார்.

அச்சுதவல்லியையும் அவளுடைய மூன்று தங்கைமாரையும் விக்கிரமாதித்தனுக்கே மணமுடித்து கொடுத்தார் அரசர் அச்சுதவர்மன்.

தனது மனைவிமாருடன் சில காலம் வாழ்ந்திருந்து விட்டு, தான் அங்குவந்த காரணத்தை அச்சுதவர்மனிடம் கூறினார். நாகபுரம் சென்று நாகரத்தினங்களை பெற்று வரவேண்டி இருக்கிறது என்று கூறி அங்கு செல்வதற்கான மார்க்கத்தைக் கூறும்படி அரசரிடம் விக்கிரமாதித்தன் வினவினார்.

இதனைக் கேட்ட மன்னர் அச்சுதவர்மன் உண்மையிலேயே பயந்து போனார். "நாகபுரம் சாதாரணமான ஓர் இடமல்ல. அந்நகரத்தைச் சுற்றிலும் நச்சுக்காற்று பரவியிருக்கிறது. அங்கு செல்லும் எவரையும் அந்த நச்சுக் காற்று கொன்றுவிடும். எனவே தயவு செய்து என்னிடம் அந்த நகரைப்பற்றி எதனையும் கேட்காதீர்கள்" என்று அரசர் ஒதுங்கிக் கொண்டார்.

அரண்மனையை விட்டு வெளியேறி விக்கிரமாதித்தன் தனியானதோர் இடத்தில் வந்து நின்று கொண்டு, அனந்தனை நினைத்தார். அனந்தனும் உடனடியாக விக்கிரமாதித்தன் முன் தோன்றி கை கூப்பி வணங்கிய வண்ணம் நின்றான்.

விக்கிரமாதித்தன் "நாகபுரம் செல்ல வேண்டிய ஒழுங்குகளை செய்" என்று கட்டளையிட்டார். அனந்தன் "அந்த நகரத்தில் பரவியிருக்கும் நச்சுக்காற்று சுவாசிப்பவர் அனைவரையும் கொன்றுவிடும். எனவே அந்த நகரத்தை ஆட்சி புரியும் நாகராஜனுடைய முன் அனுமதி பெறாமல் எவருமே அங்கு செல்ல முடியாது. உடனடியாக அங்கு சென்று உங்கள் வருகை பற்றி நாகராஜனிடம் கூறி, ஏற்பாடு செய்து விட்டு வருகிறேன்" என்று கூறிய அனந்தன் அவ்விடம்விட்டு அகன்றான்.

நாகபுரம் சென்று நாகேந்திர மன்னனைக் கண்ட அனந்தன் "நாகபுரத்து மாமன்னனே உஜ்ஜைனி மாகாளி பட்டிணத்தை ஆட்சி புரியும் விக்கிரமாதித்த மாமன்னன் தங்கள் நகரத்துக்கு வருகிறார். அவரை வரவேற்க தகுந்த ஏற்பாடுகளைச் செய்வீர்களாக" என்று கூறினான்.

இந்தத் தகவலை கேட்ட நாகேந்திரன் "அனந்தா நான் நீண்ட நாட்களாக எதிர்பார்த்த ஒரு நல்ல செய்தியைக் கூறினாய். மன்னாதி மன்னன் விக்கிரமாதித்தனையும் நான் பார்க்க ஆசைப்படுகிறேன். அந்த மாமன்னருடைய வீரதீர செயல்களையெல்லாம் கேள்வியுற்ற எனது மகள் நாகவல்லியும் இத்தகவலைக் கேட்டு பேரானந்தம் அடைவாள். விக்கிரமாதித்த பூபதியினுடைய பராக்கிரம செயல்களையெல்லாம் கேள்வியுற்ற மகள் நாகவல்லி அவர் மீது காதல் கொண்டுள்ளாள். அவர் இங்கு வந்ததும் எனது மகளை அவருக்கு முறைப்படி திருமணம் முடித்து வைப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்யப் போகிறேன்" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறிய நாகேந்திரன், நாகலோகக் காவலர்கள் பலரையும் அனந்தனுடன் அனுப்பி வைத்தார்.

நாகலோகத்தின் நகர வாயிலிலிருந்தே விக்கிரமாதித்த மாமன்னனை வரவேற்று அரண்மனைக்குக் கொண்டு செல்வதற்கு ஏற்ற ஒழுங்குகளையும் செய்வதற்கு உடனடியாக கட்டளைகளையும் பிறப்பித்தார்.

நாகபுரத்தில் நாகேந்திரன் கூறியவற்றை அனந்தன் விக்கிரமாதித்தனிடம் விவரமாகக் கூறினான். விக்கிரமாதித்தனும், அச்சுதவல்லியிடம் "நாகபுரம் செல்ல வேண்டியிருப்பதால் சில நாட்கள் பிரிந்து இருக்க வேண்டியிருக்கும். எனவே நான் சென்று திரும்பும் வரை அமைதியாக இருக்கவேண்டும்" என்று கூறிவிட்டு, அவளுடைய தந்தையிடம் விடை பெற்றுக் கொண்டு அச்சுதபுரத்தின் கடற்கரையோரமாக வந்து சேர்ந்தார். அங்கே விக்கிரமாதித்தனுடைய வருகைக்காக காத்திருந்த நாகலோகக் காவலர்கள் விக்கிரமாதித்தனை மரியாதையுடன் வரவேற்று கடற்கரையில் காத்திருந்த அழகிய வேலைப்பாடுகளுடன் அமைந்த படகில் ஏற்றிக் கொண்டனர். கடல் அலைகளைக் கிழித்துக் கொண்டு அப்படகு கனவேகமாகச் சென்றது. நடுக்கடலில் ஒரு மலைக் குகை தென்பட்டது.

குகை வாயிலை ஒரு பெரிய கல் மூடியிருந்தது. அந்தக் கல்லினருகே படகு போய் நின்றதும் ஒரு பெரிய மின்னல் ஒளி தோன்றியது. குகை வாயிலை மூடியிருந்த அந்தப் பெரிய கற்கதவு இரண்டாகப் பிளந்து படகு உள்ளே செல்வதற்கேற்ற வாயிலை ஏற்படுத்தியது.

# மன்னாதி மன்னன்

69

இதுவரை படகுபோல் மிதந்து வந்து கொண்டிருந்த அந்த மிதவை சக்கரங்கள் பூட்டப் பட்ட வண்டியைப்போல் மாறியது. கனவேகத்தில் அங்கிருந்த ஒரு பாதையினூடாக அவ்வண்டி சென்றது. அந்தப் பாதையின் இரு புறமும் மிக அழகிய தோற்றங்களைக் கண்டு விக்கிரமாதித்தன் இரசித்துக் கொண்ட சென்றார்.

ஒரு பிரமாண்டமான மாளிகையின் முன் புறமாக வண்டி போய் நின்றதும் பலவிதமான வாத்திய ஒலிகள் பலத்த தொனியில் கேட்டன. அங்கு நாகேந்திரன் அழகிய வண்ண மாலையுடன் காத்திருந்தான். விக்கிரமாதித்தன் போய் வண்டியிலிருந்து இறங்கியதும் அவருடைய கழுத்தில் மாலையை அணிவித்த நாகேந்திரன் அவரை வரவேற்று ஆலிங்கனம் செய்து உள்ளே அழைத்துச் சென்றார். பாதையில் இரு புறமும் அழகிய நாக கன்னிகைகள் நின்ற வண்ணம் விக்கிரமாதித்த மன்னனுக்கு பூச் சொரிந்து வரவேற்றனர்.

அரண்மனைக்கு விக்கிரமாதித்தன் போய்ச் சேர்ந்ததும் அவருக்கு வகை வகையான பண்டங்கள் வைத்து உணவு பரிமாறப்பட்டது.

உணவு உட்கொண்டபின் விக்கிரமாதித்தனை அழைத்துக்கொண்டு நாகேந்திரன் ஓர் இருக்கையில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார். தக்க தருணம் பார்த்து தனது மகள் விக்கிரமாதித்தன் மீது கொண்டுள்ள காதலையிட்டு விவரமாகக் கூறிய நாகேந்திரன் திருமணத்துக்கான அபிப்பிராயத்தை விக்கிரமாதித்தனிடம் கேட்டார். அவரும் எதுவிதமான மறுப்பும் சொல்லாமல் திருமணத்துக்கு சம்மதித்தார்.

அடுத்த முகூர்த்தத்தில் மிக விமரிசையாக நாகவல்லிக்கும் விக்கிரமாதித்தனுக்கும் திருமணம் நடந்தேறியது.

மேலும் சில நாட்கள் நாகபுரத்தில் மகிழ்ச்சியாகத் தங்கியிருந்த விக்கிரமாதித்த மாமன்னன், தனது மனைவியுடன் நாகேந்திரனிடம் விடைபெற்றுக்கொண்டு அச்சுதபுரியை நோக்கிப் புறப்பட்டார்.

நாகேந்திரன் தனது மகள் நாகவல்லிக்கும் விக்கிரமாதித்தனுக்கும் ஏராளமான சீர்வரிசைகளையும் ஏனைய பொருட்களையும் காவலர்கள் மூலம் அனுப்பிவைத்தான்.

இருவரும் அச்சுதபுரத்தை அடைந்தனர். அங்கு அச்சுதவல்லியுடனும் நாகவல்லியுடனும் ஆனந்தமாகப் பொழுதைச் செலவிட்டு விட்டு, மதுராபுரிக்கு செல்லவேண்டிய நாள் அண்மித்து விட்டபடியால் விக்கிரமாதித்தன் புறப்பட ஆயத்தமானார். அவருடன் அச்சுதவர்மனுடைய நான்கு புதல்விகளும் நாகேந்திரனின் மகள் நாகவல்லியும் புறப்பட்டு மதுராபுரி நோக்கிச் சென்றார்கள். அவர்கள் அனைவரையும் தவளை உருவத்தில் கடற்கரையில் காத்து நின்ற அனந்தன் ஏற்றிக் கொண்டு மதுரா புரியை நோக்கி விரைந்து சென்றான்.

(மன்னன் வருவான்...)

## இராஜகுமாரன்

# காதில பூ கந்தசாமி

கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.

### சத்தியக் கடதாசி:

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:.............. பெயர்:.................... ஒப்பம்:..................



**நோட்டீஸ்பலகை**

நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

*-காதில பூ கந்தசாமி*

***அபிமான வாசகர் போட்டியில் ஏழாவது: தமிழ் அரசியல்வாதிகளில் புளுகர் மன்னரென்று முடிசூடக்கூடிய புளுகரொருவரையும் அவர் கூறிய அதி பெரும் புளுகையும் எழுதுக. முடிவுத் திகதி ஆகஸ்ட் 31.***

என்னத்தைச் சொல்ல நான்? நாட்டு நடப்பு அப்பிடிக் கிடக்குது. நான் சொல்லக் கூடாததச் சொல்லப்போய் ஏன் வீணா வம்பில மாட்டவேணும். ஹூஹூம், நான் வாய் திறவன். ஏலுமெண்டால் ஒரு முள்ளுக்கறண்டிய விட்டு நெம்பிப்பாருங்கோ, கடைசிவரை பல்லைக் கடிச்சுக்கொண்டு மூடின வாய் மூடினபடிதான் இருப்பனேயல்லாமல் ஒரு சொட்டுத்தன்னும் திறவன். ஏன் திறக்கவேணும்? திறந்த வாய்க்கு யாரேனும் தீனி தரப்போறாங்களே? நானேதேனும் சொல்லப்போய், அது தினமுரசில வந்து, அது உங்களுக்கெல்லாம் தெரிஞ்சுபோய், நீங்கள் சம்பந்தப் பட்டவர நேரடியாக் கேக்காட்டிலும் உங்களுக்க குசுகுசுக்க, அது சம்பந்தப்பட்டவரிண்ட காதில விழுந்து, அவர் என்னைப்போய் வாய்க்கு வந்தபடி திட்டித்தீக்க, அதை நீங்கள் வந்து எனக்குச் சொல்லி என்னை உச்சங் கொப்பில ஏத்த, நானும் விட்டேனோபாரெண்டிட்டு எனக்குத் தெரிஞ்ச உவற்ற வண்டவாளங்களையெல்லாம் தண்டவாளத்தில ஏத்த வெளிக்கிட, அதுகளக் கண்டு நீங்கள் குழம்பியடிக்க, குழம்பின குட்டையில கண்டவனும் மீன்பிடிக்க, ....நாடு கெடும் கண்டியலோ, நாடு கெடும்! கெட்ட கேட்டிண்ட எல்லாப் பழியும் என்ர தலையிலதான் வந்து விழும்! எனக்கேன் வம்பு?

அதால கண்டியலோ, நான் ஒரு சொல்லும் சொல்லப் போறதில்லை. செய்தியள நீங்களா அறிஞ்சு கொள்ளுங்கோ. அதெப்பிடியெண்டுமட்டும் என்னக் கேளாதேங்கோ. எப்பிடியோ அறிஞ்சுகொள்ளுங்கோ. நான் சொல்லியே எல்லாம் தெரியுது? இல்லை கேக்கிறன். நான் சொல்லாமல் எத்தின புதினம் அறியிறியல்.

இப்ப, உந்த யு.பி. மகேசன், எம்.பி.யெண்டு சொல்லி யாழ்ப்பாணத்துக்கு மணிக்கூடு கடத்த வெளிக்கிட்டு ரட்மலான எயார்ப்போட்டில பிடிபட்ட கதை நான் சொல்லியோ உங்களுக்குத் தெரியுமெண்டு கேக்கிறன். நான் சொல்லாமலே பேப்பரில வந்ததெல்லோ சேதி? அதப்போலத் தானா வரும் புதினம். நானாச் சொல்லமாட்டன் இனி. யு.பி. மணிக்கூட்டக் கடத்தினாலென்ன, மண்ணெண்ணை கடத்தினாலென்ன, கொக்கோ கோலாப் போத்துலுக்க ஒயில் விட்டுக் கடத்தினாலென்ன, எனக்கென்ன? யு.பி.யத்தன்னும் யாராவது முழுசாக் கடத்தினாலும் நான் கதையன்.

அதால கண்டியலோ தயவு செய்து சொல்லிப்போட்டன் இந்தவாரம் யு.பி என்ன கடத்தினார், போனவாரம் என்ன கடத்தினாரெண்டு உந்த ஸ்ரொக் மார்க்கெட் நிலவரம் அறிய என்னப்போட்டுக் குடையாதேங்கோ சொல்லிப்போட்டன். அண்டைக்கு உப்பிடித்தான் ஏதோ கதையோட கதையா ஆள் சைக்கிள் போல்ஸ் கடத்துற கதையச் சொல்லிவிட ஸ்ரொக் மார்க்கெட்டில சைக்கிள் விலை ஒரேயடியாக் கூடிப்போச்சு. நா காக்காட்டால் நாட்டுக்கு நல்லதில்லப் பாருங்கோ.

நான் எதுக்குச் சொல்லிறனெண்டால் என்னதான் நீங்கள் யு.பி. எண்டாலும் யு.என்.பி. எண்டாலும், ஆளுக்கு ஒரு எம்.பிக்குண்டான மதிப்பக் குடுக்கத்தானே வேணும்? எங்களுக்கு என்னத்தைச் செய்தாரெண்டு அவரைப்போய் நோகாதேங்கோ வீணா. உப்பிடிக் கேட்டால் என்னெண்டு சொல்லேலும் அவரால? அவர் செய்ததுகள் நிறைய, ஆனால் அதுகள வெளியால சொல்ல ஏலுமே? சொல்லக்கூடின சங்கதிகளே அது? அதுகள நீங்களாத் தேடிக் கண்டுபிடியுங்கோவன், உந்த யாழ். மீனவர்கள் கொழும்புக்குப் போய் அவற்ற கப்பலைக் கண்டு பிடிச்சிட்டு வந்தமாதிரி. ஏன் என்னைப்போய்த் தொந்தரவு செய்யிறியள்?

இங்க பாருங்கோ, ஒரு விசயத்தத்தன்னும் நீங்கள் மெச்ச வேணும் அவரில. அவர் செய்ததுகள வெளியால சொல்ல ஏலாட்டாலும், செய்யாததுகள நிறையச் சொல்லியிருக்கிறார்தானே! உதத்தான் கண்டியலோ, தானாடாட்டாலும் தசையாடுமெண்டுறது. தான் செய்யாட்டாலும் மற்றவங்கள் செய்யிறதையும் தானே செய்ததா நினைக்கிற பண்புகண்டியலோ ஒரு உயர்ந்த பண்பு. எங்கேனும் யாராவது சனத்துக்கு ஒரு நல்லகாரியத்தைச் செய்தாலென்ன, செய்யப் போறதா மணந்தால்கூட உடன அதைத் தானே செய்ததா நினைச்சு, உங்களையும் அப்பிடியே நினைக்கச்சொல்லிக் கேட்டு இம்மீடியட்டா அறிக்கை விட்டுடுறாரோ இல்லையோ? அந்த நல்ல குணத்த மெச்சவேணுமெண்டுறன் நான். ஏன் கனக்கக் கதைப்பான்? உந்த யாழ். பல்கலைக் கழகத்தை மூடமுன்னமே, அதைத் திறக்க வேணுமெண்டு அறிக்கை விடுற தீர்க்க தரிசனத்தோட சேர்ந்த அட்வான்ஸ் வேகம் ஆருக்கு வருமெண்டு கேக்கிறன்? இப்ப பல்கலைக் கழகத்தைத் திறந்தாச்சுது. எப்பயெண்டாலும் திறக்கத்தான் வேண்டிவருமெண்டாலும் அன்னார் சொல்லித்தான் பல்கலைக் கழகத்தைத் திறந்தாங்களெண்டது இப்ப எப்போதோ எழுதப்பட்ட விதியாயிட்டுதோ இல்லையோ? பிறகேன் பேச்சு? பேசாமல் கிடவுங்களன்.


நீங்கள் என்னத்தச் சொன்னாலும் சொல்லுங்கோ, அவருக்கெண்டொரு பத்திரிகை யாழ்ப்பாணத்து உச்சி வெய்யிலில தலைகீழா நிண்டாவது, தன்ர மதிப்பக் கெடுத்தாவது அவற்றை மதிப்பை உயர்திறனெண்டு கங்கணம் கட்டிக்கொண்டுதான் நிக்குது. அவர் கொட்டாவி விட்டாலும் கொட்டையெழுத்தில போடத்தான் போகுது. தேர்தல் வரட்டும் பாருங்களன். குளத்துத் தேரை கத்தின கணக்கா பேப்பர் முழுக்க அவற்ற பெயர்தான் பெரிசா இருக்கும். நான் என்னத்துக்கு வாய் திறப்பான்? ஐ வோண்ட் ட்டோக். த ட்ருத் வீல் ட்டோக் தெம் செல்ப்ஃஸ்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**




# வெற்றிப் பொருட்கள்




ஹொலிவூட் திரைப்பட நிறுவனமான 'வார்னர் பிரதர்ஸ்', 'பாட்மான்' (Bat Man வெளவால் மனிதன்) என்றொரு திரைப்படத்தை 1984ம் ஆண்டு வெளியிட்டது. உலகெங்கும் அமோகமான வருவாயைப் பெற்றுக் கொடுத்தது. இதனால் அந்தப் பெயருக்கு தனி கிராக்கி ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து அமெரிக்காவிலுள்ள வர்த்தக நிறுவனங்களுக்கும் ஏராளமான உற்பத்தி பொருட்களுக்கும் 'பாட்மான்' என்று பெயர் சூட்டப்பட்டது. இவ்வாறு இந்தப் பெயரை உற்பத்தி பொருட்களுக்கு வர்த்தகப் பெயராக பதிவு செய்ததில் அமெரிக்க அரசாங்கத்துக்கு பெருந்தொகையான வருவாய் கிடைத்தது.

## பெறுமதி



'ஜூக்பொக்ஸ்' (Juke Box) எனப்படுவது இசைத் தட்டுக்களை அடுக்கி வைத்து அவற்றுக்கு இலக்கங்கள் கொடுக்கப்பட்டு ஒவ்வொரு இலக்கத்துக்கும் குறிப்பிட்ட ஒரு பாடலின் தலைப்பு எழுதப்பட்டு பிரபலமான கடைகளில் காட்சிப் பொருள் போல் வைக்கப்பட்டிருக்கும் ஒரு பெட்டி. ஒரு குறிப்பிட்ட தொகையை அந்தப் பெட்டியிலுள்ள ஒரு துளையில் செலுத்தி விட்டு விரும்பிய பாடலின் இலக்கத்தைக் கொண்ட பொத்தானை அழுத்தினால் உடனே அந்தப் பாடல் ஒலிக்கும்.

இந்தப் பொறியை 1933ம் ஆண்டுதான் முதல் முதலில் வடிவமைத்தார்கள். (படத்தில் காணப்படுவது)

அமெரிக்காவிலுள்ள வேல்ட்ஸடா திருவனம் உருவாக்கிய இந்த ஜூக்பொக்ஸ் ஜோர்ஜியா மாநிலத்திலுள்ள கம்மிங் நகரில் 1997 ஜூன் 27ம் திகதியன்று ஏல விற்பனையில் 49,903 டாலருக்கு விற்கப்பட்டது.




செங்குத்தான மலையின் உச்சியிலிருந்து தரைவரை தொங்கும் ஒரு கயிற்றைப் பிடித்தவண்ணம் இறங்குவது சில இடங்களில் போட்டியாக நடைபெறுகிறது. இராணுவத்தைச் சேர்ந்தவர்களும், மலைமீது ஏறுபவர்களைப் பாதுகாப்பதற்காகவும் சிலர் இதை ஒரு பயிற்சியாகக் கடைபிடித்து வருகின்றனர். பிரித்தானிய இராணுவத்தின் ரோயல் மரைன்ஸ் பிரிவினர் 1105.5 மீட்டர் உயரத்தை ஒரே தடவையில் கீழிறங்கி சாதனைப் படைத்தனர். 1993 நவம்பர் 2ம் திகதி இது இடம் பெற்றது.

மதுபானம் சேமித்து வைக்கும் பீப்பாக்களை வேகமாக உருட்டிக் கொண்டு ஓடுவது பல நகரங்களில் ஒரு விளையாட்டாக நடத்தப்பட்டு வருகிறது. போலந்தைச் சேர்ந்த டெக்லா விளையாட்டுக் கழகத்தின் பத்துப் பேர் கொண்ட குழுவினர் 1995ம் ஆண்டு செப்டெம்பர் முதலாம் திகதியும், இரண்டாம் திகதியும் 63.5கிலோ கிராம் எடையுள்ள ஒரு பீப்பாவை 200.11 கிலோ மீட்டர்வரை இடைவிடாமல் உருட்டிச் சென்று சாதனைப் படைத்தனர்.

சாதனையாளர்கள் ஒருவர் மாறி மற்றொருவர் பீப்பாவை உருட்டிக் கொண்டு ஓடுவதையே படத்தில் பார்க்கிறீர்கள்.

## ஓட்டம்



## 1வது பிறந்தநாள் வாழ்த்து 07.08.2001

### செல்வி ஜெனுகா (யானு)



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ... தம்பதிகளின் செல்வப் புதல்வி ஜெனுகா (யானு) தனது முதலாவது பிறந்த நாளை 07.08.2001 அன்று France இல் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பம்மா, அப்பப்பா, தொட்டப்பா, தொட்டம்மா மற்றும் பெரியம்மாமார், பெரியப்பாமார், ... Nepomuc ... வாழ்த்துகிறார்கள்.

தகவல்: ..., ..., வீதி, ...கொழும்பு.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து

02.08.2001



### செல்வி சுஸ்நிதா

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ... தம்பதிகளின் அன்பு மகள் ... 02.08.2001 ... ஜெர்மனியில் ... Bissingen ... 04.08.2001 ... (France), ... (Germany), ... (Norway), ... (France), ... (Germany) ... வாழ்த்துகிறார்கள்.

Srikaran Sunatha, Bahnhof Str 124, 74321 Bietigheim-Bissingen, Germany

தொலைபேசி: (0049) 7142 982546, (0049) 172 7342726, (0049) 173 1715098



... கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டீ.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரளகமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் ஆக.05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.